பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 12 திங்கட்கிழமை (28.09.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 306

# நாடுகளின் உள் விவகாரங்களில் ஐ.நா. தலையீடு செய்யக்கூடாது

## ஐ.நா. பொதுச்சபையில் பிரதமர் ரட்ணசிறி காட்டம்



கொழும்பு,செப்ரெம்பர் 28

**உலக நாடுகளின் உள்விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் தலையிடக் கூடாது என தீவிர வேண்டுகோளொன்றை விடுத்துள்ள இலங்கைப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, பாதுகாப்புச் சபையையும்,ஐ.நாவையும் சீர் திருத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.**

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கூட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உரை யாற்றுகையில் பிரதமர் இதனைத் தெரிவித்தார். விடுதலைப் புலிகளின் சர்வதேச பிரதிநிதிகள் மற்றும் அந்த அமைப்பின் முன்னணி அமைப்புகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படியும் பிரதமர் தமது உரையில் வேண்டுகோள் விடுத்தார்.

பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதில் இலங்கை வெற்றி கண்டுள்ளது.விடுதலைப் புலிகள் பிறநாட்டு மண்ணில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து உலக நாடுகள் விழிப்புடனிருந்து, நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் - பிரதமர் கோரியுள்ளார்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான வரலாறு-II, விஞ்ஞானம் -I பாடங்களுக் கான மாதிரி வினாத்தாள்கள்.

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான தமிழ் மொழியும் இலக்கியமும்-I,II,III, விஞ்ஞானம் -II பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## இராணுவத்துக்கு 6 மாதங்களில் 22,175 பேர் புதிதாக இணைப்பு

கொழும்பு, செப். 28

கடந்த ஆறு மாதங்களில் இராணுவத் துக்குப் புதிதாக 22 ஆயிரத்து 175 இளைஞர்,

(20 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் ஆள்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சை இன்று; 400 பெண்கள் உட்பட 6,500 பேர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், செப்.28

பொலிஸ் சேவைக்கு ஆள்களை தெரிவு செய்யும் நேர்முகப்பரீட்சை இன்று யாழ்ப் பாணத்தில் ஆரம்பமாகிறது. பொலிஸ் சேவை நேர்முக பரீட்சைக்குத் தோற்ற 400

(20 ஆம் பக்கம் பார்க்க)

## தீவுப் பகுதியைச் சேர்ந்த 3,000 பேர் இதுவரை வன்னியில் இருந்து கூட்டிவரப்பட்டு மீளக்குடியமர்வு

### இன்று 800 பேர் வருகின்றனர்

யாழ்ப்பாணம், செப். 28

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கி யுள்ளவர்களில் தீவுப்பகுதியை வதிவிட மாகக் கொண்ட மொத்தம் ஆறாயிரம்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## முகாம் மக்களை உறவினர்களுடன் தங்க வைக்க மீண்டும் நடவடிக்கை

### வவுனியா அரச அதிபர் தகவல்

கொழும்பு, செப். 28

அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட் டுள்ள மக்களை அவர்களது உறவினர்க ளிடம் ஒப்படைக்கும் நடவடிக்கைகள் மீண்டும் விரைவில் ஆரம்பிக்கப்படும் - என்று வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தமது கடற்படையைப் பலப்படுத்துவதற்கு உக்ரைன் நிபுணர்களை வன்னிக்கு அழைத்து வந்தனர்

### பாதுகாப்புத் தரப்புச் சொல்கிறது

கொழும்பு.செப்.28

விடுதலைப்புலிகள் தமது கடல் புலி கள் பிரிவை பலப்படுத்துவதற்காக உக்ரைன் நாட்டு நிபுணர்களை வன்னிக்கு அழைத் திருந்தனர் என்ற தகவல்கள் கிடைத்துள்ளன என்று பாதுகாப்புத் தரப்பு தெரிவித்துள்ளது.

2002-2004 சமாதானக் காலத்தில் உக் ரைன் நாட்டு நிபுணர்கள் வன்னிக்கு வந்து கடற்புலிகளுக்கு பயிற்சி அளித்துள்ளார் கள் என்று பாதுகாப்புதரப்புத் தெரிவித்துள்ளது.

தற்சமயம் தடுத்துவைத்து விசாரணை செய்யப்படும் விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவரான கே.பி எனப்படும் குமரன் பத்மநாதன் இந்த நிபுணர்கள் வருகை விடயத்தில் சம்பந்தப்பட்டிருப்ப

(20 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதி எங்கே? புலிகளிடம் இருந்து மீட்கப்பட்ட தங்கம் எவ்வளவு?

### அரசிடம் கேள்விக் கணைகளைத் தொடுக்கிறார் ரணில்



கொழும்பு, செப். 28

தற்போது யுத்தம் முடிவடைந்துள்ளதால், ஏற்கனவே பாதுகாப்பு செலவீனத்திற்காக ஒதுக் கப்பட்ட நிதிக்கு என்ன நடந்தது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட மற்றும் திறைசேரியில் உள்ள தங்கத்தின் அளவைத் தெரிவிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

கொழும்பு விகாரமஹாதேவி பூங்கா திறந்த வெளியரங்கில் நேற்று நடை பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 'மக்கள் சக்தி'கூட்டத்தில் கலந்துகொண்டு உரை யாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியவை வருமாறு:-

தற்போது யுத்தம் முடிந்து 4 மாதங்கள் கடந்துவிட்டன. யுத்தச் செலவு குறைந்து

(20 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் முன்னாள் உறுப்பினர்களை எவ்வாறு கையாள்வது என்பதனைக் கண்டறிவதில் அரசாங்கம் மும்முரம்

### அமெரிக்கா செல்கிறார் சட்டமா அதிபர்

கொழும்பு, செப். 28

விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களை எவ்வாறு கையாள்வது? எந்தெந்த வகைகளில் அவர் கள் மீது சட்ட நடவடிக்கை அல்லது புனர் வாழ்வு நட வடிக்கைகளை என்னென்ன வகைக ளில் மேற்கொள்ளவது?

இந்த விவரங்களைக் கண்டறிவதில் அரசாங்கம் இப்போது மும்முரமாக ஈடு பட்டுள்ளது.


இதன் முதற்கட்டமாக சட்டமா அதிபர்

(20 ஆம் பக்கம் பார்க்க)




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வாணிவிழா நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன. நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் கல்லூரி அதிபர் மங்கள விளக்கேற்றுவதையும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமெரிக்க ஹவாய் ஆதீன முதல்வர் தொண்டுநாத சுவாமிகள் அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: எஸ்.கதிரவேலு)*

# உடுவில் மகளிர் கல்லூரி பிரச்சினை; முக்கிய முடிவு இன்று அறிவிக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தகவல்

யாழ்ப்பாணம், செப்.28

உடுவில் மகளிர் கல்லூரியின் பிரச்சினை தொடர்பான தீர்வை இன்று காலை 8மணிக்கு மாணவிகள், பெற்றோர் மத்தியில் முன் வைப்பதாக சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் மாற்றம் செய்யப்பட் டமை தொடர்பாக அங்கு இடம்பெற்றுவரும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நோக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்டார். பெற்றோர், மாணவர் களின் அழைப்பின் பேரில் அங்கு சென்ற அமைச்சர் காலை 9.15 மணியளவில் கலந்துரையாடல் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தார்.

இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு: -

இப்பிரச்சினை தொடர்பாகப் பல்வேறு மட்டத்தில் உள்ளவர்களும் எனக்கு கருத்துத் தெரிவித்திருந்தனர். மாணவர்களும், பெற்றோர்களும் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே இப்பிரச்சினையில் தலையிட முன்வந்துள்ளேன். முதல் முறையாக இப்பாடசாலையின் மாணவர்களையும், பெற்றோர்களையும் சந்தித்தபோது ஓரிரு நாள்களில் முடிவை தெரிவிப்பதாக கூறியிருந்தேன். ஆயினும், மாணவர்களும், பெற்றோரும் அதிபரை மீள பணியில் அமர்த்த வேண்டும் என்ற கோரிக்கையில் எவ்வளவு துணிவுடனும், உறுதியுடனும் இருக்கின்றனர் என்பதை மதிப்பிடவும், சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் எவ்வளவு கரிசனை எடுத்தனர் என்பதை அவதானிக்கவும் தான் சிறிது காலம் பொறுத்திருந்தேன்.

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் என்ற ஒழுங்கு முறையின் பிரகாரம்தான் இப்பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுகிறேன். எந்தத் தரப்பும் மறுதரப்பை நசுக்க இடமளியாது நியாயமான தீர்வொன்றை பெற்றுத்தருவதே எனது நிலைப்பாடு. எனினும் திருச்சபை உட்பட சம்பந்தப்பட்ட தரப்புகளின் இணக்கதின் ஊடாக ஒரு தீர்வினைப் பெறவே நான் விரும்புகின்றேன் - என்றார்.

இந்தக் கலந்துரையாடலின்போது அமைச்சர் அமர்ந்திருந்த மேடைக்கு முன்பாக மாணவிகள் முழந்தாளில் அமர்ந்திருந்தவாறு பழைய அதிபரைமீளப் பணியில் அமர்த்த வேண்டுமென்றுகோஷமும் எழுப்பினர். இந் நிகழ்வில் வலிகாமம் வலயகல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் கலந்து கொண்டார். (203-38)


## தேவை

கொழும்பில் உள்ள பங்களாவில் நிரந்தரமாக தங்கியிருந்து வீட்டுவேலை செய்வதற்கு 40 வயதிற்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு- 45/1,மாதம்பிட்டிய வீதி,
கொழும்பு - 15
T.P : 2523127, 2520619


# வண்ணை பெருமாள் ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், செப். 28

வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது.

காலை 8 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று முற்பகல் 10 மணிக்கு தேரில் பெருமாள் ஆரோகணிப்பார்.

பிற்பகல் 3 மணிக்கு விஜயதசமி மானம்பூ உற்சவம் இடம்பெறும்.

நாளை காலை 9.30 மணிக்கு தீர்த்த உற்சவம் நடைபெறும். (1)

(சிறப்புமலர் 10ஆம், 11 ஆம் பக்கங்களில்)

# சிறுவர் அரங்கப் போட்டிகள்

யாழ்ப்பாணம், செப். 28

தீவக வலயப் பாடசாலைகளுக்கான வலய மட்ட சிறுவர் அரங்கப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கலூரியில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் கோட்டமட்டத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளை உரிய விதிமுறைகளுக்கு அமைய கலந்து கொள்ளுமாறு தீவக வலய கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6-267)

# தேவார பண்ணிசை வகுப்பு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.28

அகில இலங்கை திருமுறைமன்றத்தினர் விஜயதசமி தினமான இன்று பிற்பகல் 4.30 மணிக்கு தேவார பண்ணிசைப் பயிற்சி வகுப்பையும் சிவ ஞான சித்தியார் வகுப்பையும் ஆரம்பிக்கவிருக்கின்றனர்.

சிவதொண்ட நிலைய நூலகமேல் மாடியில் இந்த வகுப்புக்கள் ஆரம்பமாகி தொடர்ந்து சனி, ஞாயிறு தினங்களில் இடம் பெறும்.

ஆர்வமுள்ளோரையும், சிறுவர்கள், பெரியவர்கள், மாணவர்கள் ஆகியோரையும் வகுப்பில் கலந்து கொள்ளுமாறு கேட்க்கப்பட்டுள்ளது. (1)

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி கெங்காதரன் (ஆச்சாரி) வசந்தமல்லிகா

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்
கெங்கா ஐயாவுக்கு நல்லதோர் மனைவியாய்! அம்மாவுமாய்!
பிள்ளைகளுக்கு பாசமிகு அம்மாவாய்!
பேரப்பிள்ளைகளுக்கு செல்லம் பொழியும் பாட்டியாய்!
மருமக்களுக்கு மரியாதைக்குரிய மாமியாராய்!
வந்தோரை வரவேற்கும் தமிழர்தம் பண்பாட்டின் சிகரமாய்!

அனைத்தும் நிறைவாக பெற்று பெருவாழ்வு வாழ்ந்து, இறைபதம் அடைந்த பாசமிகு அம்மாவுக்கு, எங்கள் குடும்பத்தினர், வெளிநாட்டில் வாழும் சகோதர குடும்பத்தினர், மற்றும் எமது Abstract கணனி நிறுவனத்தினதும் கண்ணீர் அஞ்சலிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

யேசுதாசன் அருள்சாந்தி - பணிப்பாளர்
(Abstract Computer Center)
Abstract கணனி நிறுவனம் வெள்ளவத்தை.
தொலைபேசி எண் -0771757100


விஜயதசமியை முன்னிட்டு கணனி கற்கை நெறிகளுக்கான **புதிய பிரிவுகள் ஆரம்பம்**

- Diploma in Microsoft Office 2007
- Adv. Dip. in Hardware & Networking
- Dip in Computerized Accounting
- Dip. in Pre-Press Desktop Publishing
- AutoCAD
- Internet and E-mail

சிறார்களுக்கான JUNIOR DIPLOMA கற்கை நெறிகள்

இலவச பாடநூல் மற்றும் இலகு தவணைக் கட்டணவசதி.
முழுமையானதும் நிரமானதுமான கணனி கல்விக்கு



நவீன தொழிநுட்பங்கள், Advanced Video Editing மென்பொருட்களையும் உள்ளடக்கிய

**Dip. in Video Editing & Multimedia**

Adobe Premiere Pro CS3, Particleillusion, Pinnacle Studio, COOL 3D Studio, Adobe After Effects, Nuendo,

Duration 1 Month

Tally Accounting

100%

ஆரம்பம். 28/9/2009, 3[illegible]09, 3/10/2009 @ 10.00 a.m,

**DMI COMPUTER EDUCATION**

NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel: 021-222 4403


# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா சிவராசா (பிரபல பாரவூர்தி உரிமையாளர்,யாழ்)

நாகம்மாள் கோவில் வீதி, உடுவில், சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சிவராசா நேற்று (27.09.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், ராஜநிதி (ஜேர்மனி), ராஜதீபன் (லண்டன்), ராஜ்நிபன், சிவராஜ்நிதி ஆகியோரின் அன்புத் தந்தையும், லங்கராஜா (ஜேர்மனி), சிந்து (லண்டன்), ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2009) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகம்மாள் கோவில் வீதி,*
*உடுவில், சுன்னாகம்.*
*(89301)*
தகவல்: குடும்பத்தினர்
(கசின் - பெறாமகன்).

## திருமதி கெங்காதரன் ஆச்சாரி வசந்தமல்லிகா



கண்டியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கெங்காதரன் வசந்தமல்லிகா 26.09.2009 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் ஆச்சாரி - லெட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான லெட்சுமண ஆச்சாரி - முல்லையம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், கெங்காதரன் ஆச்சாரியின் அன்பு மனைவியும், ருக்குமணியின் அன்புச் சகோதரியும், சிவலிங்கம், அமரர் கணேசலிங்கம், சித்திராதேவி, சத்தியலிங்கம் (வவுனியா), சண்முகலிங்கம் (அப்புக்குட்டி, லிங்கம் உலோகத்தொழிலகம்), விஜய் (சின்னவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜிதகலா, லதா, சுதாகர் (பகரின்), சிவகௌரி, மணிமேகலா, நிமல்டா ஆகியோரின் அன்பு மாமியாரும், அன்னலட்சுமி(கனடா), பக்கீர்சாமி (கனடா), அமரர் வேணுகோபால், அம்புஜம், கமலவல்லி (கொழும்பு), இராஜேஸ்வரி, ஜெகநாதன் (கொழும்பு), மகேஸ்வரி (ஜேர்மனி), நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், அமரர் சின்னத்துரை (தலையாழி), அமரர் இராஜமணி (கனடா), அமரர் துரைசாமி, இராமையா (கொழும்பு), கந்தையா, தனலட்சுமி (கொழும்பு), கணபதிப்பிள்ளை (ஜேர்மனி) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், கோபிநாத், கோலத்துளசி, கஜன், நிதுசன், சஜீவன், விதுஷன், தர்சினி, நிகேதினி, பிரசாத், பிரவீனா, பிரியங்கா, சிந்து, தேவசுகன்ஜா, சிந்துஜா, செந்தூரன், அபிஷேக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.09.2009) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*314, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பேசி 0212228415*
தகவல்:
கலாபூஷணம் லெ.கெங்காதரன் ஆச்சாரி
(கணவர்).

# மரண அறிவித்தல்

## சுப்பையா நாகராஜா

### (ஓய்வுபெற்ற எழுதுநர், சிமெந்துக்கூட்டுத்தாபனம், K.K.S.)



மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா நாகராஜா 24.09.2009 இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பொன்னம்மா தம்பதிகளின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி- யோகம்மா தம்பதிகளின் மருமகனும் தனலட்சுமி (பவானி - உப அதிபர், யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்)யின் அன்புக் கணவரும் கார்த்திகா (ஆசிரியை, யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), யோகரஜீவ் (கனடா), காஞ்சீவன் (தொழில்நுட்பக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கனகசுந்தரம், காலஞ்சென்ற பாலசுந்தரம், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் மகேஸ்வரி, புவனேஸ்வரி, இரட்னேஸ்வரி (லண்டன்), ஞானேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கிருஸ்ண வேணி (கனடா), கமலினி (கனடா), கலாயினி (கனடா), காலஞ் சென்ற சாந்தகுமாரி மற்றும் உதயகுமார் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*484, கண்டி வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*
T.P: 0212218565.
(89267)
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இந்திய எம்.பிக்கள் குழுவினரின் உத்தேச வருகையால் பயன் உண்டா?

இலங்கைத் தமிழர்களின் நிலைமையை நேரில் கண்டறிய இந்தியக் குழுவை இலங்கைக்கு அனுப்புவது குறித்து இந்திய அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகின்றது.

இந்திய நாடாளுமன்றக் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பி நிலைமையை நேரில் கண்டறிவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்துள்ளார் என்றும், இதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன என்றும் இந்திய ஆளும் காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஜெயந்தி நடராஜன் கூறியிருக்கின்றார்.

தமிழகத்தின் ஆளும் தி.மு.கழகம் மற்றும் மத்தியில் ஆட்சியிலிருக்கும் காங்கிரஸ் கட்சி ஆகியவற்றின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் சமீபத்தில் புதுடில்லியில் பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஆகியோரைச் சந்தித்தனர்.

அச்சமயமே இலங்கை நிலைமையை நேரில் கண்டறிய இந்திய நாடாளுமன்றக் குழுவை இலங்கைக்கு அனுப்பவேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதற்கான - இந்திய நாடாளுமன்றக் குழுவின் இலங்கை விஜயத்துக்கான - ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டால், அதனை ஈழத் தமிழர் விடயத்தில் கலைஞர் கருணாநிதியும், அவரது தி.மு.கவும், இந்தியாவின் ஆளும் காங்கிரஸ் கட்சியும் கூட்டாக எடுத்த முயற்சியின் பெருவெற்றியாகக் காட்டி, தமிழக மக்களின் காதுகளில் மீண்டும் ஒரு தடவை பெரிய பூமாலையாகச் சுற்றும் வேலை கனகச்சிதமாக ஒப்பேறும் என எதிர்பார்க்கலாம்.

இத்தகைய நாடாளுமன்றக் குழுவை அனுப்பும் முயற்சி வெறும் கண்துடைப்பு நாடகமே என்பதை ம.தி.மு.கவின் பொதுச் செயலாளர் வைகோ ஏற்கனவே வெளிப்படையாகத் தெரிவித்துவிட்டார் என்பதும் கவனிக்கத்தக்கது.

இலங்கைத் தமிழர் விவகாரத்தை ஒட்டி தமிழக மற்றும் இந்திய மக்களுக்கும் சர்வதேசத் தமிழர்களுக்கும் காதில் பூச் சுற்றும் இத்தகைய முன்முயற்சி ஒன்று ஏற்கனவே கொழும்பால் ஆரம்பிக்கப்பட்டது என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

இலங்கைத் தமிழர்களின் நிலைமைகளைக் கண்டறிவதற்காக இலங்கைக்கு நேரில் விஜயம் செய்யுங்கள் என்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கும், தமிழக எதிர்க்கட்சித் தலைவி ஜெயலலிதாவுக்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பகிரங்கமாக விடுத்த அழைப்பு இன்னும் நிலுவையிலேயே உள்ளது.

எனவே, இப்போது இந்திய நாடாளுமன்றக் குழு ஒன்று இலங்கைக்கு வருவது என்பது புதிதாகப் பெரிய முயற்சி எடுத்து, நடவடிக்கை மேற்கொண்டு, பிரயத்தனப்பட்டு செய்யவேண்டிய பணியே அல்ல.

இன்றைய நிலையில் இந்திய அரசியல் அணி ஒன்றைக் கொழும்புக்கு அழைத்து, உபசரித்து, அந்த உபசாரம் மூலம் மயக்கிக் கைக்குள்போட வாய்ப்பு ஒன்று கிடைக்குமானால் அதைக் கனகச்சிதமாகப் பயன்படுத்தக் கொழும்பும் பின்நிற்காது என்பது தெளிவு.

எனவே, இத்தகைய இந்திய நாடாளுமன்றக் குழு இலங்கைக்கு வந்து என்ன சாதிக்கும் என்பதே இன்றைய கேள்வியாகும்.

உத்தேசக் குழுவினர் இலங்கைக்கு வந்து நேரடியாக வன்னிக்குச் சென்று அங்குள்ள அகதிமுகாம் மக்களை - நலன்புரி மையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவிகளை - தனிமையில் சந்தித்துக் கலந்துரையாட அனுமதிக்கப்படுவார்களா? அல்லது ஐ.நா. அதிகாரிகள் முதல் வெளிநாட்டுத் தூதுக்குழுவினர், இராஜதந்திரிகள் போன்றோர் வரை அனைத்து சர்வதேசத் தரப்பினரும் அழைத்துச் செல்லப்படும் அதே மார்க்கத்தில் - வழிமுறையில் - தெரிவு செய்யப்பட்ட அகதி முகாம்களுக்கு மட்டும் - சொற்ப வேளைக்கு - வழிகாட்டுதல் சுற்றுலாவில் அழைத்துச் செல்லப்படும் வழமையான திருவிளையாடலாக மட்டுமே அதுவும் அமையுமா? - என்பவையெல்லாம் இனித்தான் தெரியவரும்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த அப்பாவி மக்களின் சட்டரீதியான நாடாளுமன்றப் பிரதிநிதிகளையே அந்த மக்களைச் சென்று சந்திக்கவிடாமல் தடுத்துவருகிறது கொழும்பு என்பது வெளிப்படையான விடயம்.

அப்படியிருக்கையில், இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அவர்களைச் சென்று சந்தித்து, உண்மைகளைக் கண்டறிந்து, பெரிதாக ஏதும் சாதித்துவிடும் என்று எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் அடிக்கடி இந்த அகதிகளின் முகாம் பக்கம் தலைகாட்டுகின்றார். கொழும்பு நிர்வாகத்தின் மிக விருப்புக்குரிய இராஜதந்தரியான அலோக் பிரசாத், கண்டுபிடிக்காத புது விடயங்களை இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் குழு கண்டுபிடித்து விடும் என்று எதிர்பார்ப்பதும் அர்த்தமற்றதே.

என்றாலும் அத்தகைய குழு ஒன்று - அதுவும் தமிழில் உரையாடத்தக்க எம்.பிக்களைக் கொண்ட இந்தியக் குழு ஒன்று - வன்னி சென்று, அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழ் மக்களைத் தனிமையில் சந்தித்து, மனம்விட்டு உரையாடினாலாவது, புதுடில்லியினதும், சென்னையினதும் அதிகார வர்க்கங்களின் கண்களைத் திறக்கவைக்கும் வாய்ப்பு ஏதும் ஏற்படாதா என்ற நப்பாசையும் தமிழருக்கு இல்லாமல் இல்லை என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

# காங்கிரஸ் சபைக்கான ராஜாங்க அமைச்சின் அறிக்கை நான்கு வாரங்கள் பின்போடப்பட்டுள்ளது

**நேற்று (27.09.2009) 'சன்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வெளிவந்த அரசியல் விமர்சனக் கட்டுரையின் ஒரு பகுதி இது**

கடந்த திங்கட்கிழமை அமெரிக்க நாடாளுமன்றமான காங்கிரஸ் சபையில் அந்நாட்டின் ராஜாங்க அமைச்சினால் இலங்கையில் நடைபெற்று முடிந்துள்ள போரின் இறுதிக் கட்டங்களில் இழைக்கப்பட்டதான மனித உரிமை மீறல்கள் தொடர்பான அறிக்கையொன்று தாக்கல் செய்யப்படுவதாக இருந்தது. திங்கட்கிழமை மாலையில் ராஜாங்க அமைச்சின் வட்டாரங்களில் இருந்து வெளியான செய்திகளின்படி ''காங்கிரஸ் சபையின் பணிப்புக்கமைவாக ராஜாங்க அமைச்சு அறிக்கையொன்றைத் தயாரித்து வருகின்றது. இலங்கைப் போரின் இறுதிக் கட்டங்களில் இருதரப்பினராலும் நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பான விடயங்களை இந்த அறிக்கை உள்ளடக்கியதாகவிருக்கும். சாத்தியமான அளவில் தரப்புகளுக்குப் பொறுப்புகளை குறித்து ஒதுக்கிச் சுட்டிக்காட்டுவது கஷ்டமான விடயம்தான் என்றாலும் பல்வேறு மட்டங்களிலிருந்தும் அதிகமான தகவல்களை எம்மால் சேகரிக்க முடிந்துள்ளது'' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

''இன்று (கடந்த திங்கட்கிழமை) அவ்வறிக்கை தாக்கல் செய்யப்படவிருந்தது. ஆனால் இப்போது இன்னும் நான்கு கிழமைகள் தாமதமாகும் என்று தெரிகிறது'' இவ்வாறு ராஜாங்க அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில் ''தாமதத்துக்கு அரசியல்மட்டத் தீர்மானமா அல்லது வேறு ஏதும் காரணம் உண்டா என்று தெரியவில்லை'' எனத் தெரிவித்துள்ளனர்.

## கோத்தபாயவின் அமெரிக்க விஜயத்தின் பலன்

**இலங்கை அரசை சீற்றங்கொள்ளச் செய்துள்ள விடயம்**

ராஜாங்க அமைச்சு மட்டுமன்றி அமெரிக்க நீதித்துறைத் திணைக்களமும் இலங்கையில் போர் பற்றிய விடயங்களை ஆராய்ந்து வருவதாகத் தெரிகின்றது. இந்த விடயம் தொடர்பாக இந்தத் திணைக்களம் வெளிநாட்டு மற்றும் இலங்கைப் பிரஜைகளைப் பேட்டி கண்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

அமெரிக்காவின் இந்தவிதமான செயற்பாடுகள் இலங்கை அரசைத் தொடர்ந்தும் சீற்றம் கொள்ளச் செய்து வருகின்றது.

அமெரிக்க காங்கிரஸ் சபைக்கு வரவிருந்த அறிக்கை தாமதமாவதற்கான காரணம் எதுவாக இருந்தாலும் கொழும்பில் உள்ள அரசாங்கத் தலைவர்களுக்கு அது சற்று ஆறுதலைத் தந்துள்ளது. தன்னை அடையாளம் காட்டிக்கொள்ள விரும்பாத அரச தரப்பைச் சேர்ந்த ஒருவர் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் முக்கியமான அவசர விடயங்களில் கவனம் செலுத்துவதற்கு இதனால் கால அவகாசம் கிடைத்திருப்பதுடன், எமது உண்மை நிலைமைகளை எடுத்துக் கூறி சர்வதேச சமூகத்தைத் திருப்தி கொள்ளச் செய்யவும் இது உதவும் என்று கூறியுள்ளார்.

அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதை ஒருமாத காலம் பின்போடும்படி செய்யப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ முயன்று வந்ததாகவும், ராஜாங்க அமைச்சில் தென்மத்திய விவகாரங்களுக்கான உதவி அமைச்சரும் இலங்கையில் முன்னாள் அமெரிக்கத் தூதரா இருந்தவருமான றொபேர்ட் பிளேக்கைச் சந்தித்துப் பேசியபோது இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. கோத்தபாய ராஜபக்ஷ இப்பொழுது விஜயம் ஒன்றை மேற்கொண்டு அமெரிக்கா சென்றுள்ளார். அவ்வாறான சந்திப்பு ஒன்று நடைபெற்றதா மற்றும் பிளேக் அதற்கு உடன்பட்டு செயற்பட்டாரா என்பது பற்றிய உத்தியோகபூர்வ தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

**முகாம் மக்கள் குறித்த அமெரிக்காவின் கவலை**

அண்மையில் அமெரிக்காவில் உதவி ராஜாங்க அமைச்சர் றொபேர்ட் பிளேக்குடன் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இலங்கை பற்றிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் பிளேக் பின்வருமாறு கூறியிருந்தார்:-

இலங்கையில் மக்களின் நடமாடும் சுதந்திரம் பற்றி நாம் இன்னமும் அக்கறைகொண்டிருக்கிறோம். பல நாடுகள் இடம்பெயர்ந்த மக்களின் நிலைமை குறித்துத் தமது அக்கறைகளை வெளியிட்டிருக்கிறார்கள் என்பது எமக்குத் தெரியும். அந்த முகாம்களில் 3 லட்சம் மக்கள் வரையில் இருக்கிறார்கள். அனேகமாக இப்பொழுது மூன்று மாதங்களுக்கு மேல் அவர்கள் அங்கு இருந்துவிட்டார்கள். நாம் இப்போது மிகமுக்கியமாகக் கவலையடைந்திருப்பது செப்ரெம்பர் மாத இறுதியில் பருவமழை ஆரம்பிக்கப் போகின்றது என்பதால்தான். மேலும் இன்னும் மிக இக்கட்டான பிரச்சினை என்னவென்றால் அந்த முகாம்களில் அளவுக்கு அதிகமாக மக்கள் நெரிசல் நிலவுவதுதான் - என்று கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்:-

கடந்த வாரம் செயலாளர் நாயகம் தமது அரசியல் விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் நாயகம் லியன் பாஸ்கோவை அங்கு அனுப்பி இருக்கிறார். அங்கு சென்ற அவர் இந்த விடயங்கள் தொடர்பாகக் கேள்விகள் பலவற்றை எழுப்பியுள்ளார். எனவே சர்வதேச சமூகத்தின் மத்தியில் நல்ல கருத்து ஒற்றுமை நிலவுகின்றது என்று நான் நினைக்கின்றேன். இந்த விவகாரங்களில் எமது நண்பர்களை முன்நகரும்படி நாம் கேட்டுக்கொள்வதற்கு இது ஒரு முக்கிய விடயமாகும். அரசியல் இணக்கப்பாட்டுடனான பொதியொன்றை உருவாக்குவதற்கும் இது ஒரு முக்கிய விடயம். நான் சொல்வதன் கருத்து என்னவென்றால் தற்போதைய நிலைமையில் இந்த இடம்பெயர்ந்த மக்களைத் தொடர்ந்து வைத்திருப்பதானது மீண்டும் பிரச்சினைகளையே உருவாக்குவதாய் இருக்கும். எனவே அவர்களை விடுவிப்பது மிக முக்கியமாகும்.

இது உடனடியாக சாத்தியமாகாது என்பதை நாம் அறிவோம். ஏனென்றால்-

இன்னமும் நிறைய கண்ணி வெடிகள் அகற்றப்படவேண்டியநிலை இருக்கிறது. இந்தச் செயற்பாடுகள் முனைப்புப்பெறும் அதேவேளை இடம்பெயர்ந்த மக்களுக்கு தேர்ந்தெடுக்கும் வசதி இருக்கவேண்டும். அவர்கள் வெளியேறிச் சென்று தமது உறவினர்களுடன் இருக்க விரும்பலாம். எங்காவது தென்னிலங்கையிலும் கூட அல்லது முகாம்களிலேயே தங்கியிருக்க விரும்பலாம். ஆனால் நாம் என்ன முக்கியம் என்று கருதுகிறோம் என்றால் உலகம் முழுவதிலும் இருப்பதுபோல் நடமாடும் சுதந்திர உரிமை கௌரவிக்கப்பட வேண்டும் என்பதாகும்.

இடம்பெயர்ந்தோர் தொடர்ந்து அங்

## இந்திய நாடாளுமன்றக்குழு இலங்கைவர ஏற்பாடு

கிருப்பதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று, கண்ணி வெடிகள் அகற்றப்படுவது இன்னமும் முடிவுறவில்லை. ஓரளவு கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இலங்கை அதிகாரிகள் இடம்பெயர்ந்தவர்கள் மத்தியில் இன்னமும் எத்தனை போராளிகள் எஞ்சி இருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து வருகிறார்கள். இந்த வேலைகள் அந்த மக்கள் முகாம்களுக்கு வந்து சேர்ந்ததில் இருந்தே நடைபெற்று வருகின்றன. இவைகளை விளங்கிக்கொள்ள வேண்டும். ஆனால் எமது கருத்து என்னவென்றால் இந்தப் பணிகள் துரிதப்படுத்தியாக வேண்டும். மக்கள் இந்த நிலைமையில் தொடர்ந்து வைத்திருக்கப்படலாகாது என்பதே.

**மீள்குடியமர்வுக்கு துரித நடவடிக்கை**

வெளிநாட்டு அழுத்தங்கள் காரணமாக அரசாங்கம் முகாம்களில் உள்ள மக்களை மீளக்குடியமர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு ஆராய்ந்து வருகின்றது. உறவினர்களுடன் தங்க விரும்புகிறவர்களுக்கு இடமளித்து முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்குச் சுதந்திரமாக நடமாடுவவதற்கு வசதி செய்து கொடுப்பதற்கு அரசு விரும்புகின்றது.

இது தொடர்பாக ஜனாதிபதி முறையாக அறிவித்தல் ஒன்றை எந்த வேளையிலும் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியாவிலிருந்து அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவொன்று விரைவில் இலங்கை வரவிருப்பதைக் கருதியே இந்த முயற்சிகள் எடுக்கப் படுவதாகத் தெரிகின்றது.

தமிழ்நாட்டின் திராவிடமுன்னேற்றக் கழகத்தின் கோரிக்கையின்பேரில் பிரதிநிதிகள் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்புவதற்கு இந்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்த விடயம் இலங்கை அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை பாதுகாப்பு அமைச்சு மேற்கொள்ள விருப்பதால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் வருகைக்காக அவர்கள் காத்திருக்கிறார்கள்.

அகதிகளை மீள்குடியமர்த்தும் செயற்பாடுகள் துரிதமாக்கப்படுவதானது ஐரோப்பிய ஒன்றியத்திற்குப் பலமான சமிக்ஞை ஒன்றை அனுப்பியதாகவிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஜீ.பி.எஸ் வர்த்தக சலுகையை வழங்குவதா இல்லையா என்பதை அடுத்த மாதம் ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானிக்கவிருக்கின்றது.

ஒரு நாட்டின் நல்லாட்சி மற்றும் நிலையான வளர்ச்சிப்பணிகள் ஆகியவற்றை முன்வைத்தே ஐரோப்பிய ஒன்றியம் ஜீ.பி.எல் வர்த்தக சலுகைகளைத் தீர்மானிப்பது வழக்கம்.

வெளியுறவு அமைச்சர் வெளியிட்டுள்ள ஒரு பத்திரிகைச் செய்தியில், ஐரோப்பிய ஆணைக்குழுவினர் நாடுகளில் புலனாய்வுகள் மேற்கொள் வதை விடுத்து அந்த நாடுகளுக்கு நேரடியாகச் சென்று களநிலைமைகளைத் தெரிந்து கொள்ள முயற்சி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் ஐரோப்பிய ஆணைக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்யவிரும்பிக் கேட்டிருந்ததும் அது நிராகரிக்கப்பட்டதும் வெளியுறவு அமைச்சருக்குத் தெரிந்திருக்கவில்லைப்போலும் தெரிகின்றது.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை ஒரு பகிடியாக ஆகிவிட்டிருப்பதில் ஆச்சரியமில்லை.

கடந்த வாரம் அமைச்சரவைக் கூட்டமொன்றில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவிடம் வெளிநாட்டமைச்சர் ரோகிதபோகொல்லாகம அவரது அமைச்சில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக வாங்கிக்கட்டி கொண்டார். அதுமட்டுமல்ல ஜீ.பி.எஸ் வர்த்தக சலுகையை நிலைநிறுத்திக் கொள்வதற்கு பணியாற்றும்படியாக நியமிக்கப்பட்ட நான்கு பேர் கொண்ட அமைச்சர் குழுவில் ஒருவரான பேராசிரியர் பீரிஸ் கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் பேசும்போது ஜீ.பி.எஸ் வரிச்சலுகையைத் திரும்பிப் பெறுவதற்காக எந்த ஒரு நாட்டினதும் புலனாய்வுக்கோ நிபந்தனைகளுக்கோ நாம் விட்டுக் கொடுக்கப்போவதில்லை என்று அடித்துக் கூறினார். இது ஜனாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்க வேண்டிய விடயம். அமைச்சரவைக் குழுவை ஒற்றுமையாகச் செயல்பட்டு பெறுபேறுகளைத் தமக்கு அறிவிக்கும்படி செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி தான் ஜனாதிபதி கூறியிருந்தார்.

அமைச்சர்கள் முரண்பாடான கருத்துக்களை வெளியிடுவது ஒரு பொது அம்சமாக மாறிவிட்டது. சந்தேகமில்லாமல் இது நாட்டின் மதிப்பைக் கெடுத்துவிடுகிறது. இருந்தபோதிலும் அமைச்சர்களோ வேறு அரசுத் தலைவர்களோ இது குறித்துக் கவலை கொள்ளத் தேவையில்லை. ஏனென்றால் இலங்கையின் எதிர்க்கட்சிகள் இலங்கைக்கு ஏற்படும் அபகீர்த்தியையோ சதி முயற்சிகளையோ பற்றிக் கவலைப்படுவதாக இல்லை. அவர்கள் பொதுக்கூட்டு முன்னணி ஒன்றை அமைப்பதிலும் அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு வசதிகளை ஆராய்வதிலுமே கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

(ப)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 13 | 29.09.2009 செவ்வாய்க்கிழமை |
| திதி: | ஏகாதசி முழுவதும் |
| நட்சத்திரம்: | திருவோணம் பி.இ. 04.42 வரை |
| சுபநேரம்: | 10.32 - 12.02 |
| ராகுகாலம்: | 03.02 - 04.32 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்து 38 ஓட்டங்களால் சாதித்தது; இலங்கை வெளியேறும் நிலையில்!

## 74 ஓட்டங்களை விளாசினார் ரைடர்



ஜெகன்னஸ்போர்க்.செப்.28

சம்பியன் லீக் சுற்றுப் போட்டியில் நியூசிலாந்து அணி இலங்கையணியை 38 ஓட்டங்களினால் வீழ்த்தியது. இதனால் 2 போட்டிகளில் தோல்வியைத் தழுவிய இலங்கையணி தொடரிலிருந்து வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் ஜெகன்னஸ்போர்க்கில் நடைபெற்றுவரும் சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்று நடைபெற்ற 'பி' பிரிவு போட்டியில் நியூசிலாந்து-இலங்கை அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார முதலில் களத்தடுப்பைத் தேர்ந்தெடுத்தார். இதன்படி நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.

அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய மக்கலமும் ரைடரும் இணைந்து அணிக்கு சிறந்த இணைப்பாட்டம் ஒன்றினை வழங்கினர். இருவரும் இணைந்து முதலாவது விக்கெட் இழப்புக்காக 125 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். இலங்கை அணிக்கு தலையிடியைக் கொடுத்த இந்த ஜோடியை மத்தியூஸ் பிரித்தார். மக்கலம் 46 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது டில்சானிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அதிரடியாக ஆடிய ரைடர் 58 பந்துகளில் (10 பௌண்டறிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 74 ஓட்டங்களைப்பெற்று குலசேகரவின் வேகத்தில் விக்கெட் காப்பாளர் சங்கக்காரவிடம் பிடிகொடுத்து பெவிலியன் திரும்பினார்.

அடுத்துவந்த குப்தில் சிறப்பான ஆட்டத்தை வழங்கிக் கொண்டிருக்க றெய்லர் 4 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஜெயசூரியாவின் பந்தில் ஜெயவர்த்தனவிடம் பிடிகொடுத்து வெளியேறினார். எலியோற் ஓட்டமெதனையும் பெறாமலும் வுறும் 15 ஓட்டங்களுடன் வெளியேறினர்.

அடுத்துக் களமிறங்கிய அணித் தலைவர் விற்ரோரி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த 4 பௌண்டறிகள், ஒரு சிக்ஸருடன் 48 ஓட்டங்களை 44 பந்துகளில் பெற்று ஆட்டமிழக்க அதிரடியாக ஆடிய குப்தில் 66 ஓட்டங்களைப்பெற்று மலிங்கவின் வேகத்தில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு வெளியேறினார்.

பின்னர் களமிறங்கிய பிராங்ளின், மில்ஸ் ஆகியோர் ஆட்டமிழக்காமல் 28, 18 ஓட்டங்களைப் பெற்றனர். 50 ஓவர்கள் முடிவில் நியூசிலாந்து அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 315 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கையணி சார்பில் பந்து வீசிய ஜெயசூரியா 39 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் மத்தியூஸ் 6 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

316 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கையின் ஆரம்ப வீரர்களான சனத் ஜெய சூர்யாவும் டில்ஷானும் களமிறங்கினர்.

அணிக்கு சிறப்பான ஆரம்பத்தை வழங்க இந்த ஜோடி முயன்ற போது அணி 66 ஓட்டங்களைப் பெற்ற வேளை ரௌபியின் வேகத்தில் மில்ஸிடம் பிடிகொடுத்து அதிரடி வீரர் ஜெயசூரியா (24) வெளியேறினார். அடுத்துவந்த சங்கக்கார முதல் பந்தில் விற்ரோரியிடம் பிடி ஒன்றைக் கொடுத்த போதும் அது அவரால் தவறவிடப்பட்டது. இந்நிலையில் 41 ஓட்டங்களைப்பெற்ற (7 பௌண்டறிகள், ஒரு சிக்சர்) டில்ஷான் ஆட்டமிழந்தார்.



அடுத்து வந்த ஜெயவர்த்தனா அணிக்கு நம்பிக்கையளிக்கும் படி ஆடிக் கொண்டிருந்தார். சங்கக்கார 11 ஓட்டங்களுடனும் சமரவீர 17 ஓட்டங்களுடனும் வெளியேறினர். அடுத்த வந்த கண்டம்பி 11 ஓட்டங்கள் பெற்ற போது விற்றோரியினால் ' ரன் அவுட்' செய்யப்பட்டு பெவிலியன் அனுப்பப்பட்டார்.

மத்தியூஸும் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அடுத்துக் களமிறங்கிய குலசேகர ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்க ஆரம்பித்தார். இவர் ஆட்டமிழக்காமல் 2 பௌண்டறிகள் 4, சிக்ஸர்களுடன் தனது முதலாவது அரைச்சதத்தைப் பெற்று(57) அவரின் அதி கூடிய ஓட்டங்மாகப் பதிவு செய்தார்.

சிறப்பாக ஆடிய ஜெயவர்த்தனாவும் 77 ஓட்டங்களுடன் (6 பௌண்டறிகள், 2 சிக்ஸர்கள்) வெளியேற துஷார(11), மலிங்க (15), மெண்டிஸ்(3) என வெளியேற இலங்கை அணி 46.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 277 ஓட்டங்களைப் பெற்று 38 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

நியூசிலாந்து அணி சார்பில் பந்து வீசிய மில்ஸ் 3 விக்கெட்டுக்களை யும் ரௌபி, பிராங்லின், விக்ரோறி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக அணியின் வெற்றிக்கு வலுவான உரமிட்ட (48 ஓட்டங்கள், 2 விக்கெட்டுக்கள்) அணித் தலைவர் விற்ரோரி தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த நிலையில் அடுத்த வரும் நியூசிலாந்து அணி போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்துமாயின் இலங்கை அணி வெளியேறும் நிலை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

**'சம்பியன்ஸ் கிண்ணம் - 2009'**

**இன்றைய ஆட்டம்**

அணிகள்
இந்தியா - அவுஸ்திரேலியா

மைதானம்: செஞ்சூரியன்
நேரம்: மாலை 6.00



### 'சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் அணிகள் பெற்ற புள்ளி விவரம்

'ஏ' பிரிவு

| நாடு | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|
| பாகிஸ்தான் | 2 | 2 | - | 4 |
| அவுஸ்திரேலியா | 1 | 1 | - | 2 |
| இந்தியா | 1 | - | 1 | 0 |
| மே.இ.தீவுகள் | 2 | - | 2 | 0 |

'பி' பிரிவு

| நாடு | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|
| இங்கிலாந்து | 1 | 1 | - | 2 |
| நியூஸிலாந்து | 2 | 1 | 1 | 2 |
| தென்னாபிரிக்கா | 2 | 1 | 1 | 2 |
| இலங்கை | 3 | 1 | 2 | 2 |

(28ஆம் திகதி வரையானவை)

# ஆஸித் தொடரில் விளையாடுவேன் -ஷேவாக்

''அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் நான் விளையாடுவேன்'' - என இந் திய கிரிக்கெட் அணியின் ஆரம்ப வீரரும் அதிரடித் துடுப்பாட்ட வீரருமான வீரேந்தர் ஷேவாக் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் நடந்த ஐ.பி.எல். 'ருவென்ரி-20' கிரிக்கெட் தொடரின் போது தோள்பட்டையில் காயமடைந்து விலகினார். தோள்பட்டையில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதால் கடந்த 4 மாதங்களாக அணியில் இடம்பெறாமல் இருக்கும் ஷேவாக் உள்ளூர் போட்டிகளில் விளையாடி வருகிறார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-



''சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடும் அளவுக்கு இன்னும் நான் முழு உடல் தகுதி பெறவில்லை. எல்லைக் கோட்டிலிருந்து என்னால் பந்தைத் தூக்கி எறிய முடியாதுள்ளது.

இதனால் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிக்கு என்னால் தகுதி பெறமுடியவில்லை ஆனால், அடுத்துவரும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடருக்கு முழு உடல் தகுதி பெற்று விடுவேன். அதற்கு முன்பு 'சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20' போட்டியில் விளையாடவுள்ளேன்'' - என்றார்.

# ஆடுகளம் குறித்து சங்கக்கார அதிருப்தி

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த இங்கிலாந்துடனான போட்டியில் இலங்கை அணி 6 விக்கெட்டுகளால் தோல்வியடைந்திருந்தது. இந்த ஆட்டம் நடைபெற்ற ஆடுகளம் குறித்து இலங்கை அணியின் தலைவர் சங்கக்கார அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியவை வருமாறு:-

வான்டரர்ஸ் ஆடுகளம் ரசிகர்களைக் கவரக் கூடிய அளவுக்கு ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளுக்கு ஏற்றவகையில் இல்லை. இந்த ஆடுகளம் டெஸ்ட் போட்டியின் முதல் நாளில் காணப்படுவதைப் போன்று இருந்தது. இருப்பினும் எந்த வகையான சூழலாக இருந்தாலும் சிறப்பாக ஆட வேண்டும் என்பதே எங்களது பணி'' - என்றார்.

# பாகிஸ்தானிடம் மண்டியிட்டது இந்தியா

செஞ்சூரியன், செப். 28

'சம்பியன்ஸ் கிண்ண'த் தொடரை இந்திய அணி படுமோசமாகத் தொடங்கியுள்ளது. நேற்றுமுன்தினம் நடந்த பரபரப்பான லீக் போட்டியில் பாகிஸ்தானிடம் 54 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. சொகைப் மலிக்கின் சதம் பாகிஸ்தான் அணியின் வெற்றிக்குப் பக்கபலமாக அமைந்தது. பந்துவீச்சு, துடுப்பாட்டத்தில் சொதப்பிய இந்திய வீரர்கள் மிகுந்த ஏமாற்றம் அளித்தனர்.

தென்னாபிரிக்ககில் நடந்துவரும் 'சம்பியன்ஸ் கிண்ண'க் கிரிக்கெட் தொடரில் (மினி உலகக் கிண்ணம்) நேற்றுமுன்தினம் 'ஏ' பிரிவில் நடந்த 'லீக்' போட்டியில் பரம வைரிகளான இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆரம்பத்தில் வேகத்தில் மிரட்டிய நெஹ்ரா, அதிரடி காட்டிக்கொண்டிருந்த இம்ரான் நஸிர் (20), கம்ரன் அக்மல் (19) ஆகியோரை வெளியேற்றி அசத்தினார். ஆர்.பி.சிங்கின் பந்தில் அணித்தலைவர் யூனிஸ்கான் (20) வீழ்ந்தார். இதையடுத்து பாகிஸ்தான் அணி 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 65 ஓட்டங்களை மட்டும் எடுத்துத் திணறியது.

இதற்குப் பின்னர் சொகைப் மலிக், முகமது யூசுப் ஆகியோர் இணைந்து பொறுப்பாக ஆடினர். ஆரம்பத்தில் ஒன்று, இரண்டு ஓட்டங்களாகச் சேர்த்துக்கொண்டிருந்த இவர்கள் பின்னர் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இந்த ஜோடியைப் பிரிப்பதற்காக இந்திய அணித்தலைவர் டோனி பலவிதமான வியூகங்களை வகுத்தும் எதுவும் கைகொடுக்கவில்லை. இந்நிலையில் யூசுப் ஒரு நாள் போட்டிகளில் 63ஆவது அரைச்சதம் கடந்தார்.

மறுமுனையில் கலக்கலாக ஆடிக்கொண்டிருந்த சொய்ப் மாலிக் மின்னல் வேகத்தில் ஓட்டங்களைக் சேர்த்துக்கொண்டிருந்தார். இந்தியப் பந்துவீச்சாளர்களின் பந்துகளை நாலா புறமும் துரத்திக்கொண்டிருந்த இவர், ஒரு நாள் போட்டிகளில் தனது 7ஆவது சதம் கண்டார். இதுதவிர 5 ஆயிரம் ஓட்டங்களையும் கடந்தார்.

பொறுப்பாக ஆடிய முகமது யூசுப் (87), நெஹ்ராவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து வந்த அப்ரிடி (4) யூசுப் பதானின் சுழலில் வீழ்ந்தார்.

ஆட்டத்தின் நாயகனாக ஜொலித்துக் கொண்டிருந்த சொய்ப் மாலிக் 128 ஓட்டங்களுக்கு(16பௌண்டறிகள்) ஹர்பஜன் வீசிய சுழல் வலையில் சிக்கினார். உமர் அக்மல் (0) சொப்பினார். பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 302 ஓட்டங்களைக் குவித்தது.

இந்தியா அணி சார்பில் பந்துவீச்சில், கூடுதலாக நெஹ்ரா 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இஷாந்த் 2 விக்கெட்டுக்களையும், ஆர்.பி.சிங், யூசுப் பதான், ஹர்பஜன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்

பின்னர் 303 என்ற கடினமான இலக்கைத் துரத்தி ஆடிய இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியைக் கொடுத்தது. பாக். அணியின் இளம் வீரரான முகமது அமீரின் பந்துவீச்சில் வெறும் 8 ஓட்டங்களுக்கு சச்சின் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதற்குப் பின்னர் வாண வேடிக்கை காட்டிய கம்பீர் பௌண்டறி, சிக்ஸர் என பொழிந்துகொண்டிருந்த வேளை, பரிதாபகரமாக 'ரன்-அவுட்' ஆனார். அவர் 57 ஓட்டங்களை அணிக்காகச் சேர்த்திருந்தார்.

இந்த நேரத்தில் மீண்டும் இந்திய அணிக்கு அப்ரிடி பெரும் தலையிடியைக் கொடுத்தார். இவரது சுழலில் விராத் கோஹ்லி(16) வெளியேறினார். அடுத்து அணித்தலைவர் டோனியும்(3) நடையைக் கட்டினார்.

4 விக்கெட்டுகள் இழப்புக்கு 133 ஓட்டங்களை எடுத்துத் திணறிய இந்திய அணிக்கு ரெய்னா, டிராவிட் ஆகியோர் ஆறுதல் கொடுத்தனர். டிராவிட் ஒரு நாள் போட்டிகளில் 82ஆவது அரைச் சதம் கடந்தார். அசத்தலான ஆடிக்கொண்டிருந்த ரெய்னாவை துரதிஷ்டம் பற்றிக்கொண்டது. அதாவது, சயீத் அஜ்மல் வீசிய பந்தில் [illegible] (26) சர்ச்சைக்குரிய முறையில் ஆட்டமிழந்தர். அவசரப்பட்ட நடுவர் ஸ்ரீவ்




டேவிஸ் எல்.பி.டபிள்யூ. கொடுத்து இந்திய ரசிகர்களின் நம்பிக்கையைத் தகர்த்தார். இந்த ஆட்டமிழப்பை திரையில் பார்த்தபோது பந்து அவரது கால்களில் படாது துடுப்பு மட்டையில் பட்டுச் செல்வது தெளிவாகத் தெரிந்தது.

பின்னர் யூசுப் பதான்(5) ஏமாற்றினார். மறுமுனையில் தனித்து நின்று போராடிக் கொண்டிருந்த டிராவிட் (76) 'ரன்-அவுட்' ஆனார். பின்னர் வந்த வீரர்கள் அனைவரும் வந்தவேகத்திலேயே 'பெவிலியன்' திரும்ப, இந்திய அணி 44.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 248 ஓட்டங்ருளை மட்டுமே பெற்று 54 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பாகிஸ்தான் அணி சார்பாக அமீர், நவீத், சயீத், அப்ரிடி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி, அரையிறுதி வாய்ப்பைப் பிரகாசப்படுத்திக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியர் தி.சுந்தரமூர்த்தியின் 100ஆவது அகவையை முன்னிட்டு லயன்ஸ் கழகத்தினரால் அவரைக் கௌவிக்கும் நிகழ்வு அவரது இல்லத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் நூற்றாண்டு விழா நாயகனுடன் நிற்பதை முதலாவது படத்திலும் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய நிர்வாகத்தினரை இரண்டாவது படத்திலும் காணலாம். நூற்றாண்டு விழா நாயகனின் சகபாடியான 94 வயதுடைய புலவர்மணி வை.க.சிற்றம்பலம் அருகில் அமர்ந்து இருக்கிறார். (படங்கள்: எஸ்.கதிரவேலு)

## உடற்கல்வி ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.28

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு பெருவிளையாட்டுக்கான அணிக்குரிய வீரர்களைத் தெரிவு செய்வதற்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து உடற்கல்வி ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். கைலாசநாதன் அறிவித்துள்ளார். (9)

## பழங்கள் பதனிடல் பயிற்சி

யாழ்ப்பாணம், செப். 28

சண்டிலிப்பாய் விதாதா வளநிலையத்தால் பழங்கள் பதனிடுதல் தொடர்பான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ம. ஜெகூ அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்புகின்ற தொழில் முயற்சியாளர்கள், புதிதாக தொழில் ஆரம்பிக்க உள்ளவர்கள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலைய விஞ்ஞான தொழில்நுட்பவியல் உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (9)

## கத்தோலிக்க எழுத்தாளர் விவரமலர் வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.28

யாழ். கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு கத்தோலிக்க எழுத்தாளர் விவரமலர் வெளியிடப்படவுள்ளது.

எனவே 2000 ஆண்டு முதல் இதுவரை வெளிவந்த நூல்கள், கவிதை, கட்டுரை, சிறுகதை போன்ற ஆக்கங்களுடன் எழுத்தாளரின் சுயவிவரக் கோவையுடன், புகைப்படம் ஒன்றையும் இணைத்து எதிர்வரும் ஆம் திகதிக்கு முன்னர் 'செயலாளர்,' கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம், இல. 60, கோவில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் செயலாளர் செ.யோசேப்பாலா கேட்டுள்ளார்.

(9)

## வாழைப்பழம் விலை உயர்வு

கோப்பாய், செப்.28

வலி. கிழக்கு நீர்வேலி வாழைக் குலைச் சந்தையில் வாழைப்பழங்களின் கொள்வனவுவிலை கடந்த சில தினங்களாக உயர்ந்து காணப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது கதலி இன வாழைப்பழம் ஒரு கிலோ ரூபா 40 தொடக்கம் 50 ரூபாவரையும் இதரை இனம் 30 ரூபா தொடக்கம் 40 ரூபா வரை கொள்வனவு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிக்கப்படுகின்றது.

இதனால் விவசாயிகள் ஓரளவு நன்மை அடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விலை ஏற்றத்திற்குக் காரணமாக வாழைக்குலைகள் தொடர்சியாக தென்னிலங்கை பிரதேசங்களிற்கு எடுத்துச் செல்லப்படுவது குறிப்பிடத்தக்கது.

(1-72-224)

# விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நெற்செய்கை மேற்கொள்வதில் சிரமம்

## கட்டாக்காலிகளின் தொல்லையே காரணம்

யாழ்ப்பாணம், செப்.28

காலபோக நெற்செய்கைக்கு விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

அப்பகுதியில் கட்டாக்காலியாகத் திரியும் மாடுகளால் பயிர்கள் அழிக்கப்பட்டுவிடும் என்ற அச்ச உணர்வே காரணமாகும்.

அப்பகுதியில் சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டாக்காலி கால்நடைகள் அலைந்து திரிவதாகவும் இவற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின் நெற்பயிர்ச்செய்கையில் உரிய பயன்பெற முடியாது என நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

அண்மையில் பெய்த மழையின் பின்னர் புனரமைக்கப்பட்ட வரம்புகளை மாடுகள் சேதப்படுத்தி வருவதாகவும் இந்த நிலையில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும்போது கால்நடைகளால் பெரும்அழிவு ஏற்படுமெனவும் தெரிவித்தனர்.

(230-207)

# பாதிக்கப்பட்டுப் பத்து வருடங்களாகியும் நஷ்டஈடு கிடைக்காத 'உ' அட்டையுடையோர்

யாழ்ப்பாணம், செப்.28

பாதிக்கப்பட்டு பத்து வருடங்களாகியும் இதுவரை நட்டஈடு கிடைக்கப் பெறாத நிலையில் தென்மராட்சிப் பிரதேச 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போர் உள்ளனர்.

கடந்த 2000 ஆம் ஆண்டு பிரதேசத்தில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின் போது பெருமளவு குடியிருப்புக் கட்டடங்கள் சேதமடைந்தன.

2002 ஆம் ஆண்டு சொந்த இடங்களுக்குத் திரும்பிய 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போர் தமக்கு ஏற்பட்ட பாதிப்புக்கான நட்ட ஈடு வழங்கக் கோரி பிரதேச செயலகத்திற்கு விண்ணப்பித்தனர்.

சேதமடைந்த குடியிருப்புகளுக்குரிய நட்ட ஈட்டுத் தொகை வழங்கப்படுமென கடந்த ஏழு வருடங்களாக காத்திருப்பதாகவும் குடியிருப்புகள் சேதமடைந்ததால் நட்டஈட்டுத் தொகையினை எதிர் பார்த்து ஓலைக் கொட்டில்களிலும் உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் தற்போது தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போர்களில் பலருக்கு கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட போதிலும் யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்டோரில் பலருக்கு இது வரை நட்ட ஈடுக் கொடுப்பனவு வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுக்காததையிட்டும் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்தனர்.

(203-207)

# சாவகச்சேரி மதுவரி நிலையத்தை அமைச்சர் டக்ளஸ் திறந்து வைத்தார்

யாழ்ப்பாணம், செப்.28

மதுவரித் திணைக்களத்தினால் சாவகச்சேரி மதுவரி நிலையம் சாவகச்சேரி ரயில் நிலைய ஒழுங்கையில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கடந்த சனிக் கிழமை திறந்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி கொமர்ஷல் வங்கி சந்தியிலிருந்து கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வித்தியாலய மாணவர்களின் 'பாண்ட்வாத்திய' இசையுடன் விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிலையக் கட்டட பெயர்ப்பலகையினை திரை நீக்கம் செய்து வைத்து கட்டடத்தினை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் டி. ஜீ. எம். பி. ஹப்பு ஆராய்ச்சி, தென்மராட்சிப் பிரதேச படை கட்டளை அதிகாரி கேணல் ரட்ணாயக்க, யாழ். பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர், தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர். மதுவரித் திணைக்கள யாழ்.மாவட்ட உதவித் துணையாளர் கிறிஸ்ரி யோசப் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மதுவரி திணைக்கள துணையாளர் நாயகம் டி. ஜீ. எம். பி. ஹப்பு ஆராய்ச்சி ஆகியோர் உரையாற்றினர்.

நிகழ்வில் யாழ். மாவட்ட மதுவரி திணைக்களத்திற்கான வாகனம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் உதவி ஆணையாளர் கிறிஸ்ரி யோசப்பிடம் கையளிக்கப்பட்டது.



யாழ். மாவட்ட போக்குவரத்துப் பொலிஸ் பிரிவினர் அண்மையில் யாழ். மத்திய கல்லூரி மாணவர்களுக்கு போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான பயிற்சியினை வழங்கிய போது எடுக்கப்பட்ட படம்.

இதில் யாழ். மாவட்ட போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜனக [illegible] மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: ஓங்காரன்)

## உள்ளூராட்சி மாநாடும் கண்காட்சியும்

வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்கத்தின் உள்ளூராட்சி மாநாடும் கண்காட்சியும் ஒக்ரோபர் 18, 19 ஆகிய திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களின் உள்ளூராட்சிச் சபைகளின் செயற்பாட்டுக் கண்காட்சியும் இடம்பெறவுள்ளது. (203-207)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## ஏகாதசி உற்சவம்

வண்ணை, செப்.28

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை ஏகாதசி விரத பூசை சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசை ஆரம்பமாகும். காலை 9 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று ஸ்ரீமத்நாராயணர் ஸ்ரீதேவி பூமாதேவி சமேதராய் வீதியுலா எழுந்தருள்வார். (1-160)

## கைதடி ஆயுள்வேத வைத்தியசாலைக்கு அத்தியாவசியப் பொருள்கள்

வண்ணை, செப்.28

கைதடி, அரசினர் சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலைக்கு இம்மாதம் முற்பகுதியில் விஜயம் செய்த சுதேச வைத்தியத்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த வைத்தியசாலைக்கு அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றை வழங்கியுள்ளார்.

பல் வகையான மூலிகைத் தாவரங்கள், கணனிகள், கதிரைகள் மற்றும் அலுவலக அலுமாரிகள், நகல் பிரதி செய்யும் இயந்திரம், மின்பிறப்பாக்கி ஆகியன அவற்றுள் அடங்கும்.

அமைச்சருடன் செயலாளர் அசோகா பீரிஸ், திணைக்கள ஆணையாளர் திருமதி றமணி குணவர்த்தன ஆகியோரும் வருகை தந்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(203-160)

## காரைநகர் மேற்கு வீதி பெரும் சேதம்

யாழ்ப்பாணம், செப்.28

காரைநகர் மேற்கு பிரதான வீதியில் வாரிவளவில் இருந்து பலகாடு வரையிலுமான வீதி பொதுமக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாதளவு சேதமடைந்துள்ளது.

இந்த வீதி பாரிய குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் போக்குவரத்து வாகனங்கள் பெரும்பாலும் வாரிவளவுடனே திரும்பிச் செல்கின்றன. இதனால் பொதுமகள் பல கிலோ மீற்றர் தூரம் கால்நடையாகவே செல்லவேண்டியுள்ளது. இதனால் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே இவ்வீதியைப் புனரமைப்பதற்கு உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(1-250)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கோழிக்குஞ்சு விநியோகம்

★ புறொயிலர் குஞ்சுகள்
★ பேட்டுக் குஞ்சுகள்
★ முட்டைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக் குண்டு. மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.
விநியோகம்:- 30.09.2009 புதன்கிழமை
தொடர்புகளுக்கு:- அரிசா ரேடேர்ஸ் கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (மிட்டாசுக் கடைச் சந்தி, முஸ்லிம் ஹோட்டல் அருகில்)
தொ.பே. 0772487500, 0217210816


# கல்வயல் விவசாயிகளுக்கு புதனன்று மானிய உரம்

யாழ்ப்பாணம், செப்.28

கல்வயல் கமக்காரர் அமைப்பைச் சேர்ந்த விவசாயிகளுக்கு நாளை மறுதினம் புதன்கிழமை மானிய உரம் விநியோகிக் கப்படவுள்ளது.

மானிய உரத்திற்கு விண்ணப்பித்த அனைவரும் மீசாலை, புத்தூர்ச்சந்தியில் உள்ள கமநல சேவைகள் நிலையத்தில் காலை 8 மணி தொடக்கம் நண் பகல் 12 மணிவரை உயரத்தினைப் பெற்றுக்கொள்ள லாம் என அமைப் பின் தலைவர் வி. கே.வேதநாயகம் அறிவித்துள்ளார். (1)

## சேவை நலன் பாராட்டு

திருமதி சிந்தாதேவி செவ்வஜோதி (SLTS-I) (கலைப்பட்டதாரி)



எமது வித்தியாலயத்தில் ஆசிரியராக 26.01.2007 இல் இணைந்து மூன்று வருட காலம் கல்விப் பணியாற்றி இன்று 28.09.2009 இல் தமது 36வருட சேவையிலிருந்து ஓய்வு பெறும் இவ் ஆசிரியப் பெருந்தகையை, தமது ஓய்வு காலத்தில் குடும் பத்துடன் பல்வகைச் சிறப்புக்களையும் பெற்று நலமாக வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்.

## எங்கள் அதிபரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.வேலுப்பிள்ளை மோகனநாதன்
S.L.P.S.GR - 1
(அதிபர், யா/அராலி இந்துக் கல்லூரி)

அதிபர் சேவையில் தரம் - 1 இல் பதவியுயர்வு பெற்ற எங்கள் அதிபரை மேன்மேலும் சிறப்புப்பெற அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
வாழ்க பல்லாண்டு.

கல்லூரிச் சமூகம்


## நன்றி கூறுதல்

மிக அண்மையில் சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய மாணவர்கள் கல்விச் சுற்றுலா சென்றிருந்தவேளை இப்பாடசாலையைச் சேர்ந்த மாணவி செல்வி பிரதீபன் பிறின்சி என்பவரின் நகையொன்று நிலாவரை வற்றாக் கிணற்றருகில் தவறிவிட்டது. இதனை நிலாவரை, அச்சுவேலி, வாதரவத்தை நீர் விநியோகத் திட்டத்தில் கடமை புரியும் பொன்னையா கருணானந்தம் என்பவரினால் கண்டெடுக்கப்பட்டு மாணவியின் பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்டது. தவறவிடப்பட்ட பொருளைக் கண்டெடுத்து உரியவரிடம் ஒப்படைத்த பொன்னையா கருணானந்தம் என்பவரின் நேர்மையான, கண்ணியமான செயலை நாம் மிகவும் பாராட்டுகின்றோம்.

தகவல்:
திரு.திருமதி பிரதீபன் தர்சினி (பெற்றோர்)
(புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய நிர்வாகத்தினர்).

சுண்டுவில் வீதி,
சாவகச்சேரி. (சி/5611744)

## கண்ணீர்க் காணிக்கை



எமது வித்தியாலய உப அதிபர் திருமதி தனலக்ஷ்மி நாகராஜா அவர்களின் அன்புக் கணவர்
அமரர் சுப்பையா நாகராஜா
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம். (89288)


## மங்களகரமான திறப்பு விழா

இன்று (28.09.2009) திங்கட்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் ஒரு மணிவரையுள்ள சுப வேளையில் திறந்துவைக்கப்படவுள்ளது

PRIYA CLINIC
பிரியா வைத்திய நிலையம்

பெண்களுக்கான யோகா பயிற்சி

உடல்நலம், மனவளம் காக்கக் கூடிய முறையில் நோய்கள் குணமாக்க, நோய்கள் வராமல் தடுக்க, ஆயுளையும் உடல் வலிமையையும் பெறுவதற்கான பயிற்சி தேர்ச்சிபெற்ற யோகா பயிற்சி ஆசிரியரால் வழங்கப்படும்.

No, 397, Main Street,(Bastian Junction) Jaffna.



## வீடும் காணியும் விற்பனைக்குண்டு

பலாலி றோட், கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் 1½ பரப்புக்காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
தொ.பே.0774002263



## தவறிவிட்டது

அந்தோனிப்பிள்ளை ஜந்தினி நிரஞ்சலா என் பவரது தேசிய அடையாள அட்டை (716333469V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0770871953 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.



PC REPAIRS UPGRADES
+MONITOR +UPS +PRINTER +POWER +SUPPLY +SCANNER
CALL US
021-7913020
DO SMS
12 years experience in the field of computer hardware industry
Flexible working time Mon-Sat 9am to 6.pm Poya days 9am to 1pm
MICRO PC SYSTEMS
யாழ்ப்பாணம் - 175/3, கஸ்தூரியார் வீதி, T.P: 021-2225893, 0773126712
நெல்லியடி - கொடிகாமம் வீதி, T.P: 0773-039536.


# கசிப்பு உற்பத்தி செய்தவருக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், செப்.28

கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக் குப் பயன்படுத்தும் கோடாவை வைத் திருந்த கொடிகாமம் வாசிக்கு சாவகச் சேரி நீதிமன்றில் ஒரு லட்சத்து 20 ஆயி ரம் ரூபா அபராதம் விதிக்கப்பட் டது.

மதுவரித் நிலையத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த 25 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப் பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிவான் கசிப்பு வைத்திருந்தமைக்கு 75 ஆயிரம் ரூபாவும் கோடா வைத்திருந்தமைக்கு 45 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்து அபராதத் தொகையைச் செலுத்தத் தவ றின் 36 மாத சிறைத் தண்டனை அனு பவிக்கு மாறும் உத்தரவிட் டார். (203-207)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.
PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## நிஜம் ஒன்று நிழலாகி ஒரு திங்களானது



அமரர்
பூரணபாக்கியம் சங்கர்
தோற்றம் : 11.02.1936
மறைவு : 28.08.2009

அன்போடும் பண்போடும் அனைவரையும் அரவணைத்து ஒளிவிளக்காய்த் திகழ்ந்த அன்பு உள்ளத்தின் அழியா நினைவுகளுடன்..

அமரரின் இறுதி நிகழ்வின் போது நேரில் வருகை தந்தோருக்கும், மலர்வளையம் சாத்தி நினைவு அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் வார்த்தை கூறியோருக்கும், 16 ஆம் நாள் சமய நிகழ்வில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் எமது நன்றி.

120, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
28.09.2009

குடும்பத்தினர்


## Congratulations!, All Scholarship Winners...

எமது 28வது ஆண்டு நிறைவினை கொண்டாடும் முகமாக
ரூபா 28 லட்சம் பெறுமதியான புலமைப்பரிசில் யாழ் மாணவர்களுக்கு...



எமது புலமைப் பரிசிலில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு எம் மனமார்ந்த வாழ்த்துக்கள். எம்மிடம் கிடைக்கப்பெற்ற 2321 விண்ணப்பங்களில் 681 மாணவர்களை எமது மாபெரும் பலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் கொண்டுவந்துள்ளோம்.

நீங்கள் இந்த புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் ICT/ Management பாடப்பிரிவுகளில் ஏதாவது ஒன்றினை உங்கள் விருப்பத்தின் பெயரில் IDM Affiliated University College - Jaffna Campus இனூடாக தெரிவு செய்து கற்க முடியும்.

| Scholarship Amount | No. of Scholarships | Total Value |
|---|---|---|
| Rs. 7,000.00 | 50 | 350,000 |
| Rs. 5,000.00 | 315 | 1,575,000 |
| Rs. 3,000.00 | 316 | 948,000 |

*Please bring with you the letter and the voucher on or before 10th of October 2009 for registation.*

IDM
IDM Affiliated University College
No. 216, Navalar Road, Jaffna. [illegible]
web: www.idm.cc3.lk E-mail: jaffna@idmcc3.lk


## நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு 25 ஆம் ஆண்டு



| | |
|---|---|
| பிறப்பு 17.06.1942 இறப்பு 09.10.2008 | பிறப்பு 01.12.1930 இறப்பு 03.11.1984 |
| திருமதி வள்ளி சின்னத்தம்பி | அமரர் வல்லியன் சின்னத்தம்பி |

திதி: 28.09.2009

உள்ளத்தால் பொய்யாது உயர்ந்து நின்றீர்கள்
எம்முடன் உறவாடி மகிழ்ந்தீர்கள்
பல்லாண்டு எம்முடன் வாழ்வீர்கள் என நினைக்க
நிலையற்ற வாழ்வதனைப் புரிய வைத்து
நிறைவான திருத்தாள் அடைந்த எம் அன்புத் தெய்வங்களே!
நீங்கள் கண்ட கனவு போல வாழ்கின்றோம்
எங்கிருந்துதான் வாழ்த்துகின்றீர்களோ ?
எத்தனையாண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவுடனே - நாங்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய சிவனை வேண்டி நிற்கின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

ஆ. செல்வராணி (மகள்).
ந. சரஸ்வதி (மகள்), சு. யோகராணி (மகள்).
ப. இந்திராணி (மகள்). சி. செல்வரத்தினம் (அமரர்)
ஆ.ஜெகன் (பேரன்). மற்றும் மருமக்கள்.
பேரப்பிள்ளைகள். பூட்டப்பிள்ளைகள்.

ஒல்லிப்பழை.
துர்க்காபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண விளையாட்டு விழா

# ஆண்களுக்கான கபடிப் போட்டியில் யாழ்ப்பாணத்தை வீழ்த்தியது வவுனியா

வலி.வடக்கு, செப்.28

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான கபடிப் போட்டியில் வவுனியா மாவட்ட அணி வடமாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப் பட்டது.



யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ்.மாவட்ட அணியும் வவுனியா மாவட்ட அணியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முதல் பாதி ஆட்டம் நிறைவுபெறும் வரை வவுனியா மாவட்ட அணியின் ஆதிக்கமே மைதானத்தில் காணப்பட்டது. முதல் பாதி ஆட்டம் நிறைவுபெற்ற வேளையில் வவுனியா மாவட்ட அணி 27:08 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னணியில் காணப் பட்டது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி வீரர்கள் மிகவும் நுட்பத்துடன் விளையாடி வவுனியா வீரர்களின் இலகுவான வெற்றி என்ற கனவைக் கலைத்தனர்.

இறுதி 3 நிமிடங்கள் இருக்கும்வேளையில் 2 புள்ளிகள் பெற்றால் யாழ்.மாவட்ட அணி முன்னிலைக்குச் செல்லும் என்ற நிலையில் யாழ்.வீரர்களிடையே ஏற்பட்ட பதட்டமான நிலைமையும்வவுனியாமாவட்ட வீரர்களின் முயற்சியும் மீண்டும் விளையாட்டின் போக்கை வவுனியாவுக்குச் சாதகமாக மாற்றியமைத்தது.

ஆட்ட நிறைவில் வவுனியா மாவட்ட அணி 44:37 புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ்.மாவட்ட அணியை வென்று வடமாகாண சம்பியனாகியது வவுனியா மாவட்டம். (50-86)




# ருவென்ரி – 20 கிரிக்கெட் போட்டியொன்றில் ஸ்ரீ காமாட்சியை வென்றது சென்றல்

வலி.வடக்கு, செப்.28

அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் 'ருவென்ரி-20' கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக்கழகம் 8 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெற்ற போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக்கழகமும் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றல் விளையாட்டுக்கழகம் 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

கவிஸ்ரன் ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களையும், வினோத்மோர் 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ஸ்ரீகாமாட்சிஅம்பாள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அலன் 30 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் நிஷான், றதீசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

131 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீகாமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் 20 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

திலீபன் 18 ஓட்டங்களையும், அரவிந்தன் 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். சென்றல் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த றஜீவ்குமார், சத்தியன் தலா 21 ஓட்டங்களைக் கொடுத்த 2 விக்கெட் டுக்களை கைப்பற்றினார்கள். (04-86)

# 'சமபோச' ஆதரவுடனான உதைபந்தாட்டம்; கிண்ணத்தை வென்றது யாழ்.மத்திய கல்லூரி

வலி வடக்கு, செப்.28

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்க ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கம் சமபோசா நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ் மாவட்டப் பாடசாலைகளின் 13வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்திய உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சம்பியனாகியது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் ஒரு அணிக்கு மற்றைய அணி சளைத்தவர்கள் இல்லை என் பதை நிரூபிக்கும் வகையில் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்திலும் சரி, இரண்டாம் பாதி ஆட்டத்திலும் சரி இரு அணிகளும் கோல்கள் பெற பெரு முயற்சி மேற்கொண்ட போதிலும் இரு அணிகளினாலும் கோல்கள் பெற முடியாத நிலையில் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியை தீர்மானிப் பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப் பட்டன. இதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 4:2 கோல்கள் என்ற அடிப்படை யில் வசாவிளான் மத்திய மகாவித்தியா லயத்தை வெற்றி பெற்று மாவட்ட சம்பியனாகியது. (50-86)



இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே சமபோச நிறுவனத்தின் ஆதரவுடன் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட வசாவிளான் மத்திய மகாவித்தியாலய வீரர்கள், கல்லூரி அதிபர், விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியை, அணி பொறுப்பாசிரியர்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்: நேசன்)

## பரிசளிப்பு விழா

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக்கழகத்தின் ஏற்பாட்டில் 2009 அரச அதிபர் கிண்ணத்துக்கான பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ம.வித்தியானந்தநேசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் அவரது பாரியார் திருமதி பரமேஸ்வரி கணேஷ் ஆகியோர் கலந்து கொள்வர்.





அல்வாய மனோகரா விளையாட்டுக்கழகம் அண்மையில் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் ஆரம்பநிகழ்வில் கழகத்தின் தலைவர் கழகக் கொடியை ஏற்றிவைப்பதையும், இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகக்கலந்துகொண்ட 'வேள்ட்விஷன்' நிறுவனத்தின் யாழ் மாவட்ட இணைப்பாளர் ரி.எம்.வசந்தநாயகத்துக்கு வீரர்கள் அறிமுகம் செய்யப்படுவதையும் படங்களில் காணலாம்.

# செஞ்சிலுவைச் சங்க தேசியமட்டப் போட்டிகளில் நான்கு யாழ். வீரர்கள் பதக்கம் வென்றனர்

வலி.வடக்கு, செப்.28

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் ஆறாவது ஆண்டாக நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கு இடையே தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட தடகளப் போட்டிகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு வீரர்கள் பதக்கங்களைப் பெற்றுள்ளார்கள்.

கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யாழ். மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் வீரர்கள், வீராங்கனைகளும் கலந்து கொண்டனர். இதில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வீரர்கள் பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

அதன் விவரம் வருமாறு.

* மகாராசா பார்த்தீபன் -தட்டெறிதல் இரண்டாம் இடம் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)
* விமலானந் கஜிதா - உயரம் பாய்தல் இரண்டாம் இடம் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)
* சண்முகசுந்தரம் வாகீசன் -குண்டெறிதல் மூன்றாம் இடம் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)
* பூவிலிங்கம் பாலசங்கர் -உயரம் பாய்தல் மூன்றாம் இடம் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) (04-86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் - திருமலை

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## வரலாறு - II

33-T-II

**அறிவுறுத்தல்கள்:**

* **பகுதி 1 இல் முதலாம் வினா கட்டாயமானது.**
* **பகுதி 11 இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும்**
* **பகுதி 111 இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

### பகுதி - I (கட்டாயமானது)

01. அ. கீழே தரப்பட்டுள்ள இடங்களை இலங்கைப் படத்தில் குறித்துக்காட்டுக.

01) மல்வத்து ஓயா. 02) மகா ஓயா, கல்லோயா.
03) ஹினி ஓயா. 04) வளவை கங்கை.
05) மகாவலி கங்கை. 06) மகியங்கனை.
07) கந்தளாய் வாவி. 08) கொடவாய.
09) மொனராகல. 10) காலி.

ஆ. கீழே தரப்பட்டுள்ள இடங்களை உலகப் புறவுருவப்படத்தில் குறித்துக் காட்டுக.

01) தார் பாலைவனம். 02) செங்கடல்.
03) குக் தொடுகடல். 04) கோபி பாலைவனம்.
05) பபிங்குடா. 06) லிபியாப் பாலைவனம்.
07) றொக்கி மலைத்தொடர். 08) பெரியபிரிப்பு மலை.
09) அரிசோனா பாலைவனம். 10) வங்காள விரிகுடா.
11) அராபிக்கடல். 12) திபெத் மேட்டுநிலம்.
13) ஏடன் விரிகுடா. 14) சிங்கான் மலைத்தொடர்.
15) சுயெஸ் கால்வாய்

இ. A,B,C,D என கீழே காட்டப்பட்டுள்ள வரலாற்றுப் பிரசித்திபெற்ற நிகழ்ச்சிகளுடன் தொடர்புடையவர்களை கீழே தரப்பட்டுள்ள படங்களில் இருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

A - 1891 ஆம் ஆண்டு மகாபோதி இயக்கத்தை ஆரம்பித்தவர்.
B - பரமேஸ்வராக் கல்லூரி, இராமநாதன் பெண்கள் கல்லூரி என்பவற்றைக் கட்டுவித்தவர்.
C - மருதானை சாஹிரா கல்லூரியை ஆரம்பித்தவர்.
D - 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பௌத்த சமயப் புத்துணர்ச்சியை ஏற்படுத்துவதில் முன்னோடிகளாகத் திகழ்ந்த பௌத்த குருமார்களில் இருவர்.







### பகுதி - II

01. - கண்டி உடன்படிக்கை இலங்கை வரலாற்றின் முக்கிய காலகட்ட மொன்றின் அடையாளமாகும்.
   1) கண்டி உடன்படிக்கை எத்தனையாம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது?
   2) கண்டி உடன்ட்டிக்கை இலங்கை வரலாற்றின் முக்கியமாகக் கொள்ளப்படுவதற்கான காரணம் யாது?
   3) கண்டி உடன்படிக்கை எத்தனை வாசகங்களைக் கொண்டது?
   4) இலங்கையர்கள் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மேற்கொண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகள் எவை?
   5) ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக முதலாவது கிளர்ச்சி மலையகத்தில் இடம் பெற்றதற்கான காரணிகள் எவை?

02. ஒரு நாட்டிற்கு யாப்பு சீர்திருத்தங்கள் இன்றியமையாதவை ஆகும்.
   1) மக்கலம் யாப்புமுறை சீர்திருத்தல் (1910-1912) முன்வைத்த மனுவில் காணப்பட்ட சில கோரிக்கைகளை எழுதுக.
   2) டொனமூர் யாப்புச் சீர்திருத்தத்தின் பிரதான அம்சங்களைக் கூறுக.
   3) இராஜகாரிய முறை ஒழித்தமைக்கான முக்கிய காரணம் எதுவாக இருக்கும் என உமக்கு எண்ணத் தோன்றுகிறது?
   4) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்குப் பங்களித்த காரணிகள் எவை?
   5) இலங்கையின் சுதந்திரத்திற்கான பாதையில் சர்வஜன வாக்குரிமை முக்கியமானது என்பதனை விளக்குவதற்கான காரணங்கள் நான்கைக் குறிப்பிடுக.

03. பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.
   1) இரட்டை ஆட்சி. 2) கோல்புறூக்-கமரன் சீர்திருத்தம்.
   3) ஸ்ரீ விக்கிரமராஜசிங்க மன்னன். 4) மாநகர சபை.
   5) கிராம சபை. 6) சிம்லா மகாநாடு.

### பகுதி - III

01. பிரித்தானியப் பேரரசுக்கு அடிமைப்பட்டிருந்த இந்தியாவின் உணர்வுகளை எழுச்சியடையச்செய்தது பிரித்தானியாவேயாகும்.
   1) இந்திய தேசிய காங்கிரஸிற்குத் தலைமை தாங்கிய இருவரைக் குறிப்பிட்டு அவர்களின் செயற்பாடுகளை விளக்குக.
   2) மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் மூலம் இந்திய மக்களின் உணர்வுகளின் விழிப்புணர்வைத் தூண்ட பிரித்தானியா காரணமாக அமைந்தது. இக் கூற்று எவ்வளவு சாதகமானது என்பதனை விளக்குக.
   3) எதிர்கால திகதி குறிக்கப்பட்ட காசோலை என காந்தி கூறியதற்கான காரணம் யாது?

02. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் ஒரு சிறந்த வரலாற்றுப் பின்னணியைக்கொண்டது எனக் கூறின் மிகையாகாது.
   1) இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தகவல்களைப் பெறக்கூடிய சில இடங்களைக் கூறுக.
   2) இவர்களது வாழ்க்கை முறையானது எவ்வாறு அமைந்திருக்கும் என எண்ணத் தோன்றுகின்றது?
   3) விஜயன் குழுவினரால் அமைக்கப்பட்ட குடியேற்றங்கள் சிலவற்றை எழுதுக.

03. கைத்தொழிலின் பிரதிபலிப்பின் ஊடாக புரட்சிகள் தோற்றம்பெற்றிருந்தாலும் அது ஒரு மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.
   1) கைத்தொழிற்புரட்சி தோன்றுவதற்கான சமூக, பொருளாதார காரணங்கள் சிலவற்றைக் கூறுக.
   2) கைத்தொழிற்புரட்சியின் புதிய கண்டுபிடிப்புக்கள் எவை?
   3) பிரான்சியப் புரட்சியின் விளைவுக்ள் எவ்வாறு காணப்பட்டன?

04. மக்களின் பெரும்பாலான செயற்பாடுகள் நீரையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.
   1) உபதிஸ்ஸ, தாதுசேனன், முதலாம் பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் கட்டிய குளங்கள் எவையெனக் கூறி, கட்டப்பட்ட ஆண்டுகளையும் தெளிவாக எழுதுக.
   2) குளம் ஒன்றின் பாகங்கள் எவையென எழுதுக.
   3) பின்வருவனவற்றுக்கு விளக்கம் தருக.
      அ. கலிங்கல்.
      ஆ. அலைதாங்கி.
   4) புராதன நாகரிகத்தில் வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பாக முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகங்கள் எவையென எழுதுக. (புராதன பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்)

-நிறைவுற்றது-

தொகுப்பு : செல்வி.S.மைதிலி,
திருகோணமலை. தொ.பே: 026-3263511

**English Language II Continuation from ().....**

09. Composition: (Answer only one in 75 words)
   1) Write about some tips for healthy Eating. OR
   2) Write a composition on 'Preparing coconut sambol'. OR
   3) Write a short account about ' M Personal Computer'. OR
   4) Write a composition on Information Technology'. OR
   5) Write a letter to the President of Lion's Club, Trincomalee to have an interview for the school magazine.

10. Turn the following sentence into passive voice as shown in the example
Eg : I did home work in the evening. Home work was done in the evening.
   1) They keep the files in a particular order:
   ..................................................
   2) They send a letter to the news editor:
   ..................................................
   3) You boild water for twenty minutes.
   ..................................................
   4) You treated him in a very good way.
   ..................................................
   5) They selected him as the managing director.
   ..................................................

11. Read the following text on "Spacecraft" and fill in the blanks with suitable words given in the box. There are two extra words.
are, places, people, calls, to, earth, was, scientific, inside, space, such, spacecraft, for, world, pictures, a
A spacecraft is a machine that travels in to space. People that go in to space (1) ........................ called astronauts. The first space craft (2) ........................ carry a person into space (3) ........................ launched in 1961. Just like (4) ........................ to day, it was fixed to (5) ........................ large rocket and fired into (6) ........................ Most spacecraft do not carry (7) ........................ They take computers and other (8) ........................ equipments. They send back to (9) ........................ pictures and information about the (10) ........................ they visit. spacecraft can take (11) ........................ of for a way planets. spacecraft, (12) ........................ as satellites, can be used (13) ........................ sendingT.V.pictures and tele phone (14) ........................ around the world.

12. One of your friend has met with an accident and he / she is in a hospital. far a way from your area. Write a letter to him / her
* say how sad you to hear about the accident
* say some kind words to get well soon.
* inform him / her about your plans to visit him / her

You have ordered five dictionaries from Kandy Book Centre, Kandy to your school Library about one month back. You wanted the books to be sent by parcel post. But you have not received them yet.
Write a letter of complaint to the manager of the book shop. Use about 150 words.

13. Read the following text Adapted from David copper field and answer the questions given below.
It was by this time dark; I heard the clocks strike ten as I sat resting. But it was a summer night, fortunately and fine weather. When I had recovered my breath and had got rid of a stifling sansation.In my throat Irose up and went on. In the midst of my distress, I had no notion of going back.
I was possessed of only three half pence in the world, and began to picture my self as a scrap of news paper intelligence, my being found dead in a day or two, under some hedge and I trudged on miserably, though as fast as I could, until I happened to pass a little shop where it was written up that ladies and gentlemen's wardrobes were bought and that the best price was given for rags, bones and kitchen stuff.
The master of the shop was sitting at the door in his shirt - sleeves, smoking and as there were a great many coats and pair of trousers danling from the low ceiling and only two feeble candles burning inside to show what **they** were, I fancied that **he** looked like a man of revengeful disposition, who had hung all his enemies, and was enjoying himself.
I went up the next by - street, took off my waist coat and came back to the shop door. "If you please sir" I am to sell this for a fare price"
He took the waist coat, stood his pipe on its head against the door post went into the shop, followed by me, snuffed the two candles with his fingers, spread the waist coat on the counter, and looked at it there, held it up against the light, and looked at there and ultimately agreed to give me nine pence for it. there, held it up against the light, and looked at there and ultimately agreed to give me nine pence for it,
   1) Say weather the following statements are true or false.
      a. David had only three half pence.
      b. David own's a small shop.
      c. The shop owner bought used waist coat.
      d. David sold his waist caot for three pence.
   2) Write down the sentence that shows David lad been hurrying and was tired. ..................................................
   3) What did the notice out side the little shop tell David?
   ..................................................
   4) How much money did David get for his waist coat?
   ..................................................
   5) What did David see hanging from the low ceiling?
   ..................................................
   6) What do the following words in the text refer to
      1. He - .............................. 2. I - ..............................
      3. it - ..............................

14. a) The use of flowers in modern society include the following.
How flowers used in - Wedding houses, Funerals, decorations, other activities.
   b) Use of computers in modern world.
introduction - How it is used in Education and work. Advantages and disadvantages of computers. Use about 200 words.

- END -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்த அழுத்தம் அதிகரிக்கின்ற போதிலும் நோய் அறிகுறி சிலருக்கு வெளித்தெரிவதில்லை

**கேள்வி:** வயது 65. ஆண். கடந்த 22 வருடங்களாக நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளேன். அடிக்கடி வைத்திய பரிசோதனைக்கு செல்லும் போதெல்லாம் - மற்றைய பரிசோதனைகளுடன் - எனது இரத்த அழுத்தமும் (Blood Pressure) சோதிக்கப்படும். ஆனால், என்றாவது - எனது இரத்த அழுத்தம் 130/90க்கு அதிகமாக இருந்ததில்லை. எனது வைத்தியர் - 22 வருடங்களாக நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருந்தும் - எனக்கு உயர் இரத்த அழுத்த (High Blood Pressure) நோய் ஏற்படாதிருக்கின்றதென்று வியப்புக்குள்ளாகின்றார். நீரிழிவு நோயாளிகளுக்கு உயர் இரத்த அழுத்த நோய் நிச்சயம் வருவதுண்டா?

**பதில்:** புத்திசாலித்தனமான, முக்கியமான ஒரு வினாவை எழுப்பியதற்காக உங்களை பாராட்டுகின்றேன். உயர் இரத்த அழுத்தம் என்பது சத்தம் இல்லாமல் - மனிதனைக் கொல்லும் நோய் (Silent Disease) என்று கருதப்படுகிறது. ஏனென்றால், எத்தனையோ மனிதர்களுக்கு இரத்த அழுத்தம் 200க்கு அதிகரித்த போதும் - எதுவித நோய்க் குணங்குறிகளோ வெளியே தெரியாமல் வாழ்ந்துள்ளனர். உங்கள் கேள்வியில் இருந்தது போல் - பொதுவாக நீரிழிவு நோயாளர் யாவரும் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்படுவதில்லை. ஆனால், 50% தொடக்கம் 70% வரையிலான நீரிழிவு நோயாளர்களுக்கு ஏதோ ஒரு கட்டத்தில் உயர் இரத்த அழுத்தம் ஏற்பட வாய்ப்பு உண்டு. உங்கள் இரத்த அழுத்தம் 150/90 என்றாலும் இன்றைய மருத்துவர்கள் இதனை 120/80 ஆக குறைக்க வேண்டும் என்கின்றார். அதாவது, உங்கள் இரத்த அழுத்தத்தை - அவர்களைப் பொறுத்த வரையில் Upper Limit of Normal என்கின்ற விளிம்புவரை நிறைந்துள்ள பிரச்சினையாகக் கருதுகின்றார்கள். இன்னும் ஒரு ஐந்தோ பத்தோ அதிகரித்தால் அது உயர் இரத்த அழுத்தமாக காணப்படும். எனவே, கிரமமாக - மாதம் ஒரு தடவையாவது நீரிழிவு பரிசோதனையுடன் இரத்த அழுத்த பரிசோதனையும் கட்டாயமாக செய்துவரவும். அத்துடன் - Opthalmos Copy என்கின்ற கண்ணுள்ளே விழித்திரையை கண்காணிக்கும் பரிசோதனையும் செய்துகொள்வது விழித்திரை (Retina) நீரழிவால் பாதிக்கப்படுவதை முன்னராக அறிய உதவுவது மாத்திரமல்லாமல் - இரத்த அழுத்தம் அதிகரிப்பதையும் - ஆரம்பத்திலேயே கண்டறியவும் உதவும்.

***

**கேள்வி:** பெண். வயது 24. கர்ப்பமாக இருக்கின்றேன். எனது மகப்பேற்று வைத்தியர் - ஒரு சிறு விஷயத்திற்கு 'ஸ்கேன்' பண்ணச்சொல்லி எழுதுகின்றார். கடந்த மூன்று நாள்களாக - கருவிலுள்ள குழந்தையின் துடிப்பு அதிகமாக உள்ளது. இதனைச் சொன்னாலும் எனது மருத்துவர் நிச்சயம் ஸ்கேன் பண்ணச்சொல்லுவார். பொதுவாகவே கர்ப்பகாலத்தின்போது எத்தனை ஸ்கேன் பரிசோதனை செய்யப்படல் வேண்டும்?

**பதில்:** மகப்பேற்று மருத்துவர்கள் பொதுவாக 11-12 வாரம் வரையுள்ள கர்ப்பகாலத்தில் - பிரசவத் திகதியை அறியும் Date Scan உம், 21-22 வார கர்ப்பகாலத்தில் கருவில் - எதுவித உருவாக்க பிழை உள்ளதா என்பதை அறியும் Anomaly Scan உம் 31-32 வாரம் வரையுள்ள காலப் பகுதியில் - குழந்தை சரியான வளர்ச்சி பெற்றுள்ளதா என்பதை அறியும் Growth Scan உம் செய்வார்கள். இந்த மூன்று ஸ்கேன் பரிசோதனைகளும் மகப்பேறு வைத்தியருக்கு உங்களை கர்ப்பகால பராமரிப்புக்கு - அவசியம் தேவை. இவற்றில் ஏதாவது ஸ்கேன் பரிசோதனையும் மகப்பேறு வைத்தியருக்கு உங்கள் கர்ப்ப கால பராமரிப்புக்கு - அவசியம் தேவை. இவற்றில் ஏதாவது ஸ்கேன் பரிசோதனையும் சந்தேகத்திற்குரிய விஷயங்கள் தென்பட்டால் - அந்த சம்பந்தப்பட்ட ஸ்கேன் எடுக்கப்பட்டு 3-4 வார காலத்தில் இன்னொரு ஸ்கேன் தேவைப்படும். சில விசேட சந்தர்ப்பங்களில் உதாரணமாக - செயற்கைமுறை கருத்தரித்தலால் உண்டான கர்ப்பம் என்றால் 8 வார காலத்திலும், குழந்தையின் துடிப்பில் அல்லது வளர்ச்சியில் குறை தென்பட்டால் 32 வார காலத்தின் பின்னர் 3-4 வார இடைவெளியில் இன்னொரு முறையும் ஸ்கேன் பரிசோதனை அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எக்ஸ்ரே பரிசோதனையைப் போலல்லாது - ஸ்கேன் பரிசோதனை அபாயகரமான தொன்றல்ல. கடந்த 35 வருடகால அனுபவத்தில் ஸ்கேன் பரிசோதனையால் குழந்தைக்கோ, தாய்க்கோ - எத்தனை தடவை ஸ்கேன் செய்தாலும் ஊறு ஏற்படமாட்டாது என்பது திட்டவட்டமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, நீங்கள் ஸ்கேன் பற்றி அஞ்சத் தேவையில்லை. ஆனால், தேவையற்ற ஸ்கேன் பரிசோதனைக்கு எழுதப்பட்டால், ஏன், எதற்காக, அவசியமானதா என்பதை அறியும் உரிமை உங்களுக்கு உள்ளது. அதற்கு உங்கள் மருத்துவர் சரியான பதில் அளிக்ககாவிடில் அல்லது பதில் அளிக்க மறுத்தால், இன்னொரு மகப்பேற்று மருத்துவரிடம் நீங்கள் ஆலோசனை பெறுவது நல்லது. ஒன்பது மாதகாலம் உங்களையும் கருவையும் கண்காணித்து பிரசவத்தில் உங்களோடு இணைந்து நிற்க வேண்டிய மருத்துவரிடம் உங்களுக்கு நம்பிக்கை வராவிடின் - மருத்துவரை மாற்றுவதே உங்களுக்கு நல்லது. குழந்தை துடிப்பு அதிகரித்தால் CTG என்கின்ற பரிசோதனையும் ஸ்கேன் பரிசோதனையும் அவசியம் என்பதை இங்கு கூற நான் கடமைப்பட்டுள்ளேன்.




***

**கேள்வி.** வயது 29. திருமணமாகி ... ன் இன்னும் எனக்கு தாயாகும் பா... கி... வில்லை. வயிற்று ஸ்... முட்... வெளியேறும் பரிசோத... Follice Study) சிறுநீர் பரிசோத... இரத்தப் பரிசோதனை எல்லாம் கடந்த 9 மாதங்களுக்கு முன்னர் செய்து பார்த்தபோது சகல - சோதனைகளிலும் எதுவித குறைபாடும் கண்டறியப்படவில்லை. எனது மகப்பேற்று வைத்தியர் மலட்டுத் தன்மையை நீக்கும் மருந்துகளை கடந்த 5 மாதங்களாக தந்தும் பலனில்லை. திரும்பவும் மேற்கூறிய பரிசோதனைகளை வைத்தியர் செய்தும் சகல பரிசோதனைகளும் திருப்தியாகவே இருப்பதாக கூறுகின்றார். ஆனால் அவர் மருந்துகளை தொடர்ந்து உபயோகிக்கும் படியும் கர்ப்பம் தரிக்க இன்னும் காலம் செல்லும் என்றும் உறுதி கூறுகிறார். என்றாலும் எனக்கு திருப்தியில்லாமல், இன்னொரு மகப்பேற்று வைத்தியரின் ஆலோசனையைக் கேட்டேன். அவர் - கருப்பை சுவரில் திசுப்பரிசோதனை, HSG என்கின்ற கருக்குழாய் பரிசோதனை ஆகியவற்றைச் செய்ய வேண்டியுள்ளது என்று கூறுகின்றார். இந்தப் பரிசோதனைகள் பாதுகாப்பானவையா? இதனால் வேறு பக்கவிளைவுகள் ஏற்படுமா? ஆலோசனை கூறவும்.

**பதில்:** உங்கள் வயதை வைத்து ஆலோசிக்கும் போது - நீங்கள் விரைவில் கருத்தரிக்கும் அவசியத்தை உணருகின்றேன். அதனால் நீங்கள் - வைத்திய ஆலோசனைகளை மாற்றும் மனம் கொண்டிருப்பதில் ஆச்சரியம் இல்லை என்பதும் தெரிகிறது. ஆனால், உங்களது முதல் வைத்தியர் செய்வித்த பரிசோதனைகள், அளிக்கப்பட்ட சிகிச்சைகள் யாவும் அவர் சரியான முறையை - சரியான வழியைப் பின்பற்றுகின்றார் என்பதை தெரிவிக்கின்றன. அதேவேளையில் அடுத்த மருத்துவர் சொல்லும் Uterine Biopsy என்கின்ற சிசுப்பரிசோதனை - Hystero Salpingiogr am என்கின்ற கருக்குழல் பரிசோதனைகள் செய்யப்படாத காரணம் புரியவில்லை. மேலும் உங்கள் வைத்தியர் கூறுவது போல் - கருத்தரித்தலுக்கு அவசரப்படுவதில் நியாயம் இல்லை. எத்தனையோ உங்களைப்போன்ற பெண்கள் - சகல கருவலி பரிசோதனைகளிலும் எதுவித பிழையும் இல்லாமல், மலட்டுத்தன்மையோடு இருந்ததையும், இன்னும் சிலர் - 10 வருடங்களின் பின்னர் கர்ப்பம் தரித்ததையும் நான் அனுபவத்தில் அறிவேன். எனவே சிகிச்சைகளை தொடர்ந்து செய்யுங்கள். பலன் நிச்சயம் கிடைக்கும்.

கருப்பையின் திசுக்களை பரிசோதனை செய்வது பொதுவாக நடைபெறும் ஒன்று. அதனை Dilation And Curretage அல்லது D&C பரிசோதனை என்பர். கருத்தரிக்கப்பட்ட முட்டை - கருப்பையின் சுவரில் பதியம் ஆவதற்கு - கருப்பை சுவர் தயாராக, ஆரோக்கியமானதாக இருக்கின்றாதா என்பதை அறிவதற்கே இந்த பரிசோதனை. இந்தப் பரிசோதனையால் எதுவித பக்கவிளைவும் ஏற்படாது. மயக்க மருந்து கொடுக்கப்பட்டு நடைபெறும் இப்பரிசோதனையில் - வலியும் தெரிவதில்லை.

அடுத்து HSG பரிசோதனை. சூலகத்திலிருந்து வெளிவரும் முட்டை கருப்பையை சென்றடையும் வழியான கருக் குழாயில் (Fallopian Tube) தடைகள், பிரச்சினைகள் இருக்கின்றனவா என்பதை அறிவதற்காக இந்தப் பரிசோதனை நடத்தப்படுகிறது. கருப்பையினூடாக எக்ஸ் கதிர் ஊடறுக்காத ஊடகம் (Radio Opaque Medium) ஒன்றை செலுத்தி - கருப்பை, குழாய்களின் நிலையை அறியமுடியும். கொஞ்சம் சங்கடமான பரிசோதனை என்றாலும் பக்கவிளைவுகளோ, வலியோ இல்லாதது. மலட்டுத்தன்மை பரிசோதனைகளில் (Subfertility Procedures) இவை முக்கியமானவை. எனவே பயமின்றி மேற்கொள்ளலாம்.

***

**கேள்வி:** பெண். வயது 23. திருமணமாகியுள்ளேன். எனக்கு உடலுறவு விருப்பமில்லை. உடலுறவு விருப்பங்களும் எழுவதில்லை. தனியாக தூங்குவதில் எனக்கு விருப்பம் அதிகம். கணவர் உடலுறவுக்கு ஆசைப்பட்டாலும், ஏதோ ஒரு காரணம் சொல்லி - விலகிவிடுவேன். அவர் அன்புடன் அணைப்பதையோ - முத்தமிடுவதையோ - வெறுக்கின்றேன். வெறுப்பு ஏற்படுகிறது அவர் கட்டியணைத்தால் மூச்சுத்திணறல் ஏற்படுகிறது. எமது திருமணம் - நிறைய குடும்ப பிரச்சினைகளின் மத்தியில் நடந்தது. இது எதனால் ஏற்படுகிறது. எனது ஹோர்மோன்களின் பிரச்சினையா? அல்லது எமது திருமணத்தின் போது நடைபெற்ற பிரச்சினைகளால் என்னுள் ஏற்பட்ட ஆத்திரம் கோபம் என்பவற்றின் வெளிப்பாடா? இதனால் மற்றைய விஷயங்களில் நல்லவரான எனது கணவரை ஒதுக்குவதனால் மனம் வேதனையடைகின்றேன். ஆலோசனை தரவும்.

**பதில்:** உங்களுக்கு பால் உணர்வு விஷயத்தில் வெறுப்புணர்வு ஏற்பட்டதற்குரிய காரணம் உங்களுக்கு நன்றாக தெரிந்துள்ளது. உங்கள் திருமணத்திற்கு முன்னர் நடைபெற்ற நிகழ்வுகளால் ஏற்பட்ட வெறுப்புணர்வு, குரோத மனப்பான்மை என்பன உங்களின் பால் உணர்வு எழுச்சிக்கு தடையாக இருக்கின்றன. தற்பொழுது இந்த விஷயங்களை - ஒரு புறம் ஒதுக்கிவிட்டு - 'மறப்போம் மன்னிப்போம்' என்ற மனநிலையை வளர்த்து - வாழ்க்கையை கொண்டு நடத்த வேண்டும். பிடிவாத உணர்வும் தன்மான பிரச்சினையும், சுயநலமும் உங்கள் பிரச்சினையை மோசம் வளர்க்குமே ஒழிய - தீராது என்பதை மனதிற் கொள்ளுங்கள். மணவாழ்க்கை என்பது 'ஒன்றை இழந்து ஒன்றைப் பெறுவது' என்ற அடிப்படையில் நடத்தப்பட வேண்டியது. இங்கு இழப்பது என்பது ஒரு கேள்வியல்ல. இழப்பதில்தான் வெற்றி ஏற்படும் புதிய தத்துவம் - இழப்பதில்தான் புதிய ஆனந்தம் வரும் என்பதின் - அர்த்தம் மணவாழ்க்கை ஒன்றில் மட்டும் தான் பெறமுடியும். விட்டுக்கொடுத்தல் என்று கூட இதனைச் சொல்லலாம். விட்டுக்கொடுத்தலால் - இலாபம் ஏற்படுமே ஒழிய - நஷ்டம் வராது. இழந்து இலாபம் பெறும் - புதிர்தான் இல்வாழ்க்கை - உங்கள் கணவரில் உள்ள நற்பண்புகளை நல்ல குணங்களை மட்டுமே நோக்குங்கள். அவரைப் புரிந்து கொள்ளுங்கள். காரியங்கள் மெல்ல மெல்ல சரியாகும். அப்படி முயன்றும் உங்களால் வெற்றி பெற முடியவில்லை என்றால் - தொழில் ரீதியாக உளவள ஆலோசகர் ஒருவரின் உதவி பெறவும்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெ

# தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் 28

## பெருமாள் பாதம் மலர் தூவி வழிபட்டுப் பேரானந்தப் பெருவாழ்வு பெறுவோம்



கணந்தோறும் காலம் கழிந்து கொண்டேயிருக்கிறது. சென்ற காலம் மீண்டு ஒருபோதும் வராது. உலக மக்கள் யாவர்க்கும் பிறக்கும்போதே அவரவர் இப்பிறவியில் இத்தனை சுவாசம் விடவேண்டியவர் என்ற நியதி இறைவனால் அருளப்பட்டு விடுகிறது. அதுவே நாங்கள் அனைவரும் உணர்ந்து அவரவர் நிலைக்கு ஆறுதலும் ஆசியும் கூறி தெளிவுநிலை கொள்ளும் தலைவிதி என்றும் தலை எழுத்து என்றும் கூறும் வார்த்தையாகும்.

'ஹரிணாபி ஹரேணாபி ப்ரம்மணாபி சுரைரபி
லலாட லிகிதா ரேகாபரிமாசட்ரும் நசக்யதே என்றபடி'

பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளாயினும் தலையெழுத்தை மாற்றியமைக்க முடியாது என்று விதியின் வலிமையின் மிகுதிப்பாடு கூறப்படுகிறது. எனவே ஊழ்வினையை வெல்லமுடியாதா மனித முயற்சி எல்லாம் வீணாவதா என்ற வினா எழுகிறது. இதற்கான விடையை வள்ளுவப் பெருந்தகை திருக்குறளிலே

'தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும்'

என்று கூறி விளக்குகிறார். யமன் கைப்பற்றிய சத்தியவானது உயிரை மீட்ட சாவித்திரியின் மனித முயற்சியும் பதினாறு வயதுக்கு மேல் வயதில்லை என்ற விதியை மாற்றி, என்றும் பதினாறு வயது என்ற சிரஞ்சீவித்துவத்தை அடைந்த மார்க் கண்டேயரது மனித முயற்சியும் இதற்கு சான்று பகர்கிறது.

பிறந்த ஒவ்வொருவரும் என்றோ ஒருநாள் இறப்பது நிச்சயம். அது எப்போது என்பதை ஒருவரும் திடமாக அறியமுடியாது. ஆகவே நாம் மண்ணில் பிறந்து விட்டோம். எங்களுக்கு ஏற்படுகின்ற இன்னல் துன்பங்களிலிருந்து விடுபட்டு மகிழ எல்லாம்வல்ல காத்தற் கடவுளாகிய வேங்கடேசவரதராஜப் பெருமாளின் இன்றைய தேர்த்திருவிழாவின் போது அவர் பாதம் மலர் தூவி வழிபட்டுப் பேரானந்தப் பெருவாழ்வு பெற வண்ணை ஸ்ரீவேங்கடவரதராஜப் பெருமாளின் பாதக் கமலங்களில் மலர்தூவி அர்ச்சித்து ஆசிகூறி வாழ்த்துகிறேன்.

'சர்வேஜனா சுகினோபவந்து
கோவிந்த நாம சங்கீர்த்தனம்
கோவிந்தா கோவிந்தா'

வண்ணை வேங்கடேசப் பெருமாள் தேவஸ்தான பிரதமகுரு,
இ.ரமணீதரக்குருக்கள்.

## ஆதீன மகா சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

எம்மையெல்லாம் காக்கும் கடவுளாக விளங்கும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் இன்று தேரிலே ஆரோகணிக்கிறார். துன்பங்களைத் துடைத்தொழித்து இன்பங்களை அருளத் தேரேரி வரும் தேவாதி தேவனான ஸ்ரீ வேங்கடேசன் ஸ்ரீ தேவி பூமிதேவி சமேதரராகக் காட்சிதரும் அழகை இன்று நேரிலே காணலாம்.

எல்லாம் வல்ல பெருமான், வழிபடும் அடியார்களின் வினை தீர்த்து ஆனந்தமயமான பேரின்பப் பெருவாழ்வை நல்கவேண்டும், என்று அவரது பொற்பாதக் கமலங்களைப் பணிந்து போற்றி வாழ்த்துகின்றோம்.

எல்லோரும் இன்புற்றிருக்க வண்ணை வேங்கடேசன் திருவருள் பாலிக்க வேண்டும். தேர்த்திருவிழா அழித்தலைக் குறிப்பதனால் எமது பாவ வினைகளை வேரோடு அழித்து ஒழித்துவிடவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

நா. ஸ்ரீரஞ்சன் (தலைவர்)
ஆதீனமகாசபை.



## வண்ணை வேங்கடேசன் தேர் வடம் பிடிப்போம் வாரீ

உலகைக் காக்கும் பரம்பொருளான ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியானவர் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலன செய்யும் பொருட்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் தலமான வண்ணை ஸ்ரீ வேங்கடேசன் ஆலயத்திலே இன் தேர்த்திருவிழா.

வழிபடும் அடியார்களின் இன்னல் போக்கி வளமான வாழ்வருளும் ஸ்ரீமத் நாராயணன் ஸ்ரீதேவி பூமிதே சமேதரராக இன்று சித்திரத்தேரிலே சிங்காரப் பவனி வரும் அழகிய திருக்காட்சியைக் காண்பதற்குப் பூர் ஜென்மத்திலே புண்ணியம் செய்திருக்க வேண்டும். இந்த வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் வருட தோறும் புரட்டாதி மாத அமாவாசையை அடுத்து வரும் திருவோண நட்சத்திர நாளைத் தீர்த்தோட்சவமா கொண்டு பத்து நாள் திருவிழா நடைபெறுகின்றது.

இந்துப் பக்தி பூர்வமான உற்சவத்திலே கொடியேற்றம், வெண்ணை தாளிச்சேவை, சயனச்சேவை, கரு சேவை, தேர், தீர்த்தம், திருக்கல்யாணம், ஆஞ்சநேயர் பொங்கல் என்பன மிகவும் விசேடமானவை- வானளா உயர்ந்து கம்பீரமாகத் தோற்றமளிக்கும் இராஜகோபுரம் கொண்ட இந்தக் கோயிலின் தல விருட்சம் பலா. இப் ப மரம் ஆலயத்தின் உட்பிரகாரத்தில் மகாலட்சுமியின் சந்நிதிக்குப் பக்கத்தில் குளிர்ச்சியோடு காட்சி தருகிற

அத்துடன் ஸ்ரீ சந்தான கோபாலர் சந்நிதியும் ஸ்ரீ வேணுகோபாலன் சந்நிதியும் ஸ்ரீ ராமர் லக்ஸ்மணர், சீதாதே அனுமன் சந்நிதியும் ஸ்ரீ ஆண்டாள் சந்நிதியும் அழகாக அமைந்திருக்கிறது.

முக்கியமாக புரட்டாதிச் சனிக்கிழமைகளில் எள் தீபம் ஏற்றும் வகையில் நவக்கிரக சந்நிதியும் முறைய கட்டப்பட்டிருக்கின்றது.

மேலும் -

ஸ்ரீராம தூதுவனான ஆஞ்சநேயர் சந்நிதியும் வசந்த மண்டபத்துக்கருகில் அழகாக வடிவமைக்கப் பட் ருக்கின்றது.

இன்றைய தேர்த் திருவிழாவில் பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் கலந்துகொண்டு கண்ணன் கீர்த்தனைகளை பஜனை பாடிக்கொண்டும் ஆனந்தக் கூத்தாடிக் கொண்டும். பக்தி பூர்வமாக வழிபாடியற்று கள். ' ஓ! ஆதி மூலமே' என்று ஓலமிட்டலறிய யானையை முதலை வாயினின்றும் மீட்டருளிய கண்ண பரம மாவே! எங்களது கஷ்டங்களையும் துன்பங்களையும் தீர்க்கும் பொருட்டு இன்று தேரேறி வருகின்றா என்று கூறி ' கோவிந்தா! கோவிந்தா!!' என்று கோஷம் எழுப்பும் பக்தர் கூட்டத்தை இங்கே காணலாம்.

மஹோற்சவத்தில் தேர்த்திருவிழா அழித்தலைக் குறிப்பதாகும். ஆகவே வண்ணை ஸ்ரீ வேங்கடேச வ ராஜப் பெருமாள் எங்களது துன்ப துயரங்களை வேரோடு அழித்து எம்மைக் காப்பதன் பொருட்டு இன்று சித்தி தேரேறி அற்புதக் காட்சி அளிக்கின்றார்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த ஆலயம் ஈழத்தின் விஷ்ணு கோயில்களில் ஒன்றாகும். பண்டாரவளை செட்டிப் பிள்ளைகள் எனப்படும் பக்த மார்க்கண்டேய பத்மசாலிக் கோத்திர செட்டிமார் பரம்பரையினர பரிபாலிக்கப்பட்டு வரும் இந்தப்பெருமாள் கோயிலில் வைகாசன முறைப்படி கிரியைகள் நடைபெ கின்றன. சநாதன தர்மம் என்னும் இந்து சமயப் பிரிவுகளில் ஒன்று வைஷ்ணவம். ஸ்ரீமத் நாராயணன் கட ளாக விளங்கும் இதில் பாஞ்சராத்திரம், பாகவத மதம், சாத்வாத மதம், ஏகாந்திய தர்மம் என்றுள்ள பெ களுடன் நாலாயிரம் திவ்ய பிரபந்தம் புகழும் பெருமையும் உண்டு.

பிருந்தாவனம், கோகுலம், துவாரகை முதலிய இடங்களில் கிருஷ்ணனாகவும் திருப்பதியில் வேங்க சலபதியாகவும் சிதம்பரத்தில் ஸ்ரீகோவிந்த ராஜனாகவும், ஸ்ரீ ரங்கத்தில் ரெங்கநாதனாகவும் மதுரையில் அ கராகவும் திருவனந்தபுரத்தில் ஸ்ரீ பத்மநாபனாகவும் வீற்றிருக்கும் திருமாள் இன்று வண்ணையில் தேர் வலம் வருகின்றான். அந்தத் தேர் வடம் பிடித்திழுத்தால் சொர்க்கத்திலே ஓரிடம் பிடிக்கலாம் என்று கருதப் கின்றது. ஆகவே, இன்றைய இரதோற்சவ நாளில் பெருமாளைச் சிந்தித்து வந்தித்துச் சேவித்து மனமு வழிபாடியற்றி வணங்கிப் போற்றித் துதித்துப் பேரானந்தப் பெருவாழ்வுக்கு காக்கும் கடவுளான வேங்க சன் அருளினை வேண்டித் துதிப்போமாக..

சைவப் புலவர், இராசையா ஸ்ரீதர


அசல் 22 கரட்டில் உத்தரவாதத்துடன்
குறித்த தவணையில் செய்து பெற்றிட
**நூரணி நகை மாடம்**
1/5, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**வேல் முருகன் வாணிப நிலையம்**
தற்காலிக நவநாகரிக கட்டடங்களுக்கு ஏற்ப சகல விதமான வர்ணப் பெயின்ட் வகைகள் சுண்ணாம்பு கட்டடப் பொருள்களின் விற்பனையாளர்.
56A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 9437

MC COMPUTERS
**MICRO Computers**
Computer Systems Advice
Integration and Maintenance Center
Mobile Phone Repairing & Un Lock
Software Installation
T.P.: 021 222 4483,0777605508
Fax; 021 222 4483
349, Clock Tower Road,
(Wellington Junction) Jaffna.

**Modern Tailors**
**மொடேன் ரெயிலேஸ்**
ஆடவர், பெண்கள், சிறுவர்களுக்கான நவநாகரிக ஆடைகள் அனைத்தும் தைத்துக் கொடுக்கப்படும்.
140, கஸ்தூரியார் வீதி, யாழ்.
140, Kasthuriar Road,Jaffna.

**சிறி நதியா**
நகை மாளிகை அன்
டிஜிற்றல் கலர் லாப்
இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2709
இல.56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 6744
இல.108A, லக்சன் பிளாசா கட்டடம்
நாவலர் வீதி, யாழ்.
தொ.பே: 021 222 8412

**ஆசைப்பிள்ளை**
அன் சன் நகைமாடம்
22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.
இல.10, பஸ் நிலையம் முன்பாக,
சங்கானை.

யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்
**எரிக்கணேஸ்**
மூக்குக் கண்ணாடியகமும் பல்கட்டும் இடமும்
564,566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 2486
கிளைகள்: பழைய பொலிஸ் நிலையம் முன்பாக
இல.80, கே.கே.எஸ் வீதி, கன்னாதிட்டி,
இல.91, கே.கே.எஸ். வீதி கொக்குவில் சந்தி, கொக்குவில்

**க.கு.கந்தையாபிள்ளை**
**அன்சன்ஸ்**
பல்பொருள் வியாபார நிலையம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.




**NEW TONE ELECTRICAL**
கொழும்பு விலையில் தரமான மின் பாவனைப் பொருள்கள்,
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
440, 442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2037.

பஜாஜ் CT 100, டிஸ்கவரி 135CC பஜாஜ் 180CC, பல்சர் 180CC, SAFART 45, 49CC, யப்பான் மோட்டார் சைக்கிள் C-50, MD 90 ஆகியவ பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
**S.P.N.மோட்டோர்ஸ்**
145, ஸ்ரான்லி றோட்
யாழ்ப்பாணம்.

புகைப்படச் சுருள்கள் அனைத்தும் உடனுக்குடன் பிரதியாக்கம் செய்து பெற்றுக்கொள்ள
**சுப்பஸோ ஸ்ருடியோ அன் டிஜிற்றல் கலர் லாப்**
198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பெருமாள் கோயில்

# 28.09.2009

## வண்ணை வேங்கடேசனுக்கு ரதோற்சவம்



''ஈழத்து திருப்பதி'' எனப் போற்றி சிறப்பிக்கும் ஆலயம் வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில். புரட்டாதி மாத ''திருவோண'' நட்சத்திரத்தை இறுதியாகக் கொண்டு பத்துத் தினங்கள் திவ்வியமான மஹோற்சவம் இவ்வாலயத்தில் நடைபெறுதல் மிகவும் சிறப்பானது.

**''....திருவோணத் திருவிழாவில் படுத்த பைந் நாகனை....''** எனப் பல்லாண்டு பாடி மகிழ்கின்றார். பெரியாழ்வார்.

108 திவ்ய தேசங்களில் திருப்பதி வேங்கடேசப் பெருமாள், காஞ்சி வரதராஜப் பெருமாள், ஸ்ரீரங்கம் ரங்கநாதப் பெருமாள் ஆகிய மூன்று ஆலயங்களும் மிகவும் பிரசித்தமானவை. அநேக ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப்பட்ட மூர்த்திகள் இம்மூன்று மூர்த்திகளையும் ஒருங்கே ஒரேசமயத்தில் வழிபடக்கூடிய தலம் வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம். இவ்வாலயத்தின் கருவறையில் வரங்களை வாரிவழங்கும் வரதராஜப் பெருமாளும், மக்களின் பாவங்களைப் போக்கும் வேங்கடேசப் பெருமாளும் ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதராக அருள்பாலிக்கின்றனர். தென்திசை நோக்கி மோக்ஷக் கடவுளாகிய ஸ்ரீரங்கநாதப் பெருமாள் அனந்த சயனத்தில் அருள்புரிகின்றார்.

சரணாகதி தத்துவத்தை விளக்கும் வைஷ்ணவ வழிபாட்டில் பெருமாளின் பாத தரிசனமும், சடாரி வைத்து ஆசி வழங்குதலும் மிகவும் சிறப்பானதொன்று. பெருமாளின் பாதங்களிலேயே ஒன்பது கிரகங்களும் அடங்கி இருப்பதனால் கிரஹ தோஷ நிவர்த்திக்கும், புரட்டாதி சனிவார வழிபாட்டிற்கும் மிகவும் சிறப்பான தலமாக இவ்வாலயம் போற்றப்படுகின்றது.

மக்களின் குறைதீர்க்கும், குறைவொன்றுமில்லா கோவிந்தப் பெருமாள், வண்ணை வேங்கடேசனுக்கு இன்றையதினம் ரதோற்சவமாகும். மக்களின் பாவங்களைச் சுட்டெரித்து அகங்காரங்களை அழித்து, தேரேறி வந்து அருள்புரிய எல்லாம் வல்ல வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாளைப் பணிந்து ஆசி கூறுகின்றேன்.

''கோவிந்த நாம சங்கீர்த்தனம்''

பிரம்மஸ்ரீ சாமி சுந்தரேசக் குருக்கள், மகோற்சவ குரு,
வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள்கோயில்.

## நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி



யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் சந்நிதியில் இன்று இரதோற்சவம். காத்தற் கடவுளான ஸ்ரீ மகா விஷ்ணுவானவர் ஸ்ரீதேவி பூமி தேவி சமேதரராக அலங்காரத் தேரிலே அழகுப் பவனி வருகின்ற அருட்காட்சியை இன்று வண்ணை பெருமாள் கோயிலில் காணலாம்.

அழகு இரதமானது அடியார் புடைசூழ அசைந்து வருகின்ற அற்புதக் காட்சி மனதை உருக்கிடும் ஆனந்தக் காட்சியாகும். இன்றைய நன்னாளில் எல்லாம் வல்ல திருமாள் ஈழம்வாழ் மக்கள் எல்லோருக்கும் சிறப்பான ஆனந்தமயமான நல்ல வாழ்வை நல்குதல் வேண்டும் என உள மாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குவதில் பேருவகை அடைகின்றோம்.

பக்தரட்சக சிஷ்ட பரிபாலனஞ்செய்கின்ற பரந்தாமன் இனியாவது மங்கள கரமான மகிழ்ச்சியோடிணைந்த அமைதியான சமாதான வாழ்வுமலர அருள் பாலிக்க வேண்டும் என்று வாழ்த்தி வணங்கிச் சேவித்து நிற்கின்றோம்.

**'என்றும் வேண்டும் இன்ப அன்பு'**

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம், ஆதீனகுருமுதல்வர்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.


புதிய பழைய பாடல்கள், விநியோகத்தர்களும் வெளியிடுபவர்களும்
**லக்சன் வீடியோ**
156, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**இயந்திரம்ஸ்**
சிறந்த முறையில் கிறாங்சாப், சிலிண்டர் போறிங் செய்து கொடுக்கப்படும்.
395, மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்.

**சேகர் குளிர் ஊற்று**
சகல விதமான குளிர் சாதனப் பெட்டிகளும், குளிரூட்டிகளும் சிறந்த முறையில் திருத்த வேலை செய்து தரப்படும்.

நம்பிக்கை, நாணயமிக்க தங்க நகைத் தேவைகளுக்கு
**கிருஷ்ணா நகை மாளிகை**
இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை நிறுவனம் **கிருஷ்ணா அடகு கடை**
இல.370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**யாழ்.M.P.C.S யாழ்ப்பாணம்**
சகல விதமான உணவுப்பொருள்கள், நானாவிதப் பொருள்கள், கட்டடப்பொருள்கள் தரம், ரகம் நிறைவுடன் சகல கூட்டுறவு நகர் விற்பனை நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

PC PARADISE IIS COMPUTERS
**PC Paradise**
61, Clock Tower Road, Jaffna.
Tel.: 021 222 9579 T.P.: 0777 271220

**கஜன் மோட்டோர்ஸ்**
54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

அர்ச்சனைப் பொருள்கள், பழ வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
**எஸ்.சுதாகர்**
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**வஜிதா**
மோட்டார் சைக்கிள் திருத்தகமும், சேவிஸ் சென்ரரும் பெயின்ரிங் அன் பிளாஸ்ரிக்
இல. 512, கே.கே.எஸ்.வீதி மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்.

**NATIONAL ELECTRONICS**
Radio, TV, Video Deck, Electronic Equipments Repairs & Sales
372, Clock Tower Road, Jaffna.
T.P.: 021 2226434, 0775792244


# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்



### தனுசு
(நட்சத்திரங்கள் : மூலம், பூராடம், உத்திராடம் 1)

நினைத்ததை முடிக்கும் ஆற்றல் பெற்ற தனுசு ராசி அன்பர்களே!

ஐந்து வருடமாகக் கண்டச்சனி, அட்டமத்துச்சனி என்று மிகவும் கஷ்டப்பட்டு விட்டீர்கள். ஒரு சில நல்ல விடயங்கள் நடந்திருந்தாலும், அதை நிறைவேற்றுவதற்கும், அந்த நல்லவை நடந்தபிறகும் கூட ஏற்பட்ட மனவருத் தங்களுக்கும் இனிமேல் முடிவு கிடைக்கும். உங்கள் ராசிக்கு 9 ஆம் இடத்திலே சிம்மராசி யிலே சனி பெயர்ச்சியாகி இருக்கிறது. தனது 3, 7, 10 என்ற இடங்களின் பார்வையாலே, ராசிக்கு 11, 3, 6 என்ற இடங்களை பார்க்கின் றார். இதனால், இனிமேல் நடப்பதெல்லாம் சாதகமாகத்தான் இருக்கும். உங்கள் பேச்சை இன்னும் சீர்திருத்தணும். இந்த பேச்சாலே நல்லதும் நடக்கும், கலகமும் உண்டாகும். சமூகப் பணியிலே ஆர்வமுடன் செயல்படுவீர்கள். வீடு, மனை, வாகன வகையில் திருப்தி கரமான நிலைமை இருக்கும். புத்திரர்கள் நீங்கள் சொன்னதைக் கேட்டு நல்ல பெயர் வாங்கித் தருவார்கள். அவர்கள் யோகத்தாலே புதி தாகச் சொத்து வாங்குவதற்கு வாய்ப்பு இருக் கிறது.

எதிரிகளோட கெடுதல் முயற்சி பலமிழந்து போகும். அவர்கள் தலைகுனியுற வகை யிலே சந்தர்ப்பம் ஏற்படும். உடல்நலம் நன் றாக இருக்கும். கடன், வழக்கு, குடும்ப விவ காரங்களிலே சமாதானம் ஏற்படும். கண வன், மனைவி ஒற்றுமையோட சந்தோஷமா இருப் பார்கள். நண்பர்கள் நட்புக்கு இலக்கணமாகத் திகழ்வார்கள். கடந்த காலத்திலே இருந்த சிரமங்களெல்லாம் விலகி ஓடிப் போய்விடும். மூத்த சகோதரர்களின் உடல் நிலைபாதிக்கும். அவர்களுடன் செயல்பாடு பிடிக்காமல் போகும். நீங்கள் வழிகாட்டினாலும் ஏற்றுக் கொள்வார்களா என்று சந்தேகம்தான்! ஆதாய பணவரவை சேமிச்சு வையுங்க. வீண் செலவு எதிர்காலத்துக்கு நல்லதில்லை. வெளிநாடு வேலை கிடைக்க வாய்ப்பிருக்கு. ஆனால், பணச் செலவு அதிகமா இருக்கும். திருமண முயற்சி செய்றவங்களுக்கு அனுகூல பலன் உண்டு.



**பணியாளர்கள்:** அரசு, தனியார் துறையில் வேலை செய்பவர்களின் தடைகள் விலகி சிறப்பாக பணிசெய்வாங்க. எதிர்பார்த்த சலுகை, பணக்கடன் இலகுவில் கிடைக்கும். சக பணி யாளர்கள் ஒத்துழைப் பார்கள். கைவினைப் பொருள் தயாரிப்பு, சினிமாத்துறை, நிதி நிறுவனம், கல்விப்பணி, வருமானவரி, வணிக வரித்துறையிலே இருக்கிறவர்களுக்கு மிக வும் சிறப்பாக இருக்கும். சலுகை, சம்பள உயர்வு, பாராட்டு என்று சந்தோஷமா இருப்பார்கள். மொத்தத்திலே எல்லாருக்கும் பணவரவு நல்லாயிருக்கும். உடல்நலம் நல்லாயி ருப்பதால் வேலையிலே கவனம் செல்லும். பணம் வருகிறது என்பதினால் அதிக பயன் தராத பொருட்களை வாங்கி அவஸ்தைப்படாமல், புதிய மனை வாங்குவதற்கு முயற்சி பண்ணுங்கள். இது லாபகரமா அமையும்.

**பெண்கள்:** அரசு, தனியார் துறையிலே பணி செய்பவர்கள், வேலையிலே இருக்கிற நுணுக்கங்களை நன்றாகப் புரிந்துகொண்டு சீக்கிரமே வேலையை முடித்து அதிகாரிக ளோட நல்ல அபிப்ராயத்தை சம் பாதிப்பீர்கள். சலுகை, கடன் வசதி தாராளமா கிடைக்கும். சக பணியாளர்கள் நட்புறவோடு இருப் பார்கள். குடும்பத்தை கவனிக்கிறவர்கள் கணவரை அனுசரித்து நடந்து, சந்தோஷமா இருப் பார்கள். பண வசதியும் நல்லாயிருக்கும். ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். சுய, கூட் டுத்தொழில் செய்பவர்கள் புதுப்புது ஆர்டர் தொடர்ச்சியாகக் கிடைத்து பணத்தைக் குவிப் பீர்கள். புதிய கிளை ஆரம்பித்து தொழிலை விருத்தி செய்வீர்கள்.



### விருச்சிகம்
(நட்சத்திரங்கள் : விசாகம் 4, அனுஷம், கேட்டை)

நேர்மையான செயல்பாடுடைய விருச் சிக ராசி அன்பர்களே!

உங்கள் ராசிக்கு பத்தாம் இடமான சிம்ம ராசிக்கு பெயர்ச்சியாகியிருக்கிற சனீஸ்வரன், தன்னோட 3, 7, 10 என்ற பார்வையாலே, ராசிக்கு 12, 4, 7 என்ற இடங்களை பார்க்கி றார். கடந்த காலங்களில் வாழ்க்கை வசதி திருப்திகரமாக இருந்தாலும் கூட அதைப் பயன்படுத்துவதற்கு ஆர்வக்குறைவு இருந்திருக்கும். இப்போது, அதையெல்லாம் அனுபவிப்பதற்கு ஆசை பிறக்கும். பேச்சிலே இருந்த கடுமை குறைந்து, அமைதி பிறக்கும். இது எதிர்கால திட்டங்களுக்கு மற்றவர்களு டைய ஒத்துழைப் பை வாங்கித்தரும். பணம் வருவதும் போவதும் தெரியாமல் இருந்தீர் கள். இனி அதை சேமிக்கணும் என்ற எண்ணம் வளரும்.

வீடு, மனையில் இப்போது கை வைக்க வேண்டாம். இருப்பதே போதும். திட்டமிடா மல் அதிலே கை வைத்தால், தேவையில்லாம செலவழியும். தாய்வழி உறவினர்கள் இடம் கருத்து வேறுபாடு ஏற்படற சந்தர்ப்பம் இருக்கு. பயணங்களில் பாதுகாப்பாக இருக்க வேண்டும். புத்திரர்கள் திறமையா செயல் பட்டு நல்லபேர் வாங்கித் தருவாரர்கள். அவர் கள் தங்கள் துறையிலே சாதனை நிகழ்த்து வதற்கும் வாய்ப்பிருக்கு. பூர்வ சொத்து தொடர்பாக இருந்த இடைஞ்சல்கள் தானாக விலகும். உடல்நலம் தெம்பாயிருக்கும். எதிரி, உங்களுடன் உறவாட வந்தாலும், சாதகமா, பாதகமா என்று பார்த்து அவர்களை ஏற்றுவிட்டால் போதும்.

கணவன் மனைவி ஒற்றுமையில் நெருடல் இருக்கத்தான் செய்யும். அனுசரித்துப் போவது இரண்டு பேருக்குமே நல்லது. உங்கள் விடயத்தை நீங்களே பேசித் தீர்க்கவேணும். இதிலே சொந்தக்காரர்களை நுழையவிட்டால், அது தொந்தரவைத்தான் தரும். நண் பர்களோடு பேசலாம்; ஆனால், விளை யாட்டுத்தனமா பேசினா அது வினை யாக முடியும். கவனம்... கவனம். தந்தை வழி உறவினர்கள் கிட்டே உங் களைப் பற்றிய நல்ல அபிப்ராயம் வளரும். தொழில், வியாபாரம், உத்தியோகம் சார்ந்த வகையில் ஓரளவுக்கு லாபம் எதிர்பார்க்கலாம். அவ்வப் போது குறுக்கீடுகள் வரத்தான் செய் யும். இதை யெல்லாம் வென்றுவிட் டால் அப்புறம் லாபம் தான்.

மூத்த சகோதரர்கள் நம்பிக்கையு டன் செயல்பட்டு முன்னேறுவார்கள். ஆதாய பணவரவு, நிலுவை பணம் வசூலாவதில் இடைஞ்சல் இருக் கும். வெளிநாடு வேலைவாய்ப்பு கிடைச்சாலும், வருமான வாய்ப்பு குறைச்ச லாகத்தான் இருக்கும். நல்லவேலை என்று தெரிஞ்சா போகலாம். ஏற்க னவே, வெளிநாட்டிலே வேலை செய்பவர் களுக்குப் பணியிடத்திலே அவப் பெயர் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. கவனம்.

**முருகானந்தா சுவாமி**

**பணியாளர்கள்:** அரசு, தனியார் துறையிலே இருக்கிறவர்களுக்கு வேலை யில் கவனம் குறையும். உங்கள் திற மையைப் பொறுத்துதான் வருமா னத்தை எதிர்பார்க்க முடியும். சக பணியாளர்கள் மோதுவார்கள். நீங்கள்தான் பொறுமையாப் போகவேண் டும். குறிப்பா டிரைவர், உணவு பொருள் சார்ந்த பணியிலே இருக்கிறவர்கள், வேலை செய்பவர்களுக்கு அபராதம் விதிக்க வாய்ப்பிருக்கு. கவனமில்லாட்டி உழைச்ச காசும் வராம போயிடும். உடல்நலம் ஒத்துழைப்பதாலே சோம்பலின்றி எதையும் செய் தால் முன்னேற்றமுண்டு. தகுதிக்கு மீறி கடன் வாங்கி, செலவழிக்கிற எண்ணமெல்லாம் வரத்தான் செய்யும். சனீஸ்வரன் வைக்கிற இந்தப் பரீட்சையின் வெற்றி உங்கள் கையிலே தான் இருக்கு.

**பெண்கள்:** அரசு, தனியார் துறையிலே இருக்கிறவர்கள் சுற்றுச் சூழ்நிலை அறிந்து பேச வேண்டும். வேலைப்பளு கூடும். கூடினாலும் செய்துதானே ஆகவேணும். நேரம் காலம் பார்க்காமல் வேலை செய்ய வேண்டியிருக்கும். அலுவலகத்தில் விண்ணப்பித்த கடன் கிடைக்கும். சக பணியாளர்களோட கருத்து வேறுபாடு ஏற்படும். குடும்பத்தைக் கவனிக்கும் பெண்களுக்கு பணவரவு சுமாரா இருக்கும். கணவரோட கருத்து வேறுபாடு, உறவுக்காரங்களோட தலையீடு என்று சிரம மான காலகட்டம்தான். கொஞ்சம் பொறுமை யாகப் போங்கள். சுய, கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு பெரியலாபம் எதிர்பார்க்க முடியாது. அளவான மூலதனம் போதும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## கூறுவிலை கோரல்

யாழ்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி பதிவு மற்றும் பரீட்சை அலகு அமைந்துள்ள பரமேஸ்வரா ஒழுங்கையிலுள்ள காணியில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் தனிமாடி பரீட்சை மண்டபத் தொகுதி (கட்டடப் பரப்பளவு ஏறத்தாள 700 சதுர மீற்.) இக்கான கட்டட வரைபடங்கள் வரைந்து, நல்லூரர் பிரதேச சபைக்குச் சமர்ப்பித்து, உரிய அனுமதி பெற்று பின்னர் கட்டட நிர்மாண முடிவில் அமைவுச் சான்றிதழ் பெறுதல் வேலைக்கான கூறுவிலைகள் தகுதி வாய்ந்த நிறுவனங்கள்/ தனிநபர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

இவ்ற்றுக்கான குடிசார்/நிர்மாண விதானிப்பு, கணிய அளவுச்சிட்டை, ஒப்பந்த ஆவணங்க்ள் என்பன யாழ்.பல்கலைக் கழக வேலைகள் எந்திரவியலாளர் அவர்களால் மேற்கொள்ளப்படும்.

ஆங்கில மொழியினாலான கூறுவிலைப்படிவம் மீளளிக்கப் படாத வைப்புப்பணம் ரூபா 500/= (ஐந்நூறு மட்டும்) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் காசாளர் கரும பீடத்தில் செலுத்தியமைக்கான பற்றுசீட்டைச் சமர்ப்பித்து யாழ்.பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளரிடமிருந்து 06.10.2009 வரை பெற்றுக்கொள்ளலாம்.

கூறுவிலைப்படிவங்கள் 09.10.2009 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன்பதாக வேலைகள் எந்திரவியலாளர், பராமரிப்புப் பகுதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழம், த.பெ.இல.57, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும் அல்லது பராமரிப்புப் பகுதியில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் இடப்படவேண்டும்.

கூறுதாரர் தேவைப்படின் கூறுவிலைப் படிவங்களை யாழ்ப் பாணப் பல்கலைக்கழக பராமரிப்புப் பகுதியில் கட்டணம் ஏதுமின்றிப் பரிசீலிக்க முடியும் என்பதோடு மேலதிக விவரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளரிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

த.பெ.இல.57, யாழ்ப்பாணம். (சி/561152)

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## நூல் வெளியீட்டு விழா

ஊரெழு வேலனின் "நிகழ்வுகளும் நினைவுகளும்'' நூல்வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஊரெழு கணேச வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஊரெழு கணேச வித்தியாசாலையின் அதிபர் சி.திரிகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகக் கலாநிதி க.குணராசா, சுண்ணாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.


நிகழ்வில் வெளியீட்டுரையினைக் கலாநிதி க.குணராசாவும், ஆய்வுரையினை யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி தி.வேல்நம்பியும் வாழ்த்துரையினை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனும் நிகழ்த்தவுள்ளனர். (9)

## வீடு விற்பனைக்குண்டு

நீர்வேலி மேற்கு, கரந்தன் சந்திக்கு அருகில் 6பரப்புக் காணியுடன் சகல வசதிகள் உடைய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு : ச.பார்த்தீபன்,
0777 238275
(89216)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25 ★ 03 ★ 1947



மறைவு
21 ★ 09 ★ 2007

அமரர்
### தாமோதரம்பிள்ளை இராசநாயகம்
(உரிமையாளர், கிரியோன் கூல்பார், சாவகச்சேரி)
திதி: தசமி (28.09.2009)

ஈராண்டுகள் ஓடி மறைந்ததையா
ஈரவிழிகள் இன்னும் காயவில்லை
ஏங்கித் தவிக்கின்றோம் உம் பிரிவவால்
உம் நினைவுகள் என்றும் எம்மை விட்டு நீங்காது

"லாவண்யம்'',
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
(89231)

என்றும் நினைவுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## வடக்கின் வசந்தம் 180 நாள் வேலைத்திட்டம்
## விலைக் கேள்விகளுக்கான கோருதல்
## கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், யாழ்ப்பாணம்.

1. சுகாதார சேவைகள் திணைக்களம் வடக்கு மாகாணத்தின் சார்பில் தவிசாளர், மாவட்ட பெறுகைக் குழு அவர்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட வேலைகளுக்காக தகவுடைய மற்றும் தகைமைபெற்ற கேள்விதாரர்களிடமிருந்து மூடிக் குறியீடு செய்யப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன .

2.கேள்வியாளது தேசிய போட்டிக் கேள்வி நடைமுறைப்படி நடத்தப்படும்

3. ஒப்பந்த வழங்கலிற்குத் தகுதி பெறுவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்பு பட்டியலிடப்படாதவராகவும், நிர்மாண, பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகத்தில் கட்டட நிர்மாணத்துறையில் கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட வேலைகளுக்கான குறித்தபதிவை அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்த வழங்கலிற்கான தகைமையைப் பெறுவதற்குத் தேவையான தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தின் பகுதி 4 இலும் மேலதிக தகவல்கள் விலைக் கேள்வித்தரவிலும் (பகுதி 5) கொடுக்கப்பட்டுள்ளன.

5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை பிரதம பொறியியலாளர், பிரதம பொறியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (வமா),கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம். (தொ.பேசி, தொ.நகல் இல.0212222632) இலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் விலைக்கேள்வி ஆவணங்களை மேற்கூறிய முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பி.ப 4.00 மணிவரை பார்வையிடலாம்.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா 1,000.00 ஐ பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்ட டங்கள் திணைக்களம் (வமா), கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தில் பணமாகச் செலுத்துவதன் மூலம் 28.9.2009 ஆம் திகதியிலிருந்து 09.10.2009 ஆம் திகதி வரை காலை 09.00 மணியிலிருந்து பி.ப 3.30 மணிவரை ஆங்கில மொழியிலான பூரணதொகுதி கேள்வி ஆவணம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

7. கேள்விகள் இரண்டு பிரதிகளில் கீழ்வரும் மாவட்ட பெறுகைக்குழு முகவரியில் 12. 10.2009 ஆம் திகதியன்று பி.ப 3.00 மணி அல்லது அதற்கு முன்னராக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்கப்படல் வேண்டும். காலந்தாழ்த்திச் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகவே, வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமுகத்தில் திறக்கப்படும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பிடப்பட்ட செலவு (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான ICTAD தரம் (கட்டடங்கள்) | விலைக்கேள்வி பிணைப் பொறுப்பு | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் |
| JF/BD/GA/HS/16/2009 | மகப்பேற்று விடுதி அமைத்தல், பிரதேச வைத்திய சாலை, கொடிகாமம். | 12.52 | 5 மாதங்கள் | M 57 C 6 | 125,300.00 | 24.01.2010 |
| JF/BD/GA/HS/17/2009 | மகப்பேற்று விடுதி அமைத்தல், பிரதேச வைத்திய சாலை, வேலணை. | 13.25 | 5 மாதங்கள் | M 5 / C 6 | 132,600.00 | 24.01.2010 |
| JF/BD/GA/HS/18/2009 | மகப்பேற்று விடுதி அமைத்தல், பிரதேச வைத்திய சாலை, கரவெட்டி. | 13.25 | 5 மாதங்கள் | M 5 / C 6 | 132,600.00 | 24.01.2010 |
| JF/BD/GA/HS/19/2009 | வைத்திய அதிகாரிகளுக்கான அலுவலகம் நிர்மாணித்தல், தெல்லிப்பழை. | 10.35 | 4 மாதங்கள் | M 5 / C 6 | 103,600.00 | 24.01.2010 |
| JF/BD/GA/HS/20/2009 | வைத்திய அதிகாரிகளுக்கான அலுவலகம் நிர்மாணித்தல், ஊர்காவற்றுறை. | 9.13 | 4 மாதங்கள் | M 6 / C 7 | 93,300.00 | 24.01.2010 |
| JF/BD/GA/HS/21/2009 | வெளிநோயாளர் பிரிவு மண்டபம் புனரமைத்தல், ஆதாரா வைத்தியசாலை பருத்தித்துறை. | 8.34 | 3 மாதங்கள் | M 6 / C 7 | 83,400.00 | 24.01.2010 |
| JF/BD/GA/SS/06/2009 | மாவட்ட சிறுவர் நன்னடத்தை அலுவலகம் நிர்மாணித்தல், பண்ணை கட்டம்.1 | 6.56 | 4 மாதங்கள் | M 6 / C 7 | 65,600.00 | 24.01.2010 |

(சி/561177)

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள்திணைக்களம்,
வட மாகாணம்,
கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல - 021 222 2632

க.கணேஷ்.
தவிசாளர், மாவட்ட பெறுகைக் குழு/
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.


உ
சிவமயம்
## மங்களகரமான திறப்பு விழா
## KONKA MOBILES
## கொன்கா மொபைல்ஸ்



காலம்: இன்று (28.09.2009) திங்கட்கிழமை
நண்பகல்12.02 முதல் 1.32 வரையான
சுபவேளை

கௌரவ அதிதிகள் :
டப்சி.பி. கனகரட்ணம் (DUBSY P. KANAGARATNAM)
டியுலிப் என்.தளவத்தை (DULEEP N.DALUWATTE)
(MANAGING DIRECTOR, GEORGE STEUART
$ COMPANY (PVT) LTD)

விற்பனையை ஆரம்பித்து எம்மைக் கௌரவிப்போர்
ஈ.எஸ். பி. பே. நாகரத்தினம்
(ஈ.எஸ். பி. நிறுவனம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)
லயன் இ.ஜனக்குமார்
(தலைவர் , யாழ். வணிகர் கழகம்)
வைத்திய கலாநிதி வை. தியாகராசா
MEDI, AIDS PHARMACY & CLINIC)

தனிப்பட்ட அழைப்பாக அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்
உறவினர்கள் இவ் வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு
அன்புரிமையுடன் வேண்டுகின்றேன்.

தங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கும்
லயன். க.மு. பத்மநாதன் (PMJF) குடும்பத்தினர்,
வெஸ்கோ மருந்தகம், பணியாளர்கள்

KONKA MOBILES SUP DISTRIBUTORS:
MICRO PHONE SHOP No. 2 BUS STAND
CHAVAKACHCHERI
UIPOOSANI NEAR BUS STAND NELLIYADY.
TELE ZONE INUVIL, DAFI MULTI SERVICE
JAFFNA ROAD, MANIPAY


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் - கண்டி

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## விஞ்ஞானம் - I

**34-T-I**

01. பின்வரும் இழையங்களில் உயிரற்றது?
   1) புடைக்கலவிழையம். 2) வல்லுருக்கலவிழையம்.
   3) ஒட்டுக்கலவிழையம்.
   4) இவை எல்லா இழையங்களும் உயிரற்றவை.

02. கலத்தில் காணப்படும் கலப்புன்னங்கங்களையும் அவற்றின் தொழிற்பாடுகளையும் பற்றிய ஒப்புமை பின்வருமாறு காட்டப்படுகின்றது.
   A - இழைமணி - கலச்சுவாசம்.
   B - நிறமூர்த்தம் - புரதத்தொகுப்பு.
   C - இரைபசோம் - பாரம்பரிய இயல்புகளை கடத்தல்.
   D - பச்சையவுருமணி - ஒளித்தொகுப்பு.
   இவற்றில் சரியானது
   1) Aயும் Bயும். 2) Aயும் Dயும். 3) Bயும் Cயும். 4) Cயும் Dயும்

03. மனித சுவாசத்தொகுதியில் காணப்படும் பின்வருவனவற்றுள் சுவாசமேற்பரப்பாக கருதப்படுவது எது?
   1) வாதனாளி. 2) சுவாசப்பைகள்.
   3) மூக்குக்குழி. 4) சுவாச சிற்றறைகள்.

04. குறித்தவொரு தசை இழையம் வரிபோன்ற அமைப்புடையது. தசை கிளைத்து காணப்படும் உடலிலிருந்து அகற்றிய பின்னரும் சுருங்கக்கூடிய தன்மையை கொண்டிருக்கும். எனின், இத்தசை பின்வருவனவற்றுள் எது?
   1) மளமளப்பான தசை. 2) இதயத்தசை.
   3) வன்கூட்டுத்தசை. 4) இருதலை தசை.

05. பின்வருவனவற்றுள் எக்காரணி அதிகரிக்கும்போது தாவர இலைகளில் இருந்து வளிமண்டலத்திற்கு வெளியேற்றப்படும் நீராவியின் அளவு குறைவடையும்?
   1) ஒளி. 2) ஈரப்பதன். 3) வெப்பநிலை. 4) காற்று.

06. குமிழம் மூலம் இயற்கையாக பெருகும் தாவர இனம் பின்வருவனவற்றுள் எது?
   1) மரவள்ளி. 2) உருளைக்கிழங்கு.
   3) அன்னாசி. 4) வெங்காயம்.

07. டாவினது கூர்ப்புக்கொள்கையின் முக்கிய அம்சமொன்றாக அமையாதது பின்வருவனவற்றுள் எது?
   1) மாறல். 2) விகாரம்.
   3) மரபனு மாற்றம். 4) இயற்கை தேர்வு.

08. மனித உடலில் இருந்து அகற்றப்படும் பின்வரும் பொருட்களில் எது கழிவுப்பொருளாக கருத முடியாதது?
   1) சிறுநீர். 2) காபனீரொட்சைட்டு.
   3) மலம். 4) வியர்வை.

09. பின்வருவனவற்றுள் எது முலையூட்டிகளுக்கும் பறவைகளுக்கும் பொதுவான இயல்பு?
   1) தோலில் வியர்வை சுரப்பிகள் காணப்படுதல்.
   2) இதயம் நான்கு அறைகளைக் கொண்டிருத்தல்.
   3) தோலில் மயிர்கள் காணப்படுதல்.
   4) நேரடியாக எச்சங்களை ஈனுதல்.

10. கீழ்க்காண்பவற்றில் எது சமுதாயத்தைக் குறிக்கும் மிகச்சிறந்த வர்ணனை ஆகும்.
   1) ஒன்று சேர்ந்து வாழும் இனங்களின் ஒரு கூட்டம்.
   2) விலங்கினங்களும் இரை கௌவி வகைகளும் அடங்கும் ஒரு கூட்டம்.
   3) குறித்தவொரு வாழ்விடத்தில் வாழ்ந்துவரும் சகல அங்கிகளும்.
   4) குறித்தவொரு வாழ்விடத்தில் வாழும் சகல அங்கிகளும் அவ்விடத்திலுள்ள உயிர் சாரா காரணிகளும்.


11. மனிதன் குருதிச்சுற்றோட்டத் தொகுதியில் பின்வரும் எக்குருதிக்கலன் ஒட்சியேற்றப்பட்ட குருதியை கடத்துகின்றது.
   1) சுவாசப்பை நாளம். 2) மேல் பெரு நாளம்.
   3) கீழ் பெரு நாளம். 4) சுவாசப்பை பெருநாடி.

12. ஒரு சாகியத்தின் உணவு கூம்பத்தில் அடியில் காணப்படுவது பின்வருவனவற்றுள் எது?
   1) பிரிகையாக்கிகள். 2) இலையுண்ணிகள்.
   3) பச்சை தாவரங்கள். 4) இரை கௌவிகள்.

13. ஒரு மூல் அமோனியாவில் காணப்படும் நைதரசன் சதவீதம் பின்வருவனவற்றுள் எது?
   1) 48% 2) 74% 3) 82.28% 4) 93.28%

14. பின்வரும் தாக்கவகைகள் எது இரசாயனச் சேர்க்கை தாக்கமாகும்?
   1) $2KMnO_4 \rightarrow K_2MnO_4 + MnO_2 + O_2$
   2) $Mg + CuSO_4 \rightarrow MgSO_4 + Cu$
   3) $2Mg + O_2 \rightarrow 2MgO$
   4) $Zn + 2HCl \rightarrow ZnCl_2 + H_2$

15. பின்வரும் பரிசோதனைக் குழாய்களில் பெறப்பட்ட சமகனவளவு செப்பு சல்பேற்று கரைசலினுள் (நீல நிறம்) சமத்திணிவுடைய Mg, Zn, Fe, Cu என்பன இடப்பட்டு உள்ளன. எனின், இக்குழாய்/ குழாய்களில் நிறமாற்றம் ஏற்பட்டிருக்காது.




   A இல், மாத்திரம். 2) A இலும், C இலும்.
   C இலும், D இலும். 4) D இல் மாத்திரம்.

16. $^{23}_{11}X$ எனக்குறிக்கப்பட்ட மூலகமொன்றை பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது / சரியானவை பின்வருவனவற்றுள் எது? எவை?
   A - X என்ற மூலகம் 11 புரோத்தன்களைக் கொண்டிருக்கும்.
   B - X என்ற மூலகம் 11 நியூத்திரன்களைக் கொண்டிருக்கும்.
   C - X என்ற மூலகம் 23 புரோத்தன்களைக் கொண்டிருக்கும்.
   D - X என்ற மூலகம் 23 இலத்திரன்களைக் கொண்டிருக்கும்.
   இவற்றில் சரியானது / சரியானவை
   1) A யும் B யும். 2) Aயும் Cயும். 3) A மாத்திரம். 4) D மாத்திரம்.


17. கண்ணாடி மணல் பிரதானமாக காணப்படும் என எதிர்பார்க்கும் சேர்வை பின்வருவனவற்றுள் எது?
   1) ஏமறைற்று. 2) போட்சைட்டு. 3) இல்மனைற்று. 4) சிலிமனைற்று.

18. மக்னீசிய உலோக கீற்றுக்களும் ஐதரோகுளோரிக்கமிலமும் உமக்கு தரப்படுவதாகக் கொள்க. இவற்றினது இரசாயன தாக்கவீதத்தை அதிகரிக்கச் செய்வதற்கு பின்வரும் நடவடிக்கைகளுள் எது பிரயோசனம் அற்றது.
   1) மக்னீசிய கீற்றுக்களைத் தூளாக்கி இடுதல்.
   2) தொகுதியினது வெப்பநிலையைக் கூட்டுதல்.
   3) தொகுதியினது அமுக்கத்தைக் கூட்டுதல்.
   4) கலவையை நன்கு கலக்குதல்.

19. இறப்பரினது தகாத இயல்புகளை மாற்றியமைக்க இறப்பர் வல்கனைசுபடுத்தப்படும். இதற்காக பயன்படுத்தப்படும் இரசாயனப்பொருள்,
   1) போமல்டிகைட்டு. 2) சல்பர்.
   3) சோடியம் சல்பேற்று. 4) அமோனியம் ஐதரொக்சைட்டு.

20. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் திண்ம - திரவ பல்லின கலவை ஒன்று கிடைக்கப்பெறும்.
   1) சீனியை நீருடன் கலக்கும்போது. 2) சீனியை மாவுடன் கலக்கும்போது.
   3) மதுசாரத்துடன் நீர் சேர்க்கும்போது.
   4) நீருடன் தேங்காய் எண்ணெய் இடும்போது.

21. ஒரு முனை மூடிய ஒடுங்கிய குழாய் ஒன்றில் hmm நீளமுடைய இரச நிரலொன்றை இட்டு குழாய் தலைகீழாக வைக்கப்பட்டது. வளிமண்டல அமுக்கம் HmmHg எனின், சிறைப்படுத்தப்பட்ட வளி நிரலின் அமுக்கம் யாது?





   1) H + H 2) H = h 3) H - h
   4) மேற்குறித்த எல்லாம் பிழையானவை.

22. குறித்த சில இரசாயனத் தாக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   $A + B \rightarrow AB_3$
   $C + D \rightarrow C_2D$
   $A + D \rightarrow X$ எனின், இங்கு X ஆனது பின்வருவனவற்றுள் எதுவாக இருக்கலாம்?
   1) $AD_3$ 2) $A_3D_4$ 3) $A_2D_3$ 4) $A_2D$

23. உப்பு உற்பத்தியில் இரண்டாம் தொகுதி பாத்தியில் வீழ்படிவாக்கப்படும் பின்வரும் எவ்விரசாயன பதார்த்தம் சீமெந்து தயாரிப்பில் பயன்படுத்தப்படுகிறது?
   1) கல்சியம் காபனேற்று. 2) கல்சியம் சல்பேற்று.
   3) மக்னீசியம் குளோரைட்டு. 4) சோடியம் குளோரைட்டு.

24. பின்வருவனவற்றுள் சடத்துவ உலோக மொன்றாக கருதப்படக்கூடியது எது?
   1) சோடியம். 2) பொட்டாசியம். 3) வெள்ளி. 4) மக்னீசியம்.


25. இங்கு தரப்பட்டுள்ள கப்பித்தொகுதியின் வேகவிகிதம் யாது?



   1) 4
   2) 3
   3) 6
   4) 2


26. அலுமாரி ஒன்று அழுத்தமான தரை ஒன்றில் வைத்து 500N விசையை பிரயோகித்த போது மட்டுமட்டாக அசைகின்றது இவ்வலுமாரி கரடுமுரடான மேற்பரப்பில் 2m தூரம் அசைக்கும் முயற்சியில் அதே 500N விசை பிரயோகிக்கப்படுகின்றது. ஆயின், இங்கு பெறப்பட்ட வேலையின் அளவு,
   1) 1000Jol 2) 500J
   3) பூச்சியம். 4) பூச்சியமாக கூற முடியாது.

27. சுற்றில் A, B எனும் இரு ஒளிகாலும் இருவாயிகளும் ஒரு C எனும் மின்குமிழும் இணைக்கப்பட்டுள்ளன. இச்சுற்றிற்கு நேரோட்டம் ஒன்றைச்செலுத்தும்போது நடைபெறும் நிகழ்வுகளைப் பின்வரும் எவ்விடை காட்டுகின்றது?




   1) A, B, C எல்லாம் ஒளிரும்.
   2) A மாத்திரம் ஒளிரும்.
   3) B, C மாத்திரம் ஒளிரும்.
   4) A, B, C எதுவும் ஒளிராது.

28. பின்வரும் வேக - நேர வரைபை கருதுக. இவ்வரைபிற்கு பொருத்தமான செயற்பாடு பின்வருவனவற்றுள் எது?





   1) ஓய்விலிருந்து புறப்படும் வண்டி ஒன்றினது இயக்கம்.
   2) மரம் ஒன்றின் உச்சியிலிருந்து கீழே விழும் பழம் ஒன்றினது இயக்கம்.
   3) மாடிக்கட்டடம் ஒன்றிலிருந்து கீழ்நோக்கி எறியப்பட்ட கல்லின் இயக்கம்.
   4) கீழிருந்து மேல்நோக்கி எரியப்பட்ட கல்லினது இயக்கம்.

29. திரவமொன்றின் யாதேனுமோர் புள்ளியில் தொழிற்படும் அமுக்கத்தில் தங்கியிராத காரணி பின்வருவனவற்றுள் எது?
   1) திரவ ஆழம். 2) திரவ அடர்த்தி.
   3) ஈர்ப்பு ஆர்முடுகள். 4) பாத்திரத்தின் வடிவம்.

30. செப்பை அனோட்டாகவும், இரும்பை கதோட்டாகவும், செப்பு சல்பேற்றை மின்பகுப் பொருளாகவும் பயன்படுத்தி இரும்பின் மீது செப்பு முலாமிடும் சோதனை ஒன்றின்போது அனோட்டில் நடைபெறும் தாக்கம் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?
   1) ஒட்சிசன் வாயு வெளியேற்றப்படுதல். 2) செப்பு படிதல்.
   3) செப்பு கரைதல். 4) ஐதரசன் வாயு வெளியேறுதல்.

31. இரச வெப்பமானி ஒன்றினது வெப்பநிலை வாசிப்பு 30°C எனின், இப்பெறுமானத்தை பரனைற்றில் காட்டினால் பெறப்படும் அளவு பின்வருவனவற்றில் எது?
   1) 30°F 2) 86°F 3) 98°F 4) 303°F

32. ஒரு பொள் விற்தராசு ஒன்றைப் பயன்படுத்தி வளியில் நிறுக்கப்படின் 8N யும், அப்பொருள் நீரினுள் அமிழ்த்தி நிறுக்கையில் 6N யும் காட்டுகிறது. எனின், நீரினால் பொருளுக்கு வழங்கப்படும் மேலுதைப்பு,




   1) 8N 2) 6N
   3) 14N 4) 2N

33. குறித்த இயக்கச்சக்திக்கு சமனான அழுத்தச்சக்தியை உடையவாறு பறவை ஒன்று $5ms^{-1}$ வேகத்தில் பறக்கிறது. புவியீர்ப்பு ஆர்முடுகள் $10ms^{-2}$ எனக்கொண்டு பறவை பறக்கும் உயரத்தைக் காண்க.
   1) 200m 2) 100m 3) 25m 4) 125m

வளரும்.........

"2009 க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்காக பல மாவட்ட... ங்களால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பிரமாண்டமான படைப்பு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22
★
04
★
1949



மறைவு
23
★
10
★
2004

### அமரர் ஐயாத்துரை கந்தலிங்கம்

திதி:விஜயதசமி (28.09.2009)

அன்புடன் அரவணைத்து தென்புடன் கல்வி தந்து
பண்புடன் வாழவைத்த எம்மருமைத் தந்தையே!
எங்கள்வாழ்வுக்கும்வளர்ச்சிக்கும்
மெழுகுவர்த்தியாய் உருகி ஒளியூட்டிய ஆருயிர் அப்பா
என்றும் உங்கள் நினைவுடனும் உங்கள்
வழியிலுமே நாங்கள் அப்பா!
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

குப்பிளான் தெற்கு,
ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் துயரத்தின் மேல் துயரம்

தோற்றம்
13★09★1913

மறைவு
28★[illegible]★2009

### திருமதி செல்லத்துரை பாக்கியம்



அம்மா என்னை விட்டுப்பிரிந்த
அன்றிலிருந்து அழுது கொண்டேயிருக்கின்றேன்
மனம் நிம்மதியில்லாமல் இருக்கின்றது.
எனது தலை விதி இதுதான்.

இல.17/03, மருதடி லேன்,
யாழ்ப்பாணம்.

மகள்
S.T. சகுந்தலாதேவி

## கேதார கௌரி விரத ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 28

திருவண்ணை, கன்னாதிட்டி காளியம்பாள் ஆலயத்தில் கேதார கௌரி விரத நிகழ்வு இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு அம்பாளுக்கு விசேட அபிஷேகமும் தொடர்ந்து சிவலிங்கப் பெருமானுக்கு பூசைகள் நடைபெற்ற பின் காப்புக் கட்டும் நிகழ்வும் இடம்பெறும். (204)

## நயினாதீவில் 'மினி கோப்சிற்றி'

யாழ்ப்பாணம், செப். 28

புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நயினாதீவில் 'மினி கோப்சிற்றி' ஒன்றை இன்று திங்கட்கிழமை திறந்துவைக்கவுள்ளது.

சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி க.இராஜரெட்ணம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு புதிய 'மினி கோப்சிற்றி'யை திறந்து வைப்பார்.

நயினாதீவில் உள்ள சங்கத்தின் 18 இலக்கக் கிளையில் இப் புதிய 'மினி கோப்சிற்றி' திறந்து வைக்கப்படவுள்ளது. (1-204)

## மீசாலை கிழக்கில் சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், செப். 28

மீசாலை கிழக்கு சித்திரவேலாயுத ஆலய பரிபாலன சபையினர் பாடசாலை மாணவர்களுக்கிடையில் மாவட்ட மட்ட சமய அறிவுப் போட்டிகளை விரைவில் நடத்தப்படவுள்ளனர்.

போட்டிக்கான படிவங்கள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் அந்தந்த வலயங்கள் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

தரம் ஒன்று தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புக்களில் கற்கும் மாணவர்கள் இப் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியும்.

மாவட்ட மட்டத்தில் வகுப்பு ரீதியாக முதலிடம் பெறும் மாணவர்களுக்கு தங்கப் பதக்கமும் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படும்.

அத்துடன் வலய மட்டத்தில் வகுப்பு ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. (1-207)


## இன்று முதல்.....

சந்தை விலையில்.....

the SUNDAY TIMES ரூ.50/=

Vijay விஜய் ரூ.15/=

### எமது விற்பனை முகவர்கள்....

யாழ்ப்பாணம், பேருந்து நிலையம் - பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம், சிவன் கோவிலடி - உமா ஸ்ரோஸ்
யாழ்ப்பாணம், 4 ஆம் குறுக்குத்தெரு - R.இராமச்சந்திரன் நியூஸ் ஏஜென்ட்
நல்லூர், பருத்தித்துறை வீதி - சிவானந்த கபே
திருநெல்வேலி, பரமேஸ்வரா சந்தி - சிவன் ஸ்ரோஸ்
திருநெல்வேலி, அம்மன் வீதி - சுஜன் குறூப்
கொக்குவில், காங்கேசன்துறை வீதி - பாக்கியா ஸ்ரோஸ்
இணுவில், காங்கேசன்துறை வீதி - தனபாலசிங்கம் நியூஸ் ஏஜென்ட்
சுன்னாகம், மத்திய பேருந்து நிலையம் - துர்க்கா ஸ்ரேசனர்ஸ்
பண்டத்தரிப்பு, கீரிமலை வீதி - சிறி முருகன் புத்தகசாலை
சண்டிலிப்பாய், சீரணி சந்தி - R.S. Communications
மானிப்பாய், ஆலடிச் சந்தி - மெடிலாண்ட்
கோப்பாய், இருபாலை சந்தி - Lycky Fancy House
ஆவரங்கால், புத்தூர் - கிருஸ்ணா மல்டி சொப்
நெல்லியடி, கரவெட்டி - மொடர்ன்ஸ் ஸ்ரோஸ்
பருத்தித்துறை, பிரதான வீதி - கவிதா ஸ்ரோஸ்
சாவகச்சேரி, கண்டி வீதி - மணியம் ஸ்ரோஸ்
மீசாலை, புத்தூர் சந்தி, கண்டி வீதி - சுஜமுகன் ஸ்ரோஸ்
கொடிகாமம், பேருந்து நிலையம் - நியூ அருள்[illegible]

மேலதிக விபரங்களுக்கு 0714 943 854



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1125 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

துலாம் 03 07 13 37

25-09-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 3,905,800/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 219,236 | 20/- | 4,384,720/- |
| 2 இலக்கங்கள் | 20,076 | 40/- | 803,040/- |
| 1 இல. + லக்கினம் | 19,894 | 60/- | 1,193,640/- |
| 2 இல. + லக்கினம் | 1,861 | 200/- | 372,200/- |
| 3 இலக்கங்கள் | 537 | 1000/- | 537,000/- |
| 3 இல. + லக்கினம் | 50 | 10,000/- | 500,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,905,800/- | - |
| மொத்தம் | | | 8,390,600/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 261,662 | | 8,890,600/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,884,850/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காச வெற்றியாளர் முஜாஹிட் அவர்கள் திஹாரிய

கைத்தொலைபேசி வெற்றியாளர்: எம்.எம்.பீ.எஸ்.ஜயசேகர பத்தரமுல்ல

2009 செப்டம்பர் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| குருநாகல் | 500540539-3-39 |
| குருநாகல் | 500540216-6-12 |
| அம்பாறை | 500541987-4-41 |
| கம்பஹா | 500535555-4-38 |
| மாத்தறை | 500540041-2-49 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### மாணிக்கசிங்கம் தேவநேசன் நிறோஷன்

"ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும் தன் மகனை
சான்றோன் எனக் கேட்ட தாய்" எங்கு சென்றாயோ
என் மகனே சொல்வாயோ அவ்விடத்தை நானும்
வர நீயின்றி தவிக்கிறேன் - அம்மா

அண்ணா அண்ணா என அழுகின்றேன் என்
விம்மல் ஒலி உனக்குக் கேட்கவில்லையோ உன்
சொற்படி நடப்பேன் அண்ணா
நீ சென்ற இடம் பரதீஸ் என நிம்மதி அடைகின்றேன்.
- தம்பி

'சின்னப்பா வாசா'
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

ஓம் விராட் விஸ்வப்பரமனே நமக

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
09
★
12
★
1939



மறைவு
14
★
10
★
1994

### திருமதி பாலசிங்கம் சிவனேஸ்வரி

திதி : 28.09.2009

வாணியின் நாளில், வருகின்ற அன்னையே! உங்கள்
வசந்த நினைவுகளை, அரும்புகள் நுகர்கின்றோம்
கானமாய், தென்றலாய், கலங்கா நிலவாய் - நீங்கள்
வாழ்ந்த நாட்களை, வணங்கியே சுமக்கின்றோம்.

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிதரும் விஜயதசமி!


**நவராத்திரி பூர்த்தியை அடுத்து வரும் விஜயதசமி இன்றாகும். அதை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

சக்தி விரதங்களுள் ஒன்றான நவராத்திரி நாள்கள், விரத நாள்களாகவும், விழா நாள்களாகவும் அனுஷ்டிக்கப் பெறுகின்றமை ஒரு சிறப்பான அம்சமாகிறது. இந்த விரதமும் விழாவும் புரட்டாதி வளர்பிறைப் பிரதமை தொடக்கம் நவமி வரையான ஒன்பது நாள்கள் (நவமி= ஒன்பது) நடைபெற்று தசமியுடன் (பத்தாம் நாள்) முடிவடைகின்றது.

கோயில்களிலும் பாடசாலைகளிலும் மாத்திரமன்றிக் கல்வி சார்ந்த, தொழில் சார்ந்த அலுவலகங்களிலும் பிரதமை தொடங்கிக் கும்பம் வைத்துப் பூசை வழிபாடு செய்தும், பத்தாம் நாள் (விஜயதசமி) விசேடமான விழாக்கள் செய்தும் கொண்டாடுவர். கும்பம் வைத்து விரதமும், விழாவும் கொண்டாடுவது நவராத்திரியின் தனிச்சிறப்பு.

வீடுகளில் நவராத்திரிக்கொலு வைப்பார்கள். பொம்மைகளும் கடவுள்களின் உருவங்கள், படங்களும் கொலுவில் வைக்கப்படும்.

நவராத்திரி விரதத்தை மாணவர்கள் உட்பட மக்கள் அனைவரும் அனுஷ்டிப்பது வழக்கம். முதல் எட்டு நாள்களும் பகல் உணவைத் தவிர்த்து இரவில் பால், பழம், பலகாரம் என்பவற்றுள் ஏதாவது ஒன்றை அருந்தி, நவமியில் உபவாசமிருந்து, தசமியில் பாறணை செய்வர்.



கும்பம் வைத்து பூசை புரிவதால் நவராத்திரிப் பூசையை கும்பப் பூசை என்றும் சொல்வது வழக்கம். பெயருக்கேற்ப நவராத்திரி நாள்களில் மாலைப் பூசையும், விழாவும் சிறப்பாக நடைபெறும்.

முதல் மூன்று நாள்கள் வீரம் அல்லது வல்லமை வேண்டித் துர்க்கையையும், அடுத்த மூன்று நாள்கள் செல்வம் பெற வேண்டி இலக்குமியையும், கடைசி மூன்று நாள்கள் கல்விக்காகக் கலைமகளையும் சிறப்பாக வழிபடுவர்.

மாணவர்கள் புத்தகம், எழுதுகருவிகள் என்பவற்றைப் பூசையில் வைத்தும், தொழிலாளர் ஆயுதங்களை வைத்தும் வணங்கி, விஜயதசமியிலன்று அவற்றை எடுத்துப் பயன்படுத்துவர். தசமிப் பூசையை ஆயுத பூசையென்றும் சொல்வர்.

மேலும், விஜயதசமியில் புதிய வேலைகள் தொடங்குவதும் பிள்ளைகளுக்கு ஏடு தொடக்குதல் எனப்பெறும் வித்தியாரம்ப நிகழ்வும் நடைபெறும்.

தசமியில் தொடங்குகின்ற கருமம் வெற்றிகரமாக அமையும் என்ற நம்பிக்கை உண்டு. அதனால், புரட்டாதி வளர்பிறைத் தசமி நாளை விஜயதசமி என்று சொல்வர்.

அனுஷ்டித்து, தசமியில் ஆயுத பூசை முடித்தபின், தமது ஆயுதங்களைப் போருக்குப் பயன்படுத்தி வெற்றிபெற்றார்கள் என்றும் கதை உண்டு. வெற்றி மகனாகத் திகழ்ந்த அர்ச்சுனனுக்கு விஜயன் என்ற பெயரும் உண்டு என்பதை நாம் அறிவோம்.

**- மட்டுவில் நல்லதம்பி -**

மேலும், விஜயதசமியன்று, ஆலயங்களில் வாழைவெட்டும் நிகழ்வு நடைபெறுகின்றது. இதனை மாணம்பூ விழா என்றும் சொல்வர்.

தமிழ்நாட்டிலும், ஈழ நாட்டிலும் ஒன்பது நாள்கள் கொண்டாடப்பெறும் நவராத்திரி விழாவை, 'தசரா' விழாவாகப் பத்து நாள்கள் வட - இந்திய மாநிலங்களில் கொண்டாடுவர்.

மூன்று சக்தியரையும் இணைத்துப் பராசக்தியாகப் பாரதியார் இப்படிப் பாடுகின்றார்.

*மாதா பராசக்தி வையமெலாம் நீ நிறைந்தாய்!*

*ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே*

*ஏதாயினும் வழி நீ சொல்வாய் எமதுயிரே!*

*வேதாவின் தாயே! மிகப் பணிந்து வாழ்வோமே.* ✱

# விலங்கு விசர் நாய் கடித்தால் மரணம் ஏற்படுவது நிச்சயம்

விலங்கு விசர் நாய்கடி ஏற்பட்டால் மரணம் நிச்சயம். தடுப்பு மருந்து ஏற்றுவதன் மூலம் முற்றாகத் தடுக்கலாம். இந்நோயை விலங்கு விசர் நோய், நீர் வெறுப்பு நோய், றேபிஸ் எனவும் அழைப்பர். இந்நோய்க்கு சிறுவர்கள் முதல் முதியோர் வரை இலக்காகின்றனர். இந்நோய் இலங்கையில் நெடுங்காலமாக நிலவி வருகின்றது. (Endemic) அத்துடன் சுகாதாரத் துறையில் பாரிய செலவினத்தையும் ஏற்படுத்துவதால் இது ஒரு பாரிய சுகாதாரப் பிரச்சினையாக உள்ளது.

உலகளாவிய நிலையில் வருடம் தோறும் 55 ஆயிரம் இறப்புக்கள், பிரதானமாக ஆசியா, ஆபிரிக்காவில் ஏற்படுகின்றது.

ஆசியா - 31 ஆயிரம், ஆபிரிக்கா - 24 ஆயிரம்

உலகில் வருடம் தோறும் 10 மில்லியன் பேர் இந்நோயினால் சிகிச்சை பெறுகின்றனர்.

| | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 |
|---|---|---|---|---|---|---|---|---|
| [illegible] | 105 | 64 | 73 | 99 | 35 | 71 | 56 | 64 |
| [illegible] | 05 | 10 | 07 | 13 | 08 | 08 | 01 | 0 |

**நோய்பரவும் முறை**

பிரதானமான நோய்க்காரணி நாய், அரிதாகப் பூனை, குரங்கு, கீரி, வெளவால் போன்ற விலங்குக் கடியினாலும் பரவுகின்றது. 97% தொற்றுள்ள நாய்க்கடியினாலும், பூனை மூலம் 2% ஆகவும் ஏற்படுகின்றது. 20% வளர்ப்பு நாய்களினாலும் 80% கட்டாக்காலி நாய்களினாலும் ஏற்படுகின்றது.

**நோய் அறிமுகம்**

நோய்க்காரணி : வைரஸ்

நோயரும்பு காலம்: 1- 3 மாதங்கள். (சில வேளைகளில் 2 வருடங்களிலும் சம்பவிக்கும்)

வைரஸ் தொற்றுள்ள விலங்கினால் கடி ஏற்பட்டு சுற்றுயல் நரம்புத்தொகுதி - மைய நரம்புத்தொகுதி - மூளை- மூளை இருதயத் தாக்கம் - நோய் அறிகுறி - மரணம் ஏற்படும்.

**மனிதரில் அறிகுறி**

காய்ச்சல்,மூச்சுத் திணறல், குழப்ப நிலை, கோபம், அசாதாரண நடவடிக்கைகள்,பேசுவதில் சிரமம், விழுங்குவதில் சிரமம், நீரைப் பார்த்தால் பயம். நோய் அறிகுறி தென்பட்டு 2-10 நாள்களில் இறப்பு.

**தாக்கத்தின் தன்மைகள்**

பாரதூரமான தாக்கமுள்ள நிலை இவற்றுள் ஒன்று அல்லது பல. தலை, முகம் கழுத்தில் கடி, முதுகு அல்லது மார்பில் கடி, உள்ளங்கை, உள்ளங்கால் விரல்களில் கடி, பாலுறுப்புக்களில் கடி, உடலின் எப்பாகத்திலேனும் ஆழமான கடி, மென்சவ்வுப் பிரதேசத்தில் நக்குதல்.

**தாக்கம் குறைவான நிலை**

தோலில் ஏற்படும் சிராய்ப்பு அல்லது கீறல், உடலின் மேற்பரப்பில் ஆழமற்ற கடி அல்லது கவ்வுதல், காயத்தில் நக்குதல்

**ஆபத்து நிலை**

காட்டு விலங்குகளின் கடி, விலங்கைக் கண்டு பிடிக்க முடியாத அல்லது அவதானிக்க முடியாத நிலை, தொடர்ச்சியாக 3 ஆண்டுகள் ARV தடுப்பு ஊசி ஏற்றப்படாத விலங்கு, கடித்து இரண்டு வாரங்களினுள் மாறுபாடான நடத்தையுடைய விலங்குக்கடி.

**ஆபத்து குறைந்த நிலை**

ஆரோக்கியமான வளர்ப்பு விலங்கு, தடுப்பு மருந்து ஏற்படுத்தாவிடினும் அவதானிக்கக் கூடிய விலங்கு, தூண்டலினால் ஏற்பட்ட கடி, அறிந்த குணங்குறிகளற்ற விலங்கு, கடிக்கும் வேளையில் சுகவீனமுற்றிருத்தல், ஒழுங்காக 3 வருடங்கள் தடுப்பு மருந்து ஏற்றப்படாத விலங்கு.

**நாய்க் கடியின் பின்னான முதலுதவி**

காயத்தை நன்றாக 3-5 நிமிடங்கள் வரை ஓடும் நீரில் கழுவுதல், பின் சவர்க்காரமிட்டுக் கழுவுதல், தொற்று நீக்கி பாவித்துத் துடைத்தல், இயன்றளவு உடனடியாக அரச வைத்தியசாலையில் வைத்தியரின் ஆலோசனையின் பிரகாரம் உரிய முறையில் உரிய ஊசிகளைப் பூரணமாகப் போடுதல்.

**ARV, ARS - (TOXIED)**

**ஏற்புத்தடை ஊசி**

ARV, ARS விலங்கு விசர் நோயை தடுப்பதற்கான தடை மருந்து TOXIED ஏற்பு வலி தடையை ஏற்படுத்துவதற்கும் பாவிக்கப்படும் ஊசிகளாகும். கர்ப்பம் தரித்தவர்களும் தடை ஊசி ஏற்றிக் கொள்ளலாம்.

விசர் நாய் கடி நோய் பிடித்த நாயொன்றின் நோய் அறிகுறிகள் இரு முறைகளில் தோற்றமளிக்கலாம்.

*முறை :1*

தொண்டையில் ஏதோ சிக்கியது போல் அவஸ்தைப்படும், இருளான இடங்களில் மறைவாக இருக்க முயலும், தொடைகள் பலமற்றவைகளாகத் தோற்றமளிக்கும் இந்நிலைமை ஏற்பட்டால் விலங்கு விசர் நோய் என தீர்மானிக்க முடியாமலும் இருக்கும் (ஊமைநிலை).

*முறை - 2*

கடும் கோபம் கொண்ட விலங்கு விசர் நோய் - உரத்தகுரலில் குரைக்கும், வழக்கத்திற்கு மாறான நடவடிக்கைகள், எல்லாப் பொருள்களையும் கடிக்கும், கண் சிவந்து காணப்படும், வாயில் இருந்து உமிழ் நீர் வடியும், வால் கீழ் நோக்கி வளைந்திருக்கும்.

**இன்று (28.9.2009) உலக விலங்கு விசர் நோய் தினம்**

மேலே குறிப்பிட்ட இரு வகைக் குணங்குறிகள் காணப்பட்டால் நாய் கண்டிப்பாக 14 நாள்களுக்குள் இறந்துவிடும்.

**விலங்கு விசர் நோயைக் கட்டுப்படுத்த**

உள்ளூராட்சி சபைகளில் விலங்கு விசர் நோய் கட்டளைச் சட்டத்தை இறுக்கமாக நடைமுறைப்படுத்தல், அனைத்து வளர்ப்பு நாய்களையும் பதிவு செய்து உரிமத் தகடு வழங்கப்படுதல், வளர்ப்பு நாய்களை வீதிகளில் விடாது உரிமையாளர் வளவினுள்ளோ அல்லது கூட்டினுள்ளோ வளர்த்தல், வளர்ப்பு, நாய் கடி நாய் எனில் நாய் கடிக்கும் கவனம் என்று சுலோக அட்டை தொங்கவிடல். கட்டாக்காலி நாய்களை அழித்தல் கடந்த கால நிகழ்வாக இருக்கட்டும்.

சுகாதார திணைக்களத்தின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளாக கீழ்வருவன இலவசமாக நடத்தப்படுகின்றன.

✱வருடா வருடம் சகல வளர்ப்பு நாய்களுக்கும் ARV தடை ஊசி ஏற்றப்படுகின்றது.

✱தேவையற்ற பெருக்கத்தை தடுப்பதற்கு ஆண்/பெண் நாய்களுக்குக் கருத்தடை சத்திர சிகிச்சை செய்யப்படுகின்றது.

சுகாதாரத் திணைக்களம் இச்சிகிச்சைக்கு பெண் நாய் ஒன்றிற்கு 650/= ஆண் நாய் ஒன்றிற்கு 250/= செலவு செய்கின்றது, கருத்தடை ஊசி ஏற்றப்பட்டு வருகின்றது. இத்துடன் சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

**பொது மக்களின் பங்கு**

மேற்குறிப்பிட்ட இலவச சேவைகளை தங்கள் பகுதி சுகாதார வைத்திய உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

வளர்ப்பு நாய்களை வீதிகளில் விடாது கட்டி வைத்து வளர்க்கவும், வளர்ப்பு நாய்கள் கடித்தவுடன் தடை மருந்து (ARV) ஏற்றப்பட்ட அட்டையை வைத்தியசாலைக்குச் செல்லும் போது தவறாது எடுத்துச் செல்லவும், நாயினால் கடியுண்டோர் தவறாது தடை ஊசி (ARV) போடப்பட்டு பூரணப்படுத்த வேண்டும், நீங்கள் வீசும் உணவுகள் கட்டாக்காலி நாய்கள் பெருக உதவா வண்ணம் அப்புறப்படுத்துங்கள்.

பொது மக்கள் தாங்களாகவே முன்வந்து இச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் குடாநாட்டில் 2012ஆம் ஆண்டளவில் விலங்கு விசர் நோயை முற்றாக ஒழிக்கலாம். ✱

**விலங்கு விசர் நோய் தடைப்பகுதி,**
**சுகாதாரத் திணைக்களம்,**
**யாழ்ப்பாணம்.**



நல்லூர் பிரதேச செயலக வாணி விழாவில் ஜே/117 கிராம அலுவலர் என்.சர்வகுணசிலன் உரையாற்றுவதையும் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன், உதவி பிரதேச செயலர் ஏ.சோதிநாதன், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் [illegible] 2009 ஆம் ஆண்டு தேசிய இலக்கியப் போட்டிகளில் பிரதேச மட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்களை வழங்கிக் கௌரவிப்பதையும் [illegible] (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



மதுவரித் திணைக்களத்தின் சாவகச்சேரி மதுவரி நிலையம் நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிலையப் பெயர்ப்பலகையினைத்திரைநீக்கம் செய்வதையும் நிலைய நடவடிக்கைகளை ஆரம்பித்து வைப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். யாழ். மாவட்ட மதுவரித் திணைக்கள நிலையங்களுக்கான வாகனத் திறப்பை மதுவரிதிணைக்கள ஆணையாளர் நாயகம் டி.ஜி.எம்.பி. ஹப்பு ஆராய்ச்சியிடம் கையளிப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: தென்னவன்)

# 'வணங்காமண்' கொண்டுவந்த நிவாரணப் பொருள்களை அகதிகளிடம் சேர்ப்பதில் இன்னும் நீளுகிறது இழுபறி

கொழும்பு, செப்.28

சென்னையிலிருந்து கொலராடோ கப்பலில் கொண்டுவரப்பட்டு கொழும்புத் துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கும் நிவாரணப் பொருள்களை இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதில் தொடர்ந்தும் இழுபறிநிலை ஏற்படுமாயின் அப்பொருள்களை விநியோகிக்கும் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்ள நேரும் என இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பான கடிதம் ஒன்றை அரசாங்கத்திற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் அனுப்பி வைத்துள்ளதாக சங்கத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் சுரேன் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் கூறியதாவது:

சர்ச்சைக்குரிய வணங்காமண் ('கப்டன் அலி') கப்பலில் கொண்டுவரப்பட்ட நிவாரணப் பொருள்கள் சுமார் நான்கு மாதங்களாக கொழும்பு துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. இடம்பெயர்ந்த மக்களுக்காக, புலம்பெயர்ந்த மக்களால் அனுப்பி வைக்கப்பட்ட இந்த நிவாரணம் நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களை இன்னும் சென்றடையவில்லை அதுமாத்திரமன்றி அதற்கான எவ்வித அறிகுறிகளும் தென்படவும் இல்லை.

இந்நிலையில், 'கப்டன் அலி' கப்பலுக்கான துறைமுக தாமத கட்டணத்திற்கு விலக்களிப்பதாக துறைமுக அமைச்சு கடந்த வாரம் அறிவித்திருந்தது. ஆயினும் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரிகளுக்கு விலக்களிக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இன்னமும் சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை. ஜூலை மாத முடிவிலிருந்து செப்ரெம்பர் 22 ஆம் திகதி வரைக்குமான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் தேச நிர்மாண வரிக் கட்டணங்கள் 20 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டிருந்தது. எனவே, இந்த இழுபறிநிலை தொடருமாயின் 'வணங்காமண்' நிவாரணப் பொருள்களை விநியோகிக்கும் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்வதற்கும் அப்பொறுப்பை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதற்கும் சங்க நிர்வாகத்தினர் முடிவுசெய்துள்ளனர் - என்றார்.

## தேவை

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்க இருக்கும் உணவகத்திற்கு சைனிஸ் மற்றும் மேற்கத்தேய உணவு வகைகள் நன்றாகச் சமைக்கத் தெரிந்த அனுபவமுள்ள, திறமையாக சமையல் செய்யக் கூடியவர் Cook உடனடியாகத் தேவை.

தொ. பே : 0776539785, 0776171367

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 04 . 06 . 1953

மறைவு: 29 . 08 . 2009

அமரர் வல்லிபுரம் செல்வராசா

பாசத்தின் திருவுருவாய்
பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி
அரவணைத்த எம் அன்புத் தெய்வமே
மாதம் ஒன்று ஆனதே ஆனால்
மறக்கவில்லை உங்கள் மதிமுகம்
எம் உயிர் உள்ளவரை உங்கள்
நினைவுகள் எம்மோடு வாழும்

K.K.S வீதி
மஞ்சத்தடி, இணுவில்.

குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



கொட்டடி மீனாட்சியம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

திருமதி அன்ரனிதாஸ் கௌரி

26.09.2009 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாகலிங்கம் குணரட்ணம் குடும்பத்தினர்.

92, திருவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(89295)

## கண்ணீர் அஞ்சலி



எமது தர்மகர்த்தாசபை உறுப்பினரான

அமரர் கந்தசாமி தங்கராசா

அவர்கள் அமரராகிய செய்திகேட்டு நாங்கள் தாங்கொணாத் துயரடைவதுடன், அன்னாரின் திடீர் மறைவினால் அல்லலுற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். பெருமகனின் ஆத்மா அம்பாளின் பாதார விந்தங்களில் சாந்தி பெற எல்லாம்வல்ல அம்பிகையின் திருவடிகளைப் பணிந்து நிற்கின்றோம்.

வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள்
தேவஸ்தானம்,
(நாச்சிமார்கோயில்).

(89264)

தர்மகர்த்தாசபை.

## மணமக்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 28வயது அனுஷம் நட்சத்திரம், 4 இல் செவ்வாய் மூன்று சுற்றுக்கிரக பாவம் 37, Bsc(Hons) Engineer, Australia) Citizen மண மகனுக்கு அழகிய மணமகள் தேவை (Profile No:6939 இது ஒரு திருமண சேவை (W.W.W thaalee.com) T.P2523127

யாழ். இந்து கௌரவ குடும்பம், 32 வயது பூசம் நட்சத்திரம், செவ்வாய்க்குற்றம் இல்லை மூன்று சுற்றுக்கிரக பாவம் 48, Software Specialist, Canada Citizen மண மகனுக்கு மணமகள் தேவை (Profile No: 5446 இது ஒரு திருமண சேவை (W.W.W thaalee.com) T.P 2523127

யாழ். இந்து கௌரவகுடும்பம், 29 வயது பரணி நட்சத்திரம், செவ்வாய்க்குற்றம் இல்லை மூன்று சுற்றுக்கிரக பாவம் 23, Msc Consultant, U.K Citizen மணமகனுக்கு மணமகள் தேவை (Profile No: 6099 இது ஒரு திருமண சேவை (W.W.W thaalee.com) T.P 2520619

யாழ். இந்து கௌரவகுடும்பம், 32 வயது மகம் நட்சத்திரம், 12 இல் செவ்வாய். மூன்று சுற்றுக்கிரக பாவம் 53, B.Com Accountant, U.K PR. மணமகனுக்கு மணமகள் தேவை (Profile No: 4038 இது ஒரு திருமண சேவை (W.W.W thaalee.com) T.P 2520619

யாழ். இந்து கௌரவகுடும்பம், 31 வயது ரோகினி நட்சத்திரம், 7 இல் செவ்வாய். மூன்று சுற்றுக்கிரக பாவம் 72, Software Engineer, USA Citizen. மணமகனுக்கு மணமகள் தேவை (Profile No: 3254 இது ஒரு திருமண சேவை (W.W.W thaalee.com) T.P 2523127

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சிவ பூமியில் 05 * 11 * 1976

சிவ லோகம் 23 * 09 * 2007

## பா. இலஷ்மணன் ஐயா

(திதி: ஏகாதசி)

என் அண்ணா !
என்னை அழவிட்டு
எமன் பின்னால் ஏன்? சென்றீர்கள்
அண்ணா !.. அண்ணா !.. அண்ணா!... என
அலறுகின்றேன்
உன் ஆருயிர் பிரிந்த பயணத்தில்
எங்கள் உறவுகளோடு அரவணைத்து உன் பிரிவினை
தாங்க முடியவில்லை என் மனம் துடிக்குதடா.....
''ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டவர் திரும்புவதில்லை'' என்று தெரிந்தும் ஏனோ?
என் மனம் ஏற்கவில்லை இது பந்த பாசம் .....
அன்பின் உயர் நிலை... நேசத்தின் நீடிப்பு....
கவலைகளை மனதில் சுமந்து கண்ணீர்ப் பூக்களை...
உன் காலடியில் தூவி ....
உன் ஆத்மா சாந்தி அடைய
ஆண்டவன் காலடியை வேண்டுகின்றேன்.
விண்ணக வாழ்வடைய விதி வந்ததிவர்க்கின்று
விட்டிடுவோம் கவலையினி வேண்டிடுவோம் இறைசாந்தி
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

என்றும் அன்புடன் கண்ணீர்ப் பூக்களை
உன் காலடியில் தூவும்
குடும்பத்தினர்.

பா.மிதுனன்,
தும்பளை.

## மரண அறிவித்தல்



### கதிரவேலு கந்தையா

(கட்டட ஒப்பந்தகாரர்)

நந்தாவிலைப் பிறப்பிடமாகவும் கிறேசர் லேன், தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கட்டுவன் வீதி, மல்லாகத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு கந்தையா 26.09.2009 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நந்தாவிலைச் சேர்ந்த கதிரவேலு - சீதேவி தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற சின்னத்தங்கச்சியின் கணவரும், சந்திரலீலா (உரும்பிராய்), வசந்தமாலா (ஜேர்மனி), லோகநாதன் (ஜேர்மனி), சூரியகலா (மல்லாகம்), காலஞ்சென்ற ஆனந்த மோகன் மற்றும் குகநேசநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும், செல்வரத்தினம் (கஜன்பந்தல் சேவை, உரும்பிராய்), ஜெயபாலசிங்கம் (ஜேர்மனி), ராஜேஸ்வரி (ஜேர்மனி), சீவரத்தினம் (சவுதி), விஜியா ஆகியோரின் மாமனாரும், மீரா (உரும்பிராய்), சமந்தா (சுவிஸ்), கஜன் (பிரான்ஸ்), றயூ (இந்தியா), ஆதவன் (மல்லாகம்), கஜானா, ஜெரினா, நீரஜா, சிந்துஜா, சோபிற்றா, கனிஸ்ரா, கம்சியா, கஜித் (ஜேர்மனி), ரூபகுமார் (சுவிஸ்) ஆகியோரின் பேர னும் சுபேதனின் (சுவிஸ்) பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.09.2009) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தொந்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
நா. செல்வரத்தினம் செல்லையா
(மருமகன்).

கட்டுவன் வீதி,
மல்லாகம்.

(89296)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலிப்பைன்ஸில் வெள்ள அனர்த்தம்; 2 லட்சம் மக்கள் நிர்க்கதி; 72 பேர் பலி!



மணிலா, செப். 28

பிலிப்பைன்ஸில் 'கெட் ஸானா' என்னும் புயலோடு கூடிய கடும் மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இது வரை வெள்ள அனர்த்தங்களுக்கு 72 பேர் பலியாகியுள்ளனர். 2 லட்சத்து 50 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் தம் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

வெள்ளத்தால் சூழப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து 4 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளனர். பெரும் பாலானோர் கூரைகளின் மீது கூடியிருந்தனர். இராணுவத்தினர், பொலிஸார், சிவிலியன்கள், தொண்டர்கள் ஆகியோரால் இவர்கள் மீட்கப்பட்டுள்ளார்கள் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

கடும் மழை, வெள்ள அனர்த்தங்கள் ஆகியவற்றையொட்டி பிலிப்பைன்ஸ் அரசால் 25 மாகாணங்கள் பேரிடர் மாகாணங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன. அதேவேளை, முழுமையாக ஒரு மாத காலம் பெய்யக் கூடிய கடும் மழை, லூஷோன் தீவில் ஆறு தினங்களில் பெய்துள்ளது. இதனால், பாரிய அனர்த்தங்கள் விளைந்துள்ளன என கால நிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

ரிஷால் நகரம் நூறு வீதம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது என கெயின்டா நகர பிதா மொன் இலகன், உள்ளூர் ஊடக மொன்றுக்குத் தெரிவித்தார். இதர பல நகரங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என ரிஜால் ஆளுநர் கசிமிரோ யாரிஸ் குறிப்பிட்டார்.

தலைநகரான மணிலாவுக்குச் செல்லும் நெடுஞ் சாலைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பல இடங்களில் வாகனங்கள் சிக்குண்டுள்ளன. போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டுள்ளன. நதிகளில் படகுச் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என அவசரகாலச் சேவைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸில் சர்வதேச விமான நிலையங்களும், உள்ளூர்ச் சேவை விமான நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான பயணிகள் சிக்குண்டுள்ளார் கள். கெட் ஸானா புயல் மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் வீசுகின்றது என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

இந்தப் புயல் இன்று திங்கட்கிழமை தென் சீனக் கடலை நோக்கி விரையலாம் என நேற்று எதிர்பார்க்கப்பட்டது. வெள்ள அனர்த்தங்கள் பிலிப்பைன்ஸ் தொலைக் காட்சியிலும் காட்டப்பட்டன.

அதேவேளை, மீட்பு நிவாரணப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி குளோரியா அரோயோ, நன்கொடையாளர்களிடம் உதவி கோரியுள்ளார். அத்துடன் மழை, வெள்ளம், புயல் ஆகியவற்றில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் வேண்டுகோளொன்றை விடுத்துள்ளார். அதில் அவர் உள்ளூர் அதிகாரிகளினதும், சிவில் பாதுகாப்பு அதிகாரிகளினதும் பணிப்புரைகளைக் கடைப்பிடிக்குமாறு அவர்களைக் கேட்டுள்ளார்.

# அணுத்திட்ட சர்ச்சைக்கு மத்தியில் ஈரான் ஏவுகணைப் பரிசோதனை


தெஹ்ரான், செப். 28

அணுத்திட்டம் தொடர்பான சர்ச்சையில் சிக்கிவரும் ஈரான், இரு குறுகிய தூர ஏவுகணைகளை பரிசோதித்துள்ளது. அத்துடன், நீண்டதூர ஏவுகணைப் பரிசோதனையும் மேற்கொள்ளப்படுமென்றும் அது அறிவித்தல் விடுத்துள்ளது.

டொன்டார், பெடிஹ் என்னும் இரு குறுகிய தூர ஏவுகணைகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. இவை 170 கிலோ மீற்றர் (100 மைல்) வரை எட்டக்கூடியவை என்றும் ஈரான் தெரிவித்துள்ளது.

நீண்ட தொலை ஏவுகணையான சஹ்ஹாப் - 3 இன்று திங்கட்கிழமை ஏவப்படும். இது இஸ்ரேல்வரை எட்டக்கூடியது என்றும் அது அறிவித்துள்ளது.

ஈரானின் அணுத்திட்டம் தொடர்பான விவகாரத்தால் மேற்கு நாடுகளுக்கும், ஈரானுக்குமிடையிலான சர்ச்சைகள் உச்சக்கட்டத்தை அண்மித்துவரும் ஒரு தருணத்தில் இந்த ஏவுகணைச் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.



# நிலவில் தண்ணீர் மூலக் கூறுகள்: நாசா விஞ்ஞானிகள் ஊர்ஜிதம்!

வாஷிங்ரன், செப்.28

நிலவில் தண்ணீர் மூலக்கூறுகள் உள்ளமை உண்மைதான். இதை இஸ்ரோவின் சந்திரயான்-1 உதவியுடன் நாசா கண்டு பிடித்துள்ளது என நாசா விஞ்ஞானிகள் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

நிலவில் தண்ணீர் இருப்பதை சந்திரயான்-1 விண்கலத்தில் இணைக்கப்பட்டிருந்த நாசா எம் 3 எனப்படும் 'மூன் மேப்பர் சாதனம்' கண்டுபிடித்துள்ளது. இது இஸ்ரோவை பெரும் மகிழ்ச்சிக்குள்ளாக்கி யுள்ளது.

இந்நிலையில் இது குறித்து நாசா விளக்கம் அளித்துள்ளது. வாஷிங்ரனிலுள்ள நாசா தலைமையகத்தில் செய்தியாளர்களிடம் நாசாவின் கிரக அறிவியல் பிரிவின் இயக்குநர் ஜிம் கிரீன் கூறுகையில்; ''இந்தக் கண்டுபிடிப்பை சாத்தியமாக்கியதற்காக இஸ்ரோவுக்கு நன்றி கூறிக்கொள்கிறோம். இதுவரை நிலவை வறண்ட ஒரு பகுதியாகவே நாம் நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால், தற்போது அங்கே தண்ணீர் இருப்பது தெரிய வந்துள்ளது.'' என்றார்.

''இஸ்ரோவின் உறுதுணையுடன், நாசாவின் எம் 3 நிலவின் தளத்தில் நீர் மூலக்கூறுகள் உள்ளமையைக் கண்டுபிடித்துள்ளது. இது முக்கியமான கண்டுபிடிப்பு இதில் சந்தேகம் இல்லை'' என்றும் அவர் தெரிவித்தார்.

''எதிர்பார்த்த அளவை விட அதிக அளவிலான நீரை உருவாக்கக் கூடிய மூலக் கூறுகள் அங்கு உள்ளன. இது எமக்கு வியப்பளித்துள்ளது. இந்த எதிர்பாராத கண்டுபிடிப்பு நாசாவுக்கும் இஸ்ரோவுக்கு மிடையிலான சர்வதேச ஒத்துழைப்பின் மூலம் சாத்தியமாகியுள்ளது'' என்றும் குறிப்பிட்டார்.

இதற்கிடையே, ஏரி அளவுக்கோ, கடல் அளவுக்கோ அல்லது குளம் அளவுக்கோ நிலவில் தண்ணீர் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட ஆயிரம் நீர் மூலக்கூறுகள் நிலவில் இருக்கலாம எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பாகிஸ்தானில் குண்டுத் தாக்குதல்கள்: 16 பேர் உயிரிழப்பு; 82 பேர் படுகாயம்



இஸ்லாமாபாத், செப். 28

பாகிஸ்தான் வட மேற்குப் பகுதியில் இடம்பெற்ற இரு குண்டுத் தாக்குதல்களில் 16 பேர் கொல்லப்பட்டனர். 82 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

பெஷாவர் நகரில் ஜனநெருக்கடிமிக்க வணிகப் பகுதியில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டனர். 75 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர் களில் பலர் ஆபத்தான கட்டத்தி லிருந்தனர் என்றும் அவர்கள் குறிப்பிட் டார்கள்.

இதற்கு முன்னர் வெடி குண்டு நிரப்பப்பட்ட வாகனமொன்றை பான்னு நகர பொலிஸ் நிலையம் மீது மோதி, தற்கொலைக் குண்டுதாரி மேற்கொண்ட தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டனர். 7 பேர் படுகாயமடைந்தனர் எனப் பொலிஸ் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

வட மேற்குப் பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிராக, பாகிஸ்தான் இராணுவம் அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இராணுவ வேட்டையில் இதுவரை பெருந்தொகையான தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளார்கள். அவர்களின் முகாம்கள் அழித்தொழிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தால் தங்களின் தாக்குதல்களும் நீடிக்கும் எனத் தலிபான் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

வட மேற்குப் பாகிஸ்தானில் உள்ளூர் தலிபான் தீவிரவாதிகளுடன் ஆப்கான், கஜகஸ்தான், மொராக்கோ ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலிபான், அல்-குவைதா தீவிரவாதிகளும் இணைந்து அரச படைகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

# ஆப்கானிலிருந்து படைகளை மீளப்பெறாவிடின் குண்டுத் தாக்குதல்களை எதிர்நோக்க நேரிடும்!

## ஐரோப்பிய நாடுகளுக்கு பின்லேடன் எச்சரிக்கை



பிராங்போர்ட், செப். 28

''ஆப்கானிஸ்தானிலிருந்து உங்களது படைகளை விலக்கிக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் மாட்ரிட், லண்டன் ஆகிய இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு போன்ற சம்பவங்களை எதிர்கொள்ளத் தயாராகுங்கள் '' என அல்-குவைதா தலைவர் பின்லேடன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பான ஒலிநாடா ஒன்றை இஸ்லாமிய இணையத்தளங்கள் சில வெளியிட்டுள்ளன. ஐரோப்பிய நாடுக ளுக்குப் பொதுவாக எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தாலும், ஜேர்மனியைக் குறிப்பிட்டுத்தான் பின்லேடன் எச்சரித்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

அந்த நாடாவில் ஆங்கிலம், ஜேர்மன் ஆகிய மொழிகளில் உப தலைப்புகள் இடம்பெற்றுள்ளன. ஜேர்மனியில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இந்த எச்சரிக்கை வந்துள்ளமையால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பின்லேடன் அந்த நாடாவில், ''ஐரோப்பா இன்று பொருளாதார நெருக்கடியில் சிக் கித் தவிக்கிறது. உலக ஏற்றுமதியில் ஜேர் மனி தொடர்ந்து முதலிடத்தில் இருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா பொருளாதாரப் போரில் சிக்கி, இரத்தம் சிந் திக் கொண்டிருக்கிறது. ஒடுக்கப்பட்டோரின் சார்பாக அடக்கியாள நினைப்போருக்குப் பதிலடி கொடுக்க அல்லா எங்களுக்கு உத்தரவிட்டுள்ளார்'' எனத் தெரிவித்துள்ளார்.

''உங்களது, ஜேர்மனி பின் படைகளை ஆப்கானிஸ்தானிலிருந்து விலக்கிக் கொள்ளுங்கள். இல்லையேல் மாட்ரிட், லண்டன் ஆகிய இடங்களில் இடம் பற்ற இரத்தக் களரிச் சம்பவங்களை [illegible] படுத்திக் கொள்ளுங்கள். [illegible] விரும்பினால், [illegible] கை கோர்த்து ஆப்கானிஸ் [illegible] ல் நீங்கள் நடமாடலாம்'' என்றும் [illegible] ர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த எச்சரிக்கையை ஜேர்மனி அதிகாரிகள் தம் கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளனர். இது ஜேர்மனுக்கு வந் துள்ள நான்காவது அல்- குவைதா மிரட் டலாகும்.

ஆப்கானிஸ்தானில் 4 ஆயிரத்து 200 ஜேர்மன் சிப்பாய்கள் நிலை கொண்டுள்ளனர். இவர்களை வாபஸ் பெறவேண்டும் என ஜேர்மனியிலேயே கோரிக்கைகள் வலுத்து வருகின்றன.

தற்போது தொடர்ந்து விடுக்கப்படும் மிரட்டல் தலிபான்களினதும், அல்-குவைதாவினதும் கூட்டு வேலை என ஜேர்மனி பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த எச்சரிக்கையை சாதாரணமாக எடுத்துக்கொள்ள நாம் விரும்பவில்லை. அதனால், நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என ஜேர்மனி [illegible] தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அமெரிக்க, இஸ்ரேலிய, அரபு உளவு அமைப்புகளும், ஜேர்மனியை அறிவுறுத்தியுள்ளன.

## உலக அரங்கில்

### ஊழல் நாடுகளின் பட்டியலில் இந்தியாவுக்கு 19 ஆவது இடம்

ஊழல் கறை படிந்த நாடுகளின் பட்டியலில் இந்தியாவுக்கு 19 ஆவது இடம் கிடைத்துள்ளது. 10 புள்ளிகளில் இந்தியா 6.8 புள்ளிகளுடன் 19 ஆவது இடத்திலுள்ளது. இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகங்களில் தான் பெருமளவில் லஞ்சம் கை மாறுகிறதாம்.

ரஷ்யா, மெக்சிக்கோ, சீனா ஆகிய நாடுகளுடன் வர்த்தகம் மேற்கொள்ளும் போது தான் பெருமளவில் லஞ்சம் வாங்குகிறார்களாம். மேலும் வேலைகளை வேகமாக முடிப்பதற்காக அரசு அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்கவேண்டியுள்ளது என 30 சதவீதம் பேர் தெரிவித்துள்ளனர்.

லஞ்சம் மிக மிகக் குறைவாகப் புழங்கும் நாடுகளில் முதலிடத்தில் இருப்பவை பெல்ஜியம், கனடா ஆகிய நாடுகள்தான். இந்த நாடுகளில் மிகக் குறைந்த அளவில் லஞ்சம் வாங்குகிறார்களாம். இந்த இரு நாடுகளும் லஞ்சம் குறித்த சுட்டெண்ணில் 8.8 புள்ளிகளுடன் உள்ளன.

இந்த இரு நாடுகளையும் சேர்ந்த நிறுவனங்கள் பொதுவாக லஞ்சம் கொடுப்பதில்லையாம். இந்த இரு நாடுகளுக்கும் அடுத்து நெதர்லாந்து, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகள் இடம்பெறுகின்றன. இவை 8.7 புள்ளிகளுடன் உள்ளன.

இவற்றுக்கு அடுத்த இடங்களில் உள்ள நாடுகள் - ஜேர்மனி, ஜப்பான், பிரிட்டன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, பிரான்ஸ், சிங்கப்பூர், ஸ்பெயின் ஆகியவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகில் புலிகள் ஊடுருவல் எனத் தகவல்: குமரியில் கடற்படை தீவிர கண்காணிப்பு

குளச்சல், செப். 28

தமிழகக் கடலோரப் பகுதியை நோக்கி ஒரு மர்மப் படகில் விடுதலைப்புலிகள் ஊடுருவினர் என்று வெளியான தகவலைத் தொடர்ந்து குமரி மாவட்ட கடலோரக் காவல் படையினர் உஷார் படுத்தப்பட்டனர்.

இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கும் சிங்கள இராணுவத்துக்கும் இடையிலான போர் முடிவடைந்த நிலையில் தற்போது அங்கிருந்து விடுதலைப் புலிகள் புகலிடம் தேடி கடல் மார்க்கமாக பல்வேறு பகுதிகளுக்கு தப்பிச் செல்லலாம் என்பதால் உஷாராக இருக்குமாறு ஏற்கனவே தமிழகக் கடலோரக் காவல் படைக்கு உத்தர விடப்பட்டிருந்தது. இதைத்தொடர்ந்து தமிழகக் கடலோரப் பகுதிகளில் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இலங்கை கடல் பகுதியில் இருந்து தமிழகக் கடலோர பகுதியை நோக்கி மர்மப் படகு ஒன்று வருகிறது. அதில் விடுதலைப் புலிகள் இருக்கக் கூடும், எனவே உஷாராக இருக்குமாறு சென்னை கடலோரக் காவல் படையினருக்குத் தகவல் கிடைத்[த]து.

அதைத்தொடர்ந்து தமிழகக் கடலோர குமரி மாவட்டம் குளச்சலில் உள்ள கடலோர காவல் படையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கடலோரக் காவல் படையினர் குமரி மாவட்டக் கடலோரப் பகுதிகளில் சனிக்கிழமை இரவு முதல் அதிரடிச் சோதனை மேற்கொண்டனர்.

கடலோரக் காவல் படையினர் மர்மப் படகில் வந்தவர்கள் குமரி மாவட்ட கட லோர கிராமங்களில் புகுந்துள்ளனரா என்று கிராமம் கிராமமாகச் சென்று சோதனை மேற்கொண்டனர். இந்தச் சோதனை குமரி மாவட்டம் ஆரோக்கியபுரம் முதல் நீரோடி வரையிலான 42 கடலோர கிராமங்களில் நடைபெற்றது.

இந்த அதிரடிச் சோதனை கடந்த வெள்ளி[க்கிழமை] [அ]ன்று இரவு முதல் நேற்றுமுன்தினம் [க]ாலைவரை அதிரடியாக நடந்தது. இதனால் குமரி மாவட்டக் கடலோரப் பகுதிகளில் பரபரப்பு ஏற்பட்டது.

# முகாமிலுள்ள தமிழரை விடுவிக்கக்கோரி தமிழகம் முழுவதும் கம்யூ. ஆர்ப்பாட்டம்!

## காந்தி பிறந்தநாளான ஒக். 2 இல்



சென்னை, செப். 28

இலங்கையில் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுவிக்கக்கோரி தமிழ்நாடு முழுவதும் ஒக்ரோபர் 2ஆம் திகதி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி குடும்பத்துடன் ஆர்ப்பாட்டம் நடத்துகிறது.

இதுகுறித்து அக்கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பவை வருமாறு -

இலங்கையில் வவுனியா முகாம்களில் முள்வேலிக் கம்பிகளுக்கிடையே அடைக்கப்பட்டுள்ள 3 லட்சம் தமிழ் மக்களை விடுவிக்கக்கோரி காந்தி பிறந்த நாளான ஒக்ரோபர் 2 இல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி குடும்பத்தினருடன் ஆர்ப்பாட்டம் நடத்துகிறது.

ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடங்களும் கலந்துகொள்ளும் தலைவர்களும் வருமாறு:-

சென்னை - ஆர்.நல்லக்கண்ணு, திருவள்ளூர் - சி.கே.மதிவாணன், காஞ்சீபுரம் - மு.வீரபாண்டியன், மதுரை - எம்.அப்பாத்துரை, கோவை - ஏ.எம்.கோபு, திருப்பூர் - கே.சுப்பராயன், திருச்சி - வை.சிவபுண்ணியம் எம்.எல்.ஏ., நெல்லை - கோ.பழனிச்சாமி, சேலம் - எஸ்.கண்ணன், விழுப்புரம் - ஜெ.லட்சுமணன், தஞ்சாவூர் - இரா.முத்தரசன், ஈரோடு - த.ஸ்டாலின் குணசேகரன், தூத்துக்குடி - டி.எம்.மூர்த்தி, தர்மபுரி - தேவ.பேரின்பன், கிருஷ்ணகிரி - டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ. ஆகியோர் தலைமையில் நடக்கிறது.

மேலும், சிவகங்கை, விருதுநகர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, தேனி, திண்டுக்கல், நாமக்கல், இராமநாதபுரம், வேலூர், கடலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை, கரூர், நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய இடங்களிலும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது - என்றுள்ளது.

# இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகத்தில் நிரந்தரமாகத் தங்குவதற்கு வழிசெய்க!

## மத்திய அரசிடம் கருணாநிதி வேண்டுகோள்



தமிழகத்தில் இலங்கைத் தமிழ் அகதிகள் சுதந்திரமாகவும், நிரந்தரமாகவும் தங்குவதற்கும், வாழ்வாதாரத்துக்குமான ஏற்பாடுகளை மத்திய அரசு செய்து கொடுக்க வேண்டும் - என்று தமிழக முதல்வர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் தி.மு.கவின் முப்பெரும் விழா நிகழ்ச்சியில் இதுகுறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விழாவில நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு -

* இலங்கைத் தமிழ் அகதிகள் சுதந்திரமாக தங்குவதற்கு வழி செய்ய வேண்டும். தற்போது தமிழகத்தில் 115 முகாம்களில் மொத்தம் 73 ஆயிரத்து 572 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தங்கியுள்ளனர். மேலும், 30 ஆயிரத்துக்கும் மேற்பட் டோர் முகாம்களில் தங்காமல் வெளியே தங்கியுள்ளனர். அவர்கள் நிரந்தரமாகத் தங்குவதற்கும், வாழ்வாதாரத்துக்குமான ஏற்பாடுகளை மத்திய அரசு செய்து தர வேண்டும்.
* இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் விரைவில் இலங்கையில் அவர்களது வீடுகளுக்கு திரும்புவதுதான் தாற்காலிக முகாம்களில் அவர்கள் அனுபவித்து வரும் துயரங்களைக் நீக்கும் ஒரே தீர்வாகும் என்று இலங்கை உணர்ந்திடும் வகையில் மத்திய அரசு தேவையான அழுத்தத்தைக் கொடுத்திட வேண்டும்.
* இலங்கைக் கடற்படையினர் நடத்தும் அத்துமீறல்கள், தாக்குதல்கள், வன்முறைகளால் தமிழக மீனவர்கள் துன்பத்துக்கு ஆளாவதற்கு நிரந்தரமாக முடிவு ஏற்படுத்தும் வகையில் மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.
* கச்சதீவுக்கு தமிழக மீனவர்கள் தடை ஏதுமின்றி செல்வதற்கும் அதையொட்டிய இடங்களில் இழந்த உரிமையை மீட்டு எடுப்பதற்கும் கச்சதீவை இந்தியாவுக்கே திரும்பப் பெறுவதற்கு மத்திய அரசு உரிய சட்ட நடவடிக்கைகளை உடனே எடுக்க வேண்டும்.
* தமிழ்மொழியை ஆட்சி மொழிகளில் ஒன்றாக்க வேண்டும். ஹிந்தி பேசாத மாநில மக்களின் உரிமைகள் நிரந்தரமாக காப்பாற்றப்பட அனைத்து மாநிலங்களிலும் உள்ள ஆட்சி மொழிகள் அனைத்தும் மத்திய ஆட்சிமொழியாக ஆக்கப்பட வேண்டும்.
* இந்தியாவில் அனைத்து மாநில மொழிகளையும் மத்திய ஆட்சி மொழிகளாக ஆக்குவதில் தாமதம் ஏற்படுமேயானால் முதல் கட்டமாக திராவிட மொழிக் குடும்பத்தின் மூத்த மொழியும், கலை இலக்கியப் பண்பாடும், வளமும் நிறைந்த செம்மொழியுமான தமிழ்மொழியை மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும்.

# பிள்ளைகளை அடித்தால் அறிவுக்கூர்மை குறையும்

## ஆய்வில் புதிய தகவல்



டில்லி, செப். 28

பிள்ளைகளை அதிகளவில் அடித்தால் அவர்களின் அறிவுக்கூர்மை மழுங்கி விடும் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

பிள்ளைகளை வளர்ப்பது ஒரு கலை. பெரும்பாலான பெற்றோர்களுக்கு அது தெரிவதில்லை. எதற்கெடுத்தாலும் அடி, உதை, குத்துதான். பிள்ளைகளை வழிக்குக் கொண்டுவர பெற்றோர்கள்கொடுக்கும் ராஜ வைத்தியம் இதுதான்.

ஆனால், பெற்றோரின் இந்தத் தண்டனை மனப்பான்மையால் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலமே பழாகிவிடும் என்பதை அவர்கள் அறிவதில்லை.

'நியூ ஹம்ஷெயர்' பல்கலைக்கழகத்தை சேர்ந்த முதன்மை விஞ்ஞானி முர்ரே ஸ்டரஸ் தலைமையிலான குழு, பெற்றோரால் அடிக்கடி அடிக்கப்படும் பிள்ளைகள் என்ற ஆய்வை சமீபத்தில் மேற்கொண்டது. இதற்காக 1,500 பிள்ளைகளிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவர்களில் பாதிப் பேர் 2 முதல் 4 வயதுக்கு உட்பட்டவர்கள், மற்றவர்கள் 5 முதல் 9 வயதுக்கு உட்பட்டவர்கள்.

இவர்களில் அடிக்கடி அடிக்கப்படும் பிள்ளைகளுக்கு, மற்ற பிள்ளைகளை விட அறிவுக்கூர்மை குறைவாக இருப்பது தெரிய வந்தது. உதை வாங்கும் 2 முதல் 4 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு மற்ற குழந்தைகளை விட அறிவுக்கூர்மை 5 சதவீதம் குறைவாக இருக்கிறது எனவும், 4 முதல் 9 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளின் அறிவுக்கூர்மை 2.8 சதவீதம் குறைவாக இருக்கிறது எனவும் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனவே, பெற்றோர்களே சற்று சிந்தியுங்கள். பிள்ளைகளை அடித்து வளர்ப்பதைவிட அன்பால் அரவணைத்து வளர்ப்பதே சிறந்தது.

# சந்திரனில் தண்ணீர் இருப்பது தொடர்பாக மேலும் ஆராய சந்திராயன் 2 இல் ரோபோ!

## விஞ்ஞானிகளுக்கு கலாம் யோசனை



நிலவில் தண்ணீர் இருப்பது பற்றி மேலும் ஆய்வு செய்வதற்காக, 'சந்திரயான்-2' செயற்கைக்கோளில் ரோபோவை உருவாக்கும்படி விஞ்ஞானிகளுக்கு முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் யோசனை கூறியுள்ளார்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (இஸ்ரோ) சார்பில் ஏவப்பட்ட சந்திரயான்-1 செயற்கைக்கோள், நிலவில் தண்ணீர் இருப்பதைக் கண்டுபிடித்து உள்ளது.

இந்த நிலையில், அடுத்ததாக இஸ்ரோ நிறுவனம் அனுப்ப இருக்கும் சந்திராயன்-2 செயற்கைக்கோளில், நிலவில் தண்ணீர் பற்றிய ஆராய்ச்சியை மேலும் தொடருவதற்காக நவீன கருவியை அனுப்ப வேண்டும் என்று இந்திய மற்றும் நாசா விஞ்ஞானிகளுக்கு கலாம் யோசனை வழங்கினார்.

'உறுதிமொழிகளும் கவலைகளும்' என்ற தலைப்பிலான தேசிய கருத்தரங்கை தேசிய அறிவியல் அருங்காட்சியக கவுன்ஸில் நேற்றுமுன்தினம் நடத்தியது. இதில் கலந்து கொண்ட கலாம், மாணவர்கள் மத்தியில் பேசியபோதே இதைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா தொழில்நுட்ப மையத்துக்கு சமீபத்தில் சென்று இருந்தேன். அப்போது, சந்திரயான் - 1 செயற்கைக்கோளுடன் சந்திரனுக்கு அமெரிக்கா அனுப்பிய எம் - 3 கருவி கண்டுபிடித்த கண்டுபிடிப்புகளை, இந்திய விஞ்ஞானிகளிடம் நாஸா விஞ்ஞானிகள் வழங்கினர். அவர்களிடம் பேசிய நான், சந்திராயன்-2 திட்டத்தின்போது சந்திரனில் இறங்கி ஆய்வு செய்வதற்கான ரோபோவை உருவாக்கி அனுப்ப வேண்டும் என்று ஆலோசனை வழங்கினேன்.

2050ஆம் ஆண்டுக்குள் ஒரு கிலோ எடையில் விண்கலன்களை தயாரிக்க முயற்சிக்கும்படியும் அந்த விஞ்ஞானிகளை கேட்டுக் கொண்டேன் - என்றார்.




# நாகை மீனவர்கள் மீது தாக்குதல்!

கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற நாகை மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் நடுக்கடலில் நிர்வாணமாக்கி அடித்து கொடுமைப்படுத்தியுள்ளனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நாகை கீச்சாங்குப்பம் கிராமத்தை சேர்ந்த ராஜேந்திரன் என்பவருக்குச் சொந்தமான படகில் 18 மீனவர்கள் கடந்த வெள்ளியன்று 11 மணியளவில் நாகை துறைமுக முகத்துவாரத்திலிருந்து கடலுக்குள் மீன்பிடிக்க சென்றனர்.

நாகையில் இருந்து சுமார் 30 கிலோ மீற்றர் தொலைவில் 3 படகில் சென்ற மீனவர்கள் 18 பேரும் சர்வதேச கடல்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக இரவு நேரத்தில் இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான கப்பல் ஒன்று ரோந்து வந்தது. இலங்கைக் கடற்படையினர் 3 படகுகளையும் சுற்றி வளைத்து 18 மீனவர்களையும் ஒரே படகில் ஏற்றினர்.

தாங்கள் வந்த கப்பலில் இருந்து இறங்கி மீனவர்களின் படகில் சென்று மீன் பிடிப்பதற்காக மீனவர்கள் கொண்டு வந்த மீன்பிடி வலைகளை அறுத்து கடலில் தூக்கி எறிந்துள்ளனர். மேலும் மீனவர்கள் 18 பேர்களையும் தாங்கள் கொண்டு வந்த இறப்பர் தடியாலும், இரும்புக் கம்பியாலும் அடித்து கொடுமைப்படுத்தி அவர்கள் அணிந்திருந்த ஆடைகளை கழற்றி எறிந்து நிர்வாணமாக்கினர். மேலும் அவர்கள் இடுப்பில் அணிந்திருந்த வெள்ளி அரைஞாண் கயிறுகளை அறுத்துப் பிடுங்கினர்.

நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் மீனவர்கள் நாகை துறைமுகம் வந்தடைந்தனர்.

இந்தத் தாக்குதல் குறித்து நாகைடவுன் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்தனர். மேலும் மீன்வளத்துறை, நாகை மாவட்ட கலெக்டர் ஆகியோரிடம் இதுகுறித்து தெரிவித்தனர். நாகை மீனவர்களின் மீதான இந்த தாக்குதல் குறித்து அறிந்த நாகை கடலோர மீனவக் கிராம மக்கள் மத்தியில் இது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கருணாநிதிக்கு அண்ணா விருது

அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவில் முதல்வர் கருணாநிதிக்கு அண்ணா விருதை தி.மு.க. பொதுச்செயலாளர் அன்பழகன் வழங்கினார்.

அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா, தி.மு.க. முப்பெரும் விழா, விருது வழங்கும் விழா காஞ்சிபுரம் நசரத்பேட்டையில் நேற்றுமுன்தினம் கோலாகலமாக நடந்தன.

விழா நிகழ்ச்சிகள் முழுவதையும்துணை முதல்வர்மு.க.ஸ்டாலின்தொகுத்து வழங்கினார்.

காஞ்சிபுரம் எல்லை - பெங்களூர் நெடுஞ்சாலையில் புதிதாக அமைக்கப்பட்ட அண்ணா நினைவுத் தூணை முதல்வர் காலையில் திறந்து வைத்தார். இதையடுத்து காஞ்சிபுரத்தில் தி.மு.க. அறக்கட்டளை மற்றும் முரசொலி அறக்கட்டளை சார்பில் பரிசளிப்பு மற்றும் நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. தி.மு.க. அறக்கட்டளை சார்பில் மேல்நிலைப்பாடசாலை தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ - மாணவிகளுக்கு நிதி அளித்தும், சான்றிதழ் வழங்கியும் முதல்வர் பாராட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள்; வன்முறைகளுக்கு இடமளிக்கக்கூடாது

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.28

யாழ்.பல்கலைக்கழகத்தை சரியான பாதையில் இட்டுச் செல்ல என்ன விலை கொடுக்கவும் தயாராக இருக்கிறேன். வன்முறைகளுக்கு பல்கலைக்கழக மாணவர்கள் இடமளிக்கக்கூடாது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாணவர் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பிரசன்னா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் பேசுகையில் மேலும் கூறியவை வருமாறு:-

யாழ்.பல்கலைக்கழகத்தை ஆரம்பித்ததன் நோக்கம் ஈடேறுவதற்கு அதனைச் சரியான பாதையில் வழி நடத்திச் செல்ல வேண்டும்.

ஒரு காலத்தில் வன்முறை தேவைப்பட்டது. அதனை சகோதர இயக்கங்களுக்கு எதிராகப் பயன்படுத்த முயற்சித்ததால்,போராட்டம் திசை மாறியது. அதன் பலனாக தமிழ் பேசும் மக்கள் இன்று பாரிய துன்பங்களை அனுபவிக்கிறார்கள்.எதிர்காலத்தில் எத்தகைய பயனும் தராத எதிர்ப்பு அரசியலைக் கைவிட்டு இணக்க அரசியலை முன்னெடுத்துச் செல்வதற்கு பல்கலைக்கழக மாணவர்களும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

பல்கலைக்கழகத்தை சரியான பாதையில் இட்டுச் செல்வதற்கு நான் என்ன விலை கொடுக்கவும் தயாராகவிருக்கிறேன். பல் கலைக்கழக மாணவர்கள் ஒரு போதும் வன்முறைகளுக்கு இடமளிக்கக் கூடாது.

தற்போது கிடைத்துள்ள உயிர்வாழும் சுதந்திரம்,விரும்பிய கருத்தைத் தெரிவிக்கும் சுதந்திரம்,நடமாடும் சுதந்திரம் மற்றும் தொழில் செய்யும் சுதந்திரம் என்பவற்றைப் பாதுகாப்பதுடன், ஒருவர் தான் விரும்பிய கருத்தைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தின் மூலம் அடுத்து வரும் தேர்தல்களில் மக்களின் நலனை முன்னெடுத்துச் செல்லக் கூடிய தலைமையை மக்கள் தேர்ந்தெடுப்பதன் மூலம் அத்தகைய தலைமையை பலப்படுத்த முற்பட வேண்டும் - என்றார் அமைச்சர்.

வவுனியா நலன்புரி முகாமிலிருந்து யாழ். பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் வந்த மாணவ,மாணவிகள் தாங்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து அமைச்சருடன் கலந்துரையாடியதுடன், பலர் எழுத்து மூலமும் தங்களது இடர் பாடுகளைத் தெரிவித்தனர்.

மேற்படி மாணவ,மாணவிகளின் பிரச்சினைகளைத் தீர்பதற்கு உரிய முயற்சிகளை எடுப்பதாகவும் அதுவரை பொறுமையாக இருக்குமாறும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டார். (1)

# ஈழத்தமிழர் இன்னலுறும் போது கருணாநிதிக்கு உலகத் தமிழ் மாநாடும் ஒரு கேடா? - ஜெயலலிதா

சென்னை, செப். 26

இலங்கையில் தமிழர்கள் இன்னலுக்கு ஆளாகியுள்ள நிலையில், முதலமைச்சர் கருணாநிதி உலகத் தமிழ் மாநாட்டை அறிவித்திருக்கின்றமையால் தமிழர்களுக்கோ தமிழ் மொழிக்கோ எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயல லிதா கூறியிருக்கிறார்.

தமிழர்களுக்காகவும், தமிழுக்காகவும் எதையும் செய்யாத கருணாநிதிக்கு உலகத்தமிழ் மாநாடு நடத்தத் தகுதி இல்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

ஒன்பதாவது உலகத்தமிழ் மாநாட்டை 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தனது அரசு கோயம்புத்தூரில் நடத்தும் என்று முதலமைச்சர் கருணாநிதி அறிவித்திருக்கிறார்.

உலகத்தில் உள்ள அனைத்துத் தமிழர்களும் தற்போது நிலைகுலைந்து போய் வேதனையில் இருக்கிறார்கள்.

1966 ஆம் ஆண்டு முதல் உலகத் தமிழ் மாநாட்டை நடத்திய மலேசியத் தமிழர்கள் இன்று தமது நாட்டில் இரண்டாம் தரக் குடிமக்களாகத் தரம் தாழ்த்தப்பட்டிருப்பதை உணர்ந்து துன்பப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்திய இலங்கைத் தமிழர்கள் இன்று தங்கள் சொந்த மண்ணிலேயே அகதி முகாம்களில் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். சுய உரிமைக்கான, சுய நிர்ணயத்துக்கான இலங்கைத் தமிழர்களது போராட்டத்தை தி.மு.க. முக்கிய பங்கு வகிக்கும் இந்திய அரசின் இராணுவ உதவியுடனும் தார்மீக ஆதரவுடனும் தானே இலங்கை அரசு இரக்கமில்லாமல் துப்பாக்கி முனையில் அடக்கியது? இலங்கையில் இனப்படுகொலை நடந்துகொண்டிருந்தபோது கருணாநிதி குரல் கொடுக்கவில்லை. சுண்டு விரலைக்கூட அசைக்கவில்லை. இந்த நிலையில் அந்த மக்கள் முள்வேலிக்குள் பேரவலத்துடன் வாழும் போது உலகத்தமிழர் மாநாட்டைக் கொண்டாடுவது தேவையற்றது - என்று உள்ளது.

# தொழில்நுட்ப கல்லூரியின் மாணவர்கள் இன்று பேரணி

யாழ்ப்பாணம்.செப்.28

யாழ்.தொழில்நுட்ப கல்லூரியின் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 9.30 மணிக்கு கண்டனப்பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

தாம்முன்வைத்துள்ள கோரிக்கைகளை விரைவாக நிறைவேற்றி கற்றல் செயற்பாடுகள் நடைபெறுவதற்கு ஆவன செய்யுமாறு கோரி இந்தப்பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கல்லூரி அதிபர், சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர், யாழ்.அரச அதிபர் ஆகியோரிடம் பேரணியில் மகஜர்களை கையளிக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

கல்லூரியின் குறைபாடுகள், முறைகேடுகள் தொடர்பாக விசாரணை நடத்த குழுவை அனுப்புமாறும், விசாரணை முடியும்வரை பதில் அதிபரை நியமிக்குமாறும் கோரி அந்தப்பேரணி ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது என்று ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)

# நாடுகளின் உள்விவகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலகத் தலைவர்கள் முன்னிலையில் சிங்களத்தில் உரையாற்றுகையில் இவற்றைத் தெரிவித்துள்ள் பிரதமர்,பாரிய உயிரிழப்புகளின் மத்தியில் பெறப்பட்ட சமாதானத்தையும், ஸ்திரத் தன்மையையும், பாதுகாப்பையும் விட்டுக்கொடுக்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர்,பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோர் அடங்கிய இலங்கைப் பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைமை வகித்து ஐ.நா.கூட்டத்தொடரில் சென்ற பிரதமர் அங்கு மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் சாசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி நாடொன்றின் உள்விவகாரங்களில் ஐ.நா. தலையிடக்கூடாது என்பதை மதிக்க வேண்டியது அவசியமாகும்.

ஐ.நாவின் சாசனமே எங்கள் அனைவரையும் ஒன்றிணைத்துள்ளதால்- பிணைத்துள்ளதால் - அதுவே எமக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது.

நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடக்கூடாது என்பது எப்போதும் மதிக்கப்பட வேண்டும்.

பாதுகாப்புச் சபை சீர் செய்ய வேண்டும்

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் சீர்த்திருத்தத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

ஜனநாயகத்தன்மை மிகுந்த ஐக்கிய நாடுகள் அமைப்பிற்குள் அதிகளவு ஜனநாயகம், வெளிப்படைத்தன்மை, பதில் கூறும் கடப்பாடு, பன்முகத்தன்மை என்பவற்றை வலுப்படுத்தும் விதத்தில் இது அமையவேண்டும்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா குறிப்பிட்டுள்ளபடி, எதிர்காலத்திற்கு அடிப்படையான நான்கு தூண்களைப் பின்பற்றுவதற்கான நடவடிக்கைகள் அவசியம்.

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை இலங்கை அரசு விரைவில் மீள்குடியேற்றும்.

விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து மீட்கப்பட்ட மக்களின் உடனடி மனிதாபிமானத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே அரசின் முக்கிய - முன்னுரிமையாகவுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் எமது சர்வதேச சகாக்களின் ஒத்துழைப்புடனேயே முன்னெடுக்கப்படும்.

பாரிய மனித உயிரிழப்புகளுக்கு மத்தியில் நாம் மீண்டும் அடைந்துள்ள ஸ்திரத்தன்மையையும், பாதுகாப்பையும் விட்டுக்கொடுக்க முடியாது. குறிப்பாக பல முன்னாள் விடுதலைப்புலிப் போராளிகள் இடம்பெயர்ந்தவர்களுடன் கலந்துள்ளனர் என்பதால் இதுகுறித்து நாம் அவதானமாக இருக்கவேண்டும்.

மனித உரிமைகள், மனிதாபிமானத் தராதரங்கள் விடயத்தில் சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் கொழும்பு அர்ப்பணிப்புடன் உள்ளது.

மேலும் தேசிய நல்லிணக்கத்தை அடைவதற்கான உள்நாட்டுச் செயற்பாடுகளையும் கொழும்பு முன்னெடுக்கும்.

பயங்கரவாத அமைப்புகளின் செயல்களைத் தடுக்க ஒருங்கிணைந்த நடவடிக்கை தேவை

சர்வதேச சமூகம் பயங்கரவாத அமைப்புகளின் பலதரப்பட்ட குற்றச் செயல்களைத் தடுபதற்கு உறுதியான- நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

பயங்கரவாதத்திற்கு எதிரான பிரகடனத்திற்கு இறுதிவடிவம் கொடுக்க வேண்டும்.

நடுக்கடலில் கப்பல்களை நிறுத்தி, சோதனையிடுவதற்கான தற்போதைய சர்வதேச சட்டங்களை மீளாய்வு செய்ய வேண்டும்.

விடுதலைப்புலிகளுக்கான பெருமளவு நிதி, வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் பலவகைக் குற்றச்செயல்கள் மூலமே பெறப்பட்டுள்ளது.

இலங்கையில் இவ்வருடம் மிக முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. இது நாட்டிற்கு புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் அளித்துள்ளது.

பயங்கரவாதம் என்பது எல்லை கடந்தது என்பதுடன், சர்வதேசப் பிரச்சினை என்பதால்,எமது வெற்றி இலங்கைக்கு மாத்திரம் சமாதானத்தையும், பாதுகாப்பையும் கொண்டு வரப் போவதில்லை. உலகில் அனைத்து நாடுகளுக்கும் இது சாதகமாக அமையும்- என்றார். (அ-சி)

# இந்து மாமன்ற நிலையத்தின் நவராத்திரிக் கலை விழா இன்று

யாழ்ப்பாணம், செப்.28

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ். பிராந்திய நிலையம் ஏற்பாடு செய்துள்ள நவராத்திரி கலை விழா இன்று மாலை 5.30 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளரான ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த ரிஷி தொண்டுநாத சுவாமிகளும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் கலந்து கொள்வர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

இந்நிகழ்வில் தெல்லிப்பழை துர்க்கா மகளிர் இல்ல மாணவிகளின் பத்திப்பாடல் இசை, திருமதி வாசஸ்பதி ரஜீந்திரனின் இசைக்கச்சேரி, திருமதி சிவசக்தி கணேசநாதனின் மாணவிகளின் நடன நிகழ்ச்சி ஆகியன இடம்பெறவுள்ளன.

# நவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்.செப்.28

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீஅற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 9.30 மணியளவில் வாணி விழாவும் அதனைத்தொடர்ந்து குட்டிசுட்டி பாலர் பாடசாலை ஆரம்ப விழாவும் நடைபெற உள்ளன. (1)

* * *

யாழ்ப்பாணம்.செப்.28

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் வாணி விழா நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறும். (203-224)

* * *

யாழ்ப்பாணம்.செப்.28

நீர்வேலி தெற்கு இந்து தமிழ்கலவன் பாடசாலையில் வாணி விழா நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை காலை இடம்பெறும். (203-224)

* * *

யாழ்ப்பாணம்.செப்.28

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் விஜயதசமி விழா இன்று மு.ப 10 மணிக்குக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழா விற்குப் பிரதமவிருந்தினராக அமெரிக்க ஹவாய் தீவு ஆதீன முதல்வர் தொண்டு நாத சுவாமிகள் கலந்து கொள்வார். (7)

* * *

யாழ்ப்பாணம்.செப்.28

தெல்லிப்பழை மகஜனாக்கல்லூரியின் வாணி விழா, கலைநிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு கல் லூரியின் பாவலர் துரையப்பா பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஓய்வுபெற்றபதில் அதி பர் திருமதி கலாதேவி பொன்னம் பலம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (7)

ஜதிலயா
ஜதிலயாவின் நவராத்திரி விழா கலை அளிக்கை 2009க்கு வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்
ஜதிலயா குழுவினரின் ஓவியப் படைப்புக்களின் காட்சிகள் தொடர்ந்து7 நாட்களுக்கு நடைபெறும். பாடசாலை மாணவர்கள் முன் அனுமதி பெற்று வரவும்.
விஜயதசமியாகிய இன்று புதிய மாணவர்களின் அனுமதி மதியம் 12 மணியிலிருந்து ஏற்கப்படும்.
வகுப்புக்களின் விபரம் -
பரத நாட்டியம், மோஹினியாட்டம், ஓவியம், வாய்ப்பாட்டு, மிருதங்கம்
ஓவிய வகுப்புக்களுக்குத் தகுதியுள்ள உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் அதற்கு மேற்பட்ட தரத்தில் உள்ளவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.
தொலைபேசி இலக்கம் :077 6104992
E.mail - jathilayah@gmail.com

தவறிவிட்டது
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைச் சேர்ந்த மகாதேவன் சிவயோகேஸ்வரி என்பவருடைய அடையாள அட்டை (505984951V)தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் T.P யுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். T.P : 0213215839,0776094733

விற்பனைக்கு
எங்களிடம் பின்வருவன விற்பனைக்குண்டு.
1.தரமான கறுப்பு,வெள்ளை எள்ளு
2.Empty 5 play காட்போட்பெட்டி
3.DELPI Lock heed Brack and clutch oil (fluid)
தொடர்பு :- சிவா பிறதேர்ஸ்,
205, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
T.P :021 222 5497

ELATE Computer System
யாழ் குடா நாட்டில் மிக குறைந்த விலையில் தரமான
Dell Branded Pc (Recondition)
. 2.8 Intel Processor
. 512 mb Ram
. 40 GB HD
. "17" Flat Monitor
. DVD Reador, CD Writer
26000/=
Cam Coder
JVC (Japan)
With 30GB Hard Disk
Tuch Screen
45000/=
Sam Sung Laptop
. 2.0 Dual Core
. 160 GB HD
. DVD R/W
. Web Cam,BlueTooth
95000/=
Computer repairing mobile Service T.P 0779235804
T.P no 0217451085
Hot line 0779235804 , 0715355059
E-mail Address johnsonjmp@gmail.com
Elate Computer System
360/8 Catholic Press Complex
Main Street, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா அகதிகளை மீண்டும் பார்வையிட பிரிட்டிஷ், பிரெஞ்சு அமைச்சர்கள் விருப்பம்

கொழும்பு, செப். 28

இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களின் நிலைமைகளை நேரில் மதிப்பிடுவதற்காக பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர்கள் மீண்டும் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கு விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில் பங்குபற்றச் சென்றிருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவை அங்கு சந்தித்துப் பேசிய சமயமே அவர்கள் இருவரும் இந்த விருப்பத்தை வெளியிட்டிருக்கின்றனர். இந்தத் தகவலை இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டது.

பிரிட்டிஷ், பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர்கள் வன்னி அகதிகளின் நிலைமை மிக மோசமடைந்திருந்த ஏப்ரல் மாதப் பகுதியில் கூட்டாக இலங்கை வந்து அவர்களைப் பார்வையிட்டுச் சென்றனர் என்பது தெரிந்ததே.

மீள் வருகை தொடர்பான அவர்களின் விருப்பம் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட்டும், பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் குச்னரும் இடம்பெயர்ந்தவர்களின் நிலைமை குறித்து மதிப்பிடுவதற்காக மீண்டும் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள விருப்பம் வெளியிட்டனர்.

நியூயோர்க்கில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவை இருவரும் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது முகாம்களிலுள்ள மக்களின் நிலைமை, மீள்குடியேற்றம் மற்றும் அரசின் அரசியல் நிகழ்ச்சித்திட்டம் ஆகியன குறித்து இருவரும் கேள்வி எழுப்பினர்.

வவுனியா முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் வேறு முகாம்களுக்கு மாற்றப்படுகின்றனரா என்பது குறித்தும் அவர்கள் கேள்வி எழுப்பினர். இலங்கை அரசு மீள்குடியேற்றம் தொடர்பாகத் தெரிவித்த கால எல்லையைப் பின்பற்ற வேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்தினர். (அ-சி)

## அறவழி நிலையத்தின் தொழில் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், செப்.28

அறவழி நிலையத்தினர் இளைஞர், யுவதிகளுக்கான தொழில் பயிற்சிகளை எதிர்வரும் ஐந்தாம் திகதி ஆரம்பிக்கவுள்ளனர்.

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் அனுசரணையுடன் மரவேலை, தோல் உற்பத்தி, கணணி வன்பொருள், ஆகிய பயிற்சிகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

நிலைய பயிலகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளஇப் பயிற்சி நெறிகளில் பங்குபற்ற விரும்புவோர்அறவழி செயலகத்தில் விண்ணப்பபடிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## இராணுவத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுவதிகள் சேர்ந்துள்ளனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

கடந்த பல வருடங்களுடன் ஒப்பிடப்படும்போது இத்தொகை ஒரு வரலாற்றுச் சாதனையாகும் எனத் தெரிவித்த பிரிகேடியர் உதய நாணயக்கார, கடந்த ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மூன்று மாதங்களில் 17 ஆயிரத்து 303 பேரும், ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் 4 ஆயிரத்து 872 பேரும் இராணுவத்திற்குப் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என மேலும் தெரிவித்தார்.

கடந்த மே மாதம் பெற்ற யுத்த வெற்றியின் பின்னர் இராணுவத்தில் சேர்வதற்கு இளைஞர்களும், யுவதிகளும் ஆர்வம் காட்டி வருகின்றனர் எனவும் ஆள்சேர்ப்புப் பணி தொடர்ந்தும் நடைபெறுகின்றது என்றும் வருட இறுதிக்குள் 50 ஆயிரம் பேர் இராணுவத்துக்குச் சேர்க்கப்படுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுவதிகள் உட்பட 6,500 பேரின் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்று யாழ். பொலிஸ் சுப்ரின்டென்ட் ஜி.எச்.மாரப்பன 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

500பேரை தெரிவுசெய்து யாழ்மாவட்ட பொலிஸ் நிலையங்களில் இணைப்பதற்கான நேர்முக பரீட்சை இன்று 5 நிலையங்களில் நடைபெற உள்ளது.

நேர்முக பரீட்சைகள் இன்றும் நாளை யும் யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, ஊர் காவற்றுறை, சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய பொலிஸ் நிலையங்களில் நடை பெற இருக்கின்றன என்று பொலிஸ் சுப்ரின்டெண்ட் மாரப்பன மேலும் தெரிவித்தார்.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து பொலிஸ் சேவைக்கு ஆள் சேர்ப்பு நடைபெறவுள்ளது. விரைவில் சப்.இன்ஸ்பெக்டர் பதவிக்கு ஆள் சேர்ப்பு நடத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-1)


**விஜயதசமி அன்று**

பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிநெறிகள் ஆரம்பம்

Kids Programming (Year1-10)
Microsoft Office, Hardware
DTP, Internet E-mail,
AUDIO & VIDEO EDITING
COMPUTERIZED ACCOUNTING, AUTOCAD

இப்பிரிவில் இணையும் மாணவர்களுக்கு விசேட கட்டணச்சலுகை வழங்கப்படும்

Softview Computer College
55, Arasady Road, Jaffna. T.P: 021 2225170



**வீடு விற்பனைக்கு**

யா/சுண்டுக்குளி, சென்ற் ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக றக்கா லேனில், இல.37/1, உள்ள 3 ¾ (மூன்றே முக்காற் பரப்புக் கொண்ட) காணி யும் சகல வசதிகளும் கொண்ட வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 0213737073, 0779232569



**உடன் தேவை - மொழிபெயர்ப்பாளர்கள்**

சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கும் திறமையும் அனுபவமும் உள்ளவர்கள் தேவை. கட்டுரைகள், செய்திகள் மற்றும் துறைசார் ஆவணங்களை மொழிபெயர்ப்பதில் ஆகக் குறைந்தது மூன்று வருட அனுபவம் உடையவர்கள் விரும்பத்தக்கது. தமிழ் மொழிநடை இலகுவானதாகவும் எளிமை மற்றும் நயம் நிறைந்ததாகவும் அமைவது விரும்பத்தக்கது.

முழு நேரமாகவோ பகுதிநேரமாகவோ பணியாற்ற வசதி செய்து தரப்படும்.

கல்வித் தகைமை மற்றும் மொழிபெயர்ப்பு அனுபவங்களைக் குறிப்பிட்டு சிபார்சு செய்யக்கூடிய இருவரிடமிருந்து பெற்ற நற்சான்றிதழ்களுடன் 30.09.2009 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். வயதெல்லை: 58
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

பிரதம ஆசிரியர்,
உதயன் -
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## புலிகளின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொஹான் பீரிஸ் இன்று அமெரிக்கா பயணமாகிறார்.

விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களை எவ்வாறு கையாள்வது என்ற விடயத்திற்காக, அமெரிக்கா இஸ்லாமியத் தீவிரவாதிகளைக் கையாளும் விதம் குறித்து அரசாங்கம் அமெரிக்காவிடம் ஆலோசனை பெறவுள்ளது.

இது குறித்து நீதியமைச்சின் பேச்சாளர் காமினி கொடகண்ட தெரிவித்ததாவது:-

அமெரிக்கா பயங்கரவாத சந்தேக நபர்களை எவ்வாறு கையாண்டது என நாங்கள் ஆராய விரும்புகிறோம்.

குறிப்பாக செப்டெம்பர் 11 தாக்குதல் சம்பவத்திற்குப் பின்னர் அல் - குவைதா அமைப்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் எத்தகைய நடைமுறைக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என அறிய விரும்புகிறோம்.

சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட விடுதலைப் புலி இயக்க உறுப்பினர்களில் சிலர் ஆதாரங்களின் அடிப்படையில் நீதிமன்ற விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவர். ஏனையவர்கள் புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்பப்படுவர்- என்றார்.

இதேவேளை-

கொலை, கடத்தல் போன்ற பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்ட விடுதலைப் புலிகளை விசாரிப்பதற்காக விசேட நீதிமன்றமொன்றை அமைப்பது குறித்தும் அரசு ஆராய்ந்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

1971 கிளர்ச்சிக்குப் பின்னர் ஜே.வி.பி. சந்தேக நபர்களை விசாரிப்பதற்கு உருவாக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழு அல்லது குற்றவியல் ஆணைக்குழுவின் பாணியிலேயே இந்த விசேட நீதிமன்றம் அமையவுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினரின் நிலைமை ஆராயப்பட்டு அவர்கள், பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள், பிணையில் விடுவிக்கப்படக் கூடியவர்கள், புனர்வாழ்வு அளிக்கப் படக்கூடியவர்கள் என மூன்று வகையாகப் பிரிக்கப்படவுள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.


**விஜயதசமி நன்னாளில் ....**

மொழித்திறன் வகுப்புக்கள் ஆரம்பம்

ஆங்கிலம் - 5.30
சிங்களம் - 4.30

தரம் - 5 முதல் 11 வரை

NEW EDUCATION WORLD
ஆனைப்பந்தி
குருகுலம் அருகில்


## தீவுப் பகுதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரை அழைத்து வந்து மீளக் குடியமர்த்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை அப்பகுதியைச் சேர்ந்த மூவாயிரம் பேர் அழைத்து வரப்பட்டுமீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் இத் தகவலைத் தெரிவித்தார்.

தீவுப் பகுதியைச் சேர்ந்த மேலும் 800 பேரை இன்று அழைத்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு தீவுப் பகுதியை சேர்ந்தவர்களை அழைத்து வரு வதை நிறுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அடுத்த முறை குடாநாட்டில் ஏனைய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அழைத்து வரப்பட உள்ளனர். அவர்கள் இடைத்தங் கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, இராணுவத்தினரின் அனுமதி கிடைத்த தும் அவரவர்களின் பகுதிகளில் மீளக் குடியமர்த்தப்படுவர் என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

தீவுப்பகுதிக்கு இதுவரை அழைத்து வரப்பட்டவர்கள் கடற்படையினரின் அனுமதியுடன் மீளக்குடியமர்ந்து விட்ட னர்.

எனினும் தீவுப் பகுதியைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து கைதடியில் உள்ள பல்கலைக்கழக விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே. அவர்களில் பல்கலைக்கழக மாணவர்கள் மட்டும் யாழ். பல்கலைக் கழக நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-1)

## பாதுகாப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டது. இருந்தும் பாதுகாப்பு வரி நீக்கப்படவில்லை. மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. யுத்தம் முடிந்ததும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவோம் என்று ஜனாதிபதி சொன்னார். அந்த வாக்குறுதியை அவர் இன்னும் நிறைவேற்றவில்லை.

பதிலுக்குப் படையினரின் கொடுப்பனவு குறைக்கப்பட்டுள்ளது. தேச நிர்மாண வரி ஒன்று முதல் மூன்று வீதம்வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. பொருள்களின் விலைகளும் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டுக்கொண்டு வருகின்றன.

யுத்தம் முடிவடைந்துள்ளதால் பாதுகாப்புச் செலவும் குறைவடைந்துள்ளது. பாதுகாப்புச் செலவுக்காக ஒதுக்கப்பட்ட நிதியைக்கொண்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கமுடியும்; அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முடியும்.

ஒதுக்கிய நிதியைத் திருடிவிட்டனரா?

இந்த நிதிக்கு என்ன நடந்தது? இதை வீண் விரயம் செய்தவர் யார்? இதை யாரும் திருடிவிட்டனரா? இதில் பொதிந்துள்ள உண்மையை நாட்டுக்கு அரசு அறிவிக்கவேண்டும்.

நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதை விட்டுவிட்டு ஒரு குடும்பம் மாத்திரம் நன்மையடைகிறது. மக்கள் தொடர்ந்தும் பட்டினியில் வாடுகின்றனர்.

நாடு பெற்றுவரும் கடனை அடைப்பதற்காகத் திறைசேரியில் உள்ள தங்கத்தை விற்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. அந்தளவிற்கு அரசு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது.

தற்போது திறைசேரியில் இருக்கின்ற தங்கத்தின் அளவையும் புலிகளிடமிருந்து மீட்டெடுத்த தங்கத்தின் அளவையும் அரசு தெரிவிக்கவேண்டும்.

இந்த மாதிரியான கேள்விகளை நான் கேட்டால் இந்த அரசு என்னைத் தேசத்துரோகி என்கிறது. 'ஜி.எஸ்.பி.பிளஸ்' வரிச்சலுகையைத் தடுக்க நான் அமெரிக்கா சென்று நடவடிக்கை எடுக்கின்றேன் என்றும் அரசு கூறுகிறது. 'ஜி.எஸ்.பி. பிளஸை' வழங்குவது ஐரோப்பிய ஒன்றியம். அதற்கும் அமெரிக்காவுக்கும் எந்தத் தொடர்புமில்லை என்பதை அரசு விளங்கிக்கொள்ள வேண்டும்.

17 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தி நாட்டில் முழுமையான ஜனநாயகத்தை நிலைநாட்டினால் 'ஜி.எஸ்.பி.பிளஸ்' வரிச்சலுகை நீடிப்பதை எவராலும் தடுக்கமுடியாது.

இன்று புலிகள் கொல்லப்பட்டுப் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டாலும் கூட மக்களால் முழுமையான ஜனநாயகத்தை இன்னும் உணர முடியாமல் உள்ளது. அரசு முதலில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டும் - என்றார்.

## புலிகள் தமது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக தெரியவந்துள்ளது என்றும் பாதுகாப் புத்தரப்புக் கூறியுள்ளது.

வெளிநாட்டு நிபுணர்களின் உதவியுடன் அரசாங்கத்தின் கடற்படையை முடக்க விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருந்தனர். ஆனால் கிழக்கு மாகாணம் மீட்கப்பட்டதன் காரணமாக விடுதலைப் புலிகளின் திட் டம் தோல்வியில் முடிந்தது என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்கு நாடுகளில் இருந்து எடுத்துவந்த இயந்திர சாதனங்கள் பின்னர் படையினரின் நடவடிக்கையின்போது வன்னியில் மீட்கப்பட்டன என்று கடற் படை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை ஜப்பானிய நிபுணர்கள் வன்னிக்கு வந்து விடுதலைப்புலிகளுக்கு பயிற்சி அளித்திருந் ததாக தகவல் வெளியாகியிருந்தது தெரிந்ததே. (அ-1)

## முகாம் மக்களை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகதிகளை தங்களுடன் அழைத்துச் செல்வதற்கு உறவினர்களால் கோரப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை கடந்த வாரம் திடீரென ரத்து செய்யப்பட்டது.

குறித்த விண்ணப்பங்களை முறையாகக் கோருவது தொடர்பில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் விண்ணப்ப நடைமுறை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வரப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அகதி முகாம்களில் உள்ள மக்களை, விரும்பிய உறவினர்கள் தங்களுடன் அழைத்துச் செல்லக் கூடிய வகையிலான புதிய நடைமுறை விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது.

அகதிகளை தங்களுடன் தங்க வைத்துக் கொள்ளும் நோக்கில் விண்ணப்பித்த பலரது விண்ணப்பங்களில் குளறுபடிகள் காணப்பட்டன எனவும், இதனால் ஒரே மாதிரியானதும், எளிமையானதுமான விண்ணப்பங்களை அறிமுகப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் தாங்களாகவே விண்ணப்பங்களை தயாரித்துக் கொண்டமையால் இந்தச் சிக்கல் நிலை ஏற்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அகதி முகாம்களில் தங்கியுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களை அடையாளம் காணு[illegible] நோக்கில் விண்ணப்பம் கோரும் நடவடிக்[illegible] ஒத்தி வைக்கப்பட்டது என வெளியான செய்திகளில் உண்மையில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அகதிகளை உறவினர்களுடன் அனுப்பி வைக்கும் திட்டம் ஏன் கைவிடப்பட்டதென்பது குறித்து தமக்கு எதுவும் தெரியாது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

குறித்த நடைமுறை அரச அதிபர் திணைக்களத்தால் ரத்து செய்யப்பட்டது எனவும், இந்த நடவடிக்கைக்கும் பாதுகாப்புத் தரப்பிற்கும் தொடர்பில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


**கோண்டாவிலில்...** WESTERN UNION
உலகெங்கும் இருந்து அனுப்பப்படும் பணத்தை உடனடியாகப் பெற
அஸ்வினி மனி பிளாசா



**பணியாளர்கள் தேவை**

சிட்டை எழுதுநர் - பெண்கள் (Bill Cleark)
உடன் நேரில் வரவும்.

மூர்த்தி கலர் லாப், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்



**பாக்யா இசைப்பயிலகம்**
மணியர்பதி வீதி கொக்குவில் மேற்கு

விஜயதசமி அன்று
இசை, இசைவாத்திய வகுப்புக்கள் ஆரம்பம்
நேரம்: மாலை 3.00 மணி

மிருதங்கம் - திங்கள்: 3.00 மணி, வெள்ளி: 3.00 மணி
சங்கீதம் - செவ்வாய்: 3.00 மணி, வியாழன்: 3.00 மணி
ஓகன் - செவ்வாய்: 4.00 மணி, சனி: 4.00 மணி
வயலின் - புதன்: 4.00 மணி, ஞாயிறு: 3.30 மணி

பாக்யா காகிதாதிகள்
121, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்
தொலைபேசி 021 321 8382



**தகவல் தொழில் நுட்ப ஆளணி மேம்பாட்டிற்கான புதிய செயற்திட்டம்**

தகவல் தொழில்நுட்பத் துறையில் உயர் பங்களிப்பினை வழங்கி வரும் மைக்ரோசொப்ற், சண்மைக்ரோ சிஸ்ரம், சிஸ்கோ போன்ற நிறுவனங்கள் தகுதி வாய்ந்த ஆளணியின் தேவை கருதி கற்கை நெறிகளையும் பரீட்சைகளையும் நாடத்தி அங்கத்துவச் சான்றிதழ்களை வழங்கிவருகின்றன. சர்வதேச தொழிற் சந்தையில் தகவல் தொழில் நுட்பத் துறையில் மேற்குறித்த தகைமை உடையோரே உயர் தொழில்களில் பணிக்கமர்த்தப்படுகின்றனர்.

இக்கற்கை நெறிகள் மூலம் யாழ் மாணவர்களும் பயனுற வேண்டும் என்ற நோக்கில் இல. 324 பலாலி வீதியில் அமைந்துள்ள எம்.சி.எஸ்.(MCS) கணினி நிறுவனம் தற்போது உலகின் முன்னணி நிறுவனங்களின் வலைப்பின்னலுடன் இணைந்துள்ளது. இதனால் எமது பிரதேச மாணவர்களும் நேரடியாக மைக்ரோசொப்ற் (Microsoft), சண்மைக்ரோ சிஸ்ரம் (Sun Micro System), டெல்(DELL), எச்பி(HP), ஓராகிள்(Oragle), ஐபிஎம்(IBM), ஐசிடிஎல்(ICDL) மற்றும் சீமா(CIMA) நிறுவனங்களின் கற்கை நெறியினை இங்கு பயில்வதுடன் மேற்படி நிறுவனங்களின் யாழ்ப்பாணத்தில் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நிலையமாகவும் எம்.சி.எஸ்(MCS) நிறுவனம் விளங்குகின்றது.

தற்போது மூன்றாம் நிலை நாடுகளின் தகவல் தொழில்நுட்ப ஆளணியினை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் எம்.சி.எஸ்(MCS) இனம் காணப்பட்டு, இந்நிறுவனத்தில் மேற்படி நிறுவனங்களின் தகவல் தொழில் நுட்பக்கற்கை நெறியினை பூர்த்தி செய்து அப்பரீட்சைகளில் சித்தியடைவோருக்கு அந் நிறுவனங்களின் பரீட்சைக் கட்டணத்தை முழுமையாகவோ, பகுதியாகவோ மீளளிக்கவுள்ளது.

வெளிநாடுகளில் மாணவர்கள் அதிகூடிய செலவில் பயிலும் இக்கற்கை நெறியினை குறைந்த செலவில் யாழ். மாணவர்களும் பயின்று சிறந்த தகவல் தொழில்நுட்ப வல்லுனர்களாவதற்கு இது ஓர் அரிய சந்தர்ப்பமாகும். (சி/561184)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.09.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org